**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

வெளியீடு : 30-7-2013 Issued : 30-7-2013

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**திங்கட்கிழமை, மார்ச் 25, 2013—தொகுதி 39—எண் 2**

**Monday the 25th March, 2013—Volume 39—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009.**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

11-133

## 25–3–2013

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. இரங்கற்குறிப்புகள்—** | |
| முன்னாள் உறுப்பினர்கள் மறைவு | 77-78 |
| **2. வினாக்கள்—விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 78-121 |
| **3. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| கெயில் இந்தியா நிறுவனம் விவசாய நிலங்களில் எரிவாயுக் குழாய்களைப் புதைப்பதால் விவசாயிகள் பாதிக்கப்படுதல்— | 121-134 |
| *திரு. ப. டில்லி பாபு | 122-124, 132 |
| முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா | 124-125, 133 |
| திரு. நா. இராமகிருஷ்ணன் | 125-126 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 126,133 |
| மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 126-132 |
| திரு. கே. உலகநாதன் | 134 |
| **4. அறிக்கை அளித்தல்—** | |
| தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள்மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கை | 134 |

*பக்கங்கள்*


**5. அரசினர் தீர்மானம்—**

தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள்மீதான உரிமை மீறல் பிரச்சினையில் அவை உரிமைக் குழு அளித்த பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளுதல்— 134-140

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 135-136

*மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி 139-140

**6. வரவு–செலவுத் திட்டம், 2013–2014, பொது விவாதம்** 139-219

திரு. ஆர்.பி. உதயகுமார் 139,140-150

திரு. நா. இராமகிருஷ்ணன் 151-161, 163,

*மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி 151,155, 157,162, 163,165,178

*மாண்புமிகு திருமதி பா. வளர்மதி 153,156, 198,200

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு 159-160,184

*மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம் 160-161

*மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 164

திரு. பி.ஜி. நாராயணன் 164-172

*திரு. க. பாலகிருஷ்ணன் 172-175, 177-181, 184-187

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம் 176, 179-180,191




*பக்கங்கள்*


**6. வரவு–செலவுத் திட்டம், 2013–2014, பொது விவாதம்**

*மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் 181-183, 200-201

திரு. வெ. பொன்னுப்பாண்டி 187-196

*மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி 189

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம் 193,215-216

திருமதி த. இந்திராகாந்தி 196-199, 201-209

திரு. அர. சக்கரபாணி 199,200

திரு. ஜே.ஜி. பிரின்ஸ் 209-219

*மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி 211-213

மாண்புமிகு திரு. பி. தங்கமணி 214

*மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால் 217-218

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால் 219

**7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 220-221


---

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## நந்தன, பங்குனி 12, திருவள்ளுவர் ஆண்டு—2044

## 2013 மார்ச் 25, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி."

எல்லோரும் ஒழுக்கத்தினால் சிறந்த முன்னேற்றம் அடைவர். ஒழுக்கத்திலிருந்து தவறினால் அடையக்கூடாத பெரும் பழியை அடைவர்.

## 1. இரங்கற்குறிப்புகள்

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. கே.வி. வேணுகோபால் அவர்கள் 16—2—2013 அன்றும் மற்றும் திரு. அ.க. அரங்கநாதன் அவர்கள் 28—2—2013 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே.வி. வேணுகோபால் அவர்கள் 1985 முதல் 1988 வரை தளி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்லமுறையில் பணியாற்றினார்.

திரு. அ.க. அரங்கநாதன் அவர்கள் 1977 முதல் 1980 வரை வேலூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காத்தனர்.)*

## 2. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 46, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**46—**

### துணை மின் நிலையம்

***22241—திரு. எம். ரெங்கசாமி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் நகரத்திலுள்ள கருந்தட்டாங்குடி, விளார் ஆகிய பகுதிகளிலுள்ள 33 கி.வோ. துணை மின் நிலையங்களை 110 கி.வோ. துணை மின் நிலையங்களாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் நகரிலுள்ள கரந்தை (கருந்தட்டாங்குடி) துணை மின் நிலையத்தை 12–வது ஐந்தாண்டு பெருந்திட்டத்திலே 110 கி.வோ. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால், விளாரிலுள்ள 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தைத் தரம் உயர்த்த அவசியம் எழவில்லை.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி அவர்கள்.

**திரு. எம். ரெங்கசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி டெல்டா விவசாயிகளுடைய வாழ்வாதாரத்தைக் காப்பாற்றுவதற்காக உச்ச நீதிமன்றம் வரை சென்று சட்டப் போர் நடத்தி, மத்திய அரசைப் பணிய வைத்து, காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிட வைத்து, விவசாயிகளுடைய வாழ்வாதாரத்தை மீட்டுத் தந்த (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளுடைய பாதுகாவலராக என்றைக்கும் வாழ்ந்துகொண்டிருக்கின்ற எங்களுடைய காவிரித் தாய், காவிரி காத்த பொன்னியின் செல்வி மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினை முதலில் தெரிவித்துக்கொண்டு, தஞ்சை தொகுதி, தஞ்சை நகரம் மிகப் பெரிய அளவிலே மக்கள் தொகையால் விரிவடைந்துகொண்டிருக்கின்ற நகரமாக இருக்கின்ற காரணத்தினால், கரந்தை மற்றும் விளார் பகுதிகளிலே மின் அழுத்தப் பிரச்சினையின் காரணமாக சீரான மின்சாரம் கிடைக்காமல் மக்கள் அவதியுறுகின்ற காரணத்தினால், அந்தப் பகுதியில் இருக்கின்ற 33/11 கி.வோ. துணை மின் நிலையங்களை 110/11 கி.வோ. துணை மின் நிலையங்களாகத் தரம் உயர்த்தித் தர அரசு முன்வருமா என்று தங்கள்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருந்தட்டாங்குடியிலும், விளாரிலும் இருக்கின்ற 33/11 கி.வோ. துணை மின் நிலையங்களை, 110/11 கி.வோ. துணை மின் நிலையங்களாகத் தரம் உயர்த்த வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். கருந்தட்டாங்குடியிலே மின் பளு தேவை இருக்கின்ற காரணத்தினாலே, 12–வது ஐந்தாண்டு பெருந்திட்டத்திலே அது சேர்த்துக்

[2013 மார்ச் 25

கொள்ளப்பட்டிருக்கிறது. கருந்தட்டாங்குடியில் 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தினை 110/11 கி.வோ. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்துவதற்கு வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுத்து வருகிறது என்பதை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு இடம் கூடுதலாகத் தேவைப்படுகிறது. தரம் உயர்த்தும்போது தேவைப்படும் கூடுதலான இடத்தைக் கையகப்படுத்துவதற்கு வேண்டிய பணிகளையும் தற்போது அரசு செய்து வருகிறது. தற்போது, தஞ்சாவூர், கருந்தட்டாங்குடியில் 2X8=16 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றிகளுடன் 33/11 கி.வோ. துணை மின் நிலையம் இயங்கி வருகிறது. இதன் மின் உச்சப் பளு 13/1 எம்.வி.ஏ. ஆகும். இந்தப் பகுதியில் மின் பளு தேவையை நிறைவு செய்ய, கருந்தட்டாங்குடியில் உள்ள மின் நிலையத்தை 110/11 கி.வோ. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த, கூடுதல் நிலம் தேவைப்படுகிறது. தக்கார், காஞ்சி மடம் மற்றும் செயல் அலுவலர், பங்காரு காமாட்சியம்மன் கோயில், தஞ்சாவூர் அவர்களுக்குச் சொந்தமான சர்வே எண் 4402/1 மற்றும் 4402/2—ல் உள்ள 4.56 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டுள்ளது. நிலம் ஒதுக்கீடு பெறத் தேவையான அனுமதி கோரப்பட்டுள்ளது. அனுமதி பெறப்பட்டவுடன், தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் இருப்பின், அந்த நிலம் கையகப்படுத்தப்படும். நிலம் கையகப்படுத்தப் பட்டவுடன், அனுமதி பெறப்பட்டு, உடனடியாகப் பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால், விளாரில் 1X8=8 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின் மாற்றியுடன் 33/11 திறன் கொண்ட மின் நிலையம் இயங்கி வருகிறது. இதன் அதிகபட்ச மின் பளு தேவையே 4/2 எம்.வி.ஏ.—தான். ஆனால், 8 எம்.வி.ஏ. திறன்கொண்ட மின் மாற்றி அங்கு இருப்பதால், இதனைத் தரம் உயர்த்த வேண்டிய அவசியம் எழவில்லை. ஒருவேளை பிற்காலத்தில், விளார் பகுதியில், மின் பளு தேவை அதிகரிப்பின், அதற்கேற்ப அதனைத் தரம் உயர்த்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி அவர்கள்.



2013 மார்ச் 25]

**திரு. எம். ரெங்கசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரந்தை பகுதியிலே புதிய துணை மின் மாற்றியை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், தஞ்சை தொகுதியின் வளர்ச்சிக்காக பல்வேறு சலுகைகளையும், திட்டங்களையும் அறிவித்துக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 47, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**47—**

## தொகுப்பு வீடுகள்

***19682—திரு. வி. சோமசுந்தரம்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதியில் பழுதடைந்துள்ள பழைய தொகுப்பு வீடுகளைச் செப்பனிட நிதி ஒதுக்கீடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்திய விடை. (அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/—க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 மார்ச் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.

**திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய விடிவெள்ளி, ஏழையெளிய மக்களுடைய நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிக்கொண்டிருக்கக்கூடிய, காவிரியை மீட்டெடுத்த எங்கள் காவியத் தலைவி, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) காஞ்சிபுரம் தொகுதிக்குட்பட்ட ஓழையூர், கொட்டிவாக்கம், முட்டவாக்கம், மேல்ஒட்டிவாக்கம், பெரும்பாக்கம், சிறுபாக்கம், வேலியூர், விசார் போன்ற பல்வேறு கிராமங்களில் கட்டப்பட்டுள்ள பழைய தொகுப்பு வீடுகள் மிகவும் பழுதடைந்துள்ளன. அதன் மேல்தளங்களில் விரிசல் ஏற்பட்டு மழைக் காலத்தில் ஒழுகும் நிலையில் உள்ளன. அதைச் சரி செய்வதற்கு நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு ஆலோசனைகளை வழங்கி, அதற்கான நிதியை ஒதுக்கித் தந்ததோடு, சட்டமன்ற உறுப்பினர் நிதியிலே இருந்தும் அதை சரி செய்வதற்கு உத்தரவிட்ட, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தொகுதி மக்களின் சார்பாகத் தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

முற்பகல் 10—10

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே பல்லாயிரக்கணக்கான தொகுப்பு வீடுகள் தொடக்கக் காலத்திலிருந்து, அதாவது மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலே இருந்து பழுதடைந்து கிடக்கின்றன. இவ்வளவு வீடுகளும் குறிப்பாக தலித் மக்கள் குடியிருக்கக்கூடிய பகுதிகள் புனரமைக்கப்படாமல் கிடக்கின்றன. அவர்களால் புனரமைக்க முடியவில்லை. அது அரசுக்கும் தெரியும். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். கடந்த காலங்களில், அதற்கென்று



2013 மார்ச் 25]

ஒரு குறிப்பிட்ட தொகையை அரசு ஒதுக்கி வந்தது. அதை நிறுத்தியதனுடைய விளைவுதான் இப்போது அந்த மக்களால் எதுவும் செய்ய முடியவில்லை. சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, 25 ஆயிரம் ரூபாய் வழங்குவதனால் மட்டும் இதை செய்துவிட முடியாது. சட்டமன்ற உறுப்பினர்கள் ஏராளமான நிதியொதுக்கீடு பெறவேண்டியிருக்கிறது. இதையும் இணைக்கின்றபோது சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்கள் தொகுதியில் மிகப்பெரிய சிரமத்தை சந்திக்க வேண்டியதிருக்கும். வாக்களித்த மக்களுக்கு பதில் சொல்ல முடியாத நிலை ஏற்படும். ஓரளவு சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கொடுக்கலாம். ஆனால், அதுமட்டும் போதுமானதல்ல. தயவு செய்து அரசு இதை பரிசீலித்து, ஏராளமான வீடுகள் பழுதடைந்துள்ள நிலையில், கடந்த காலத்தைப் போல, கூடுதலான நிதியை ஒதுக்கித்தருவதன் மூலம்தான் அந்த மக்களைப் பாதுகாக்க முடியும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கோரிக்கையை வைத்துள்ளார்கள். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியில் வரையறுக்கப்படாத வகையில் நிதி இருக்கிறது. முடிந்த வரையில் அந்த நிதி முழுவதையும் பயன்படுத்தினால் ஓரளவுக்கு அந்த வீடுகள் பழுதுபார்க்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 மார்ச் 25

**48—**

## வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள்

*7898—**திரு. கே. தங்கவேல்:**

*மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தாராபுரம், கொட்டாப்புளியம் பாளையத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தாராபுரம், கொட்டாப்புளியம் பாளையத்தில் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் வீடுகள் கட்ட அரசுமூலம் இதுவரை நிலம் ஏதும் தேர்வு செய்யப்படவில்லை என்பதால் வீடு கட்டும் திட்டம் எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.*

**திரு. கே. தங்கவேல்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 334 குடியிருப்புகள் தாராபுரம், கொட்டாப்புளியம் பாளையத்தில் இருக்கின்றன. அவை வழக்கில் இருக்கின்றன. அந்த வழக்கில் 2008 ஆம் ஆண்டு கோர்ட் தீர்ப்பளித்தும் இன்னும் அந்த வேலைகள் முடியாமல் இருக்கின்றன. அதில் தலையிட்டு, அந்த 334 குடியிருப்புகளுக்கு விற்பனைப் பத்திரம் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாராபுரத்தில் சிறிய மற்றும் நடுத்தர வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் 334 வீடுகள் பகுதி 1, 2, 3 திட்டப்*



2013 மார்ச் 25]

*பகுதியில் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பணம் கட்டியவர்கள் அனைவருக்கும் விற்பனைப் பத்திரம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.*

**திரு. கே. தங்கவேல்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணம் கட்டியவர்களுக்கு விற்பனைப் பத்திரம் வரவில்லை என்று தகவல் இருக்கிறது. அங்கு ஒரு சென்ட் நிலம் 40 ரூபாய்க்கு வாங்கியிருக்கிறார்கள். 2008 முதல் வட்டியுடன் கட்டச் சொல்லி, கோர்ட் தீர்ப்பு அளித்திருக்கிறது. ஆனால், இதுவரையில் விற்பனைப் பத்திரம் வழங்கப்படவில்லை என்பதுதான் தகவலாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணம் கட்டியும் யாருக்கு வழங்கப்படவில்லை என்பதை பெயர் மற்றும் விவரத்துடன் கூறினால், உடனடியாகப் பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.*

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி தொகுதியிலே நிலங்களின் விலை அதிகமாக இருக்கின்ற காரணத்தால், பெரிய முதலீடு செய்து வீடுகள் கட்டிக்கொள்ள இயலவில்லை. இதனைக் கருத்திலேகொண்டு, அங்கே வீட்டு வசதித் துறையின்மூலமாக வீடுகளைக் கட்டித்தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தின்மூலமாக அந்தப் பகுதியில் வாழ்கின்ற மக்களுக்குத் தேவையிருப்பின், நிலங்கள்*

[2013 மார்ச் 25

கண்டறியப்பட்டு, கையகப்படுத்தப்பட்டு, அந்தத் திட்டத்திற்கு வரவேற்பு இருந்தால், நிச்சயமாக ஆரணி பகுதியில் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10—15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 49, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**49—**

## அங்கன்வாடி மையம்

***15888—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, கத்தலூர் கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையத்தினைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், கத்தலூர் ஊராட்சி, கத்தலூர் கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையம் 1999 ஆம் ஆண்டு முதல் அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையக் கட்டடத்தில் மேல்கூரை, தரை தளம் மற்றும் சுவர் பழுதடைந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அங்கன்வாடி மையக் கட்டடங்களில் உள்ள பெரிய பழுதுகளை நீக்க ரூ.39 கோடியே 14 இலட்சமும், சிறிய பழுதுகளை நீக்க ரூ.52 கோடியே 84 இலட்சமும் ஒதுக்கீடு செய்து, ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையில், விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், கத்தலூர் ஊராட்சி, கத்தலூர் கிராமத்திலுள்ள இரண்டு அங்கன்வாடி மையங்கள் ரூ.90,000/- செலவில் சீர்செய்யப்பட்டு ஜனவரி 2013 ஆம் ஆண்டு



2013 மார்ச் 25]

முதல் நல்லமுறையில் இயங்கி வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊற்றுப் பெருக்காய் உள்ளங்களை நனைத்து, இல்லங்களை மகிழ்விக்கின்ற வரியே இல்லாத பட்ஜெட்டை வாரி வழங்கிய இதய தெய்வம் (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். இன்றைக்கு தமிழகத்தில் இருக்கக்கூடிய அங்கன்வாடி மைய குழந்தைகளுக்கெல்லாம் 13 வகையான கலவை சாதத்தை அறிமுகப்படுத்திய வரலாற்றுச் சிறப்புமிக்க ஈகைத் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். விராலிமலை சட்டமன்றத் தொகுதி, கத்தலூர் கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையத்தினைச் சீரமைக்க, நிதி ஒதுக்கி, அந்தப் பணியினை மிகச் சிறப்பாக முடித்ததற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பில் கோடானுகோடி நன்றிகளையும், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியையும் தெரிவித்துக்கொண்டு, விராலிமலை தொகுதியில் உள்ள மற்ற அங்கன்வாடி மையங்களையும் இதுபோன்று சீரமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா என்று கேட்டு, நன்றி கூறி அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விராலிமலையில் உள்ள மொத்த அங்கன்வாடி மையங்களின் எண்ணிக்கை 142. அரசு கட்டடங்களில் இயங்கி வருபவை 112. வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருபவை இரண்டு. வாடகை இல்லாத கட்டடங்களின் மூலமாக இயங்கி வருபவை 28. பெரிய பழுது நீக்கம், சிறிய பழுது நீக்கம் செய்ய அரசால் கருத்துரு பெறப்பட்ட மையங்களின் எண்ணிக்கை 57. இவற்றில் விராலிமலை தொகுதியில் உள்ள மையங்களாகக் கண்டறியப்பட்ட 37 மையங்களில், சீரமைப்புப் பணிகள் முடிந்துவிட்டன. மேலும், 20 மையங்களின் சீரமைப்புப்

[2013 மார்ச் 25

பணிகள் மிக துரிதமாக நடைபெற்று வருகின்றன என்பதைத் தங்களின்மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 50, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**50—**

## மாணவர் விடுதி

*__15280—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:__

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் தொகுதி, இராமநாதபுரம் சேதுபதி அரசு கலைக் கல்லூரியில் மாணவர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இராமநாதபுரத்தில் உள்ள சேதுபதி அரசு கலைக் கல்லூரியில் 1,804 மாணவ, மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றார்கள். அந்தக் கல்லூரியில் ஆதி திராவிடர் நல விடுதியில் 138 மாணவர்களும், பிற்படுத்தப்பட்டோர் நல விடுதியில் 56 மாணவர்களும் விடுதியில் தங்கி, கல்வி பயின்று வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேதுபதி அரசு கலைக் கல்லூரியில் மாணவியர் விடுதி கட்டுவதற்காக பல்கலைக்கழக மானியக் குழு, அதாவது U.G.C. சில ஆண்டுகளுக்கு முன்பு நிதி ஒதுக்கீடு செய்தும், இன்னும் கட்டப்படவில்லை. அதைக் கட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.



2013 மார்ச் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இக்கல்லூரியுடன் இணைந்த மாணவியர் விடுதி ஒன்று கட்டுவதற்காக, U.G.C. (University Grants Commission) மூலமாக 11–வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்த மதிப்பீடு குறைவாக இருக்கின்ற காரணத்தினால், திருத்திய வரைபடம் University Grants Commission–க்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே, 30 இலட்சம் ரூபாய் அந்தக் கல்லூரிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள 30 இலட்சம் ரூபாயைப் பெறுவதற்கு திருத்திய மதிப்பீடு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தப் பணம் வந்த பின்பு உடனடியாகக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் அமைந்திருக்கின்ற அரசினர் மகளிர் கல்லூரியில் நான் வைத்த கோரிக்கையை ஏற்று, இந்த அரசு இரண்டு முதுகலைப் பாடங்களுக்கும், இரண்டு பட்டப் பாடங்களுக்கும் ஒப்புதல் கொடுத்து வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன. ஆனால், அந்தக் கல்லூரியிலே போதுமான வகுப்பறைகள் இல்லை. மரத்தடியிலே பாடம் நடத்தக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, இராமநாதபுரம் அரசு மகளிர் கல்லூரிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 மார்ச் 25

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இராமநாதபுரம் அரசு மகளிர் கல்லூரிக்கு கூடுதலாக பாடப்பிரிவு வேண்டுமென்று கோரிக்கை வைத்திருந்தார்கள். அதன் அடிப்படையில், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் அரசு, அந்தக் கல்லூரிக்கு கூடுதல் பாடப் பிரிவை ஒதுக்கித் தந்தது. அதோடு மட்டுமல்ல, தமிழகத்தில் இருக்கக்கூடிய 62 கல்லூரிகளுக்கும், எந்தெந்தக் கல்லூரிகளுக்குக் கூடுதல் பாடப் பிரிவு வேண்டுமென்று கேட்கிறார்களோ, அந்தக் கல்லூரிகளுக்கெல்லாம், இதுவரையில் இல்லாத அளவிற்கு, 400 பாடப் பிரிவுகளை கூடுதலாக மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் அரசு ஒதுக்கித் தந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், அது மகளிர் படிக்கிற கல்லூரி என்பதால், அங்கே அதற்குத் தேவையான கட்டட வசதி வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தன்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மகளிர் கல்லூரிக்கு சிறப்புச் சலுகை அளித்து, அதைக் கட்டிக்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். சிவகங்கை மாவட்டத்தில் உள்ள சிவகங்கை அரசு இராஜா துரைசிங்கம் கலைக் கல்லூரி மிகவும் புகழும், பெருமையும் வாய்ந்த கல்லூரிகளில் ஒன்றாகும். அந்தக் கல்லூரி விடுதியில் கிட்டத்தட்ட 100 அறைகள், கட்டப்பட்டன. இப்போது அவை முறையாகப் பராமரிக்கப்படாமல் பயன்படுத்தப்படாத நிலையில் இருக்கின்றன. அந்தக் கல்லூரி விடுதியில் பல அமைச்சர்கள், பல சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் படித்திருக்கின்றார்கள். அந்தக் கல்லூரி மிகவும் புகழ்வாய்ந்த, ஏழையெளிய மாணவர்கள் படிக்கின்ற மேன்மைபெற்ற கல்லூரியாகும். பழமை வாய்ந்த அந்தக் கல்லூரியினுடைய விடுதி அறைகளைச் சீரமைத்து பயன்படுத்துவதற்கு சிறப்பு நிதி ஒதுக்க, மாண்புமிகு



2013 மார்ச் 25]

அம்மாவினுடைய அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கல்லூரி விடுதி அறைகள் சீரமைக்கப்பட வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார். அவற்றை சீரமைப்பதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 51, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**51—**

## குளிர்ப்பதனக் கிடங்கு

*__4439—திரு. கு.வ. மார்க்கண்டேயன்:__

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளாத்திகுளம் தொகுதியில் மிளகாய் மற்றும் உணவுத் தானியங்களுக்கென குளிர்ப்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் தொகுதியில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் 2011–2012–ன்கீழ் விளாத்திகுளம் ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் மிளகாய் வற்றல் மற்றும் காய்கறிகளுக்கென 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிப்பதன சேமிப்புக் கிடங்கு அமைக்க ரூபாய் 100 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் முடிவுற்று, தற்போது மின் இணைப்பு வழங்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகள் முழுமையாக முடிவுற்றதும், இக்கிடங்கு,

விவசாயிகள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும். பொதுவாக, தானியங்கள், குளிர்ப் பதனக் கிடங்கில் சேமிக்கப்படாததால் அதற்கென குளிர்ப்பதனக் கிடங்கு அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன் அவர்கள்.

**திரு. கு.வ. மார்க்கண்டேயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருப்பதைக் கொடுப்பவர் வள்ளல். இல்லாததையும், இயன்றதையும், முடியாததையும், வருண மழையே இல்லாத இந்தக் காலக்கட்டத்திலும், டெல்டா பகுதிகளில் 3 போகமும் விளையாத இந்த நேரத்திலும், தமிழக மக்களுக்கெல்லாம், அரிசி வாங்குகிற, ரேஷன் அட்டை பெற்றிருக்கிற அத்தனை பேருக்குமே, 20 கிலோ அரிசியை அள்ளி வழங்கிக் கொண்டிருக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) மனித தெய்வம், இல்லாததைக் கொடுக்கும் தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நடமாடுகிற மனித தெய்வமாக நமக்கெல்லாம் அள்ளி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அம்மா அவர்களை வணங்கி, தமிழகத்திலே மிக அதிகமாக மிளகாய் விளைகிற விளாத்தி குளத்தில்தான் ஏறக்குறைய 1 இலட்சம் ஏக்கருக்குமேல் மானாவாரியாக மிளகாய் பயிரிடப்படுகிறது. அந்த இடத்தில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய அரசு, 100 இலட்சம் ரூபாய் செலவில், மிளகாய் வற்றல் பதனிடக்கூடிய குளிர்ப்பதனக் கிடங்கை அமைத்திருக்கிறார்கள். விரைவில் அது பயன்பாட்டுக்கு வர இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன செய்திக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாய மக்கள் மிகவும் அதிகமாகப் பயன்பெறுகிற அந்த இடத்தின் அருகில் துறைமுகமும் இருக்கிறது. 50 கிலோ மீட்டர் பகுதியில் அமைந்துள்ள அந்தத் துறைமுகப் பகுதியிலிருந்து ஏற்றுமதிக்குப் பயன்படுகிற அளவில், மிக விரிவான, மிகப்பெரிய ஒரு குளிர்ப்பதனக் கிடங்கை அமைத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டு, மாண்புமிகு அம்மாவினுடைய அரசுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.





முற்பகல் 10–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே காய்கறிகளின் வரத்து எவ்வளவு இருக்கிறது என்பதை அறிந்து, தேவை இருப்பின், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கை ஏற்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 52, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**52—**

### சொந்தக் கட்டடம்

***1170—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, சிங்களாந்தி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதியில் உள்ள சிங்களாந்தி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் தற்போது ரூ.2,000 மாத வாடகையில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இச்சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட, அரசு நிலம் அல்லது புறம்போக்கு நிலத்தை ஒதுக்கித் தர மாவட்ட ஆட்சித் தலைவரிடம் முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன. அடிமனை ஒதுக்கீடு செய்யப்பட்டபின், இச்சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 மார்ச் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்களாந்தி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி சிங்களாந்தி, நெடுமடம், தேவமாள்பட்டினம், திருத்துறைப்பூண்டி நகரம் ஆகிய நான்கு வருவாய்க் கிராமங்களுக்குச் சொந்தமான 3,362 உறுப்பினர்கள் கொண்ட மிகப் பெரிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியாகும். இந்த வங்கிக்கு கட்டடம் கட்டுவதற்கு கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்கு முன்னால் 33 சென்ட் இடம் வாங்கப்பட்டிருக்கிறது. அந்த இடம் ஒழுங்குமுறை விற்பனைக் கூட வளாகத்தில் இருக்கிறது. ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குச் சொந்தமான இடத்தில் சுற்றுச்சுவர் எழுப்பியதால், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குச் செல்ல வழி இல்லாத காரணத்தினாலே, அந்தக் கட்டடம் கட்டப்படாமல் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திலிருந்து சிங்களாந்தி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குச் செல்லக்கூடிய அந்தப் பாதைக்கு ஏற்பாடு செய்தால், அந்தக் கட்டடத்தைக் கட்ட முடியும் என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைச் செய்து தருவாரா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல், 33 சென்ட் இடம், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு உரிய இடம் இருக்கிறது. அந்த இடம் ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் இருப்பதனால், அங்கு சென்று வருவதற்குப் பாதை இல்லை என்பதை நீங்களே சொல்லிவிட்டீர்கள். அதற்குள் இருப்பதனால், அதை மாற்றிக் கொடுப்பதற்கோ அல்லது அந்த இடத்தைக் கிரயம் செய்வதற்கோ ஆணையாளருடைய ஒப்புதல் தேவை. ஆனால், அமைச்சருக்கோ அல்லது ஆணையாளருக்கோ அதிகாரம் இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியினுடைய தனி அலுவலர் பிறிதொரு அரசு இடம் கொடுப்பதற்கு நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அனுமதி கேட்டிருக்கிறார். அரசு இடமோ அல்லது அரசு புறம்போக்கு இடமோ கிடைத்தபின், உடனடியாகக் கட்டடம் கட்டிக்கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2013 மார்ச் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்குச் சொந்தமான இடத்தில், அவர்கள் காம்பவுண்ட் சுவர் கட்டியிருக்கின்றார்கள். சிங்களாந்தி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு கட்டடம் கட்ட வாங்கிய இடம் அதற்கு அருகில் இருக்கிறது. ஆகவே, இந்தப் பாதையை அவர்கள் கொடுப்பார்களேயானால், நிச்சயமாகக் கட்டடம் கட்டுவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இல்லமே அந்தச் சங்கத்திற்கு எதிரே இருக்கிறது. எனவே, அவரே முயற்சி எடுத்து, அரசினுடைய அனுமதியோடு, ஆணையாளருடைய அனுமதியைப் பெற்றுத் தந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொரு தகவல். அதி விரைவிலே மாவட்ட ஆட்சியர் இடம் கொடுப்பதாகக் கூறி இருக்கின்றார். இது போன்று பல்வேறு இடங்களில், இடம் இல்லாமல் வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்ற அத்தனை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கும் நம்முடைய பதிவாளர் அவர்கள் இடம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்று மாவட்ட ஆட்சியர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பி இருக்கின்றார்கள். எனவே, இடங்கள் கிடைத்தவுடன், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 மார்ச் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 53, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**53—**

## புறவழிச் சாலை

*__4849—திருமதி ஆர். சாந்தி:__

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, தண்ணீர்பந்தல்காடு முதல் இராசிபுரம் தொகுதி, பொன்குறிச்சி வரை புறவழிச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேந்தமங்கலம் தொகுதி, நாமகிரிப்பேட்டை பேரூராட்சி, தண்ணீர்பந்தல்காடு முதல் இராசிபுரம் தொகுதி, பொன்குறிச்சி வரை புறவழிச் சாலை அமைக்க இரண்டு கட்டமாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.

முற்பகல் 10—30

**திருமதி ஆர். சாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பணி நடந்துகொண்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். உண்மைதான். ஆனால், இராசிபுரம் புறவழிச் சாலைக்கு கடந்த 2001—2006—ல் தண்ணீர்பந்தல்காட்டுப் பகுதியிலிருந்து ஒடுவங்குறிச்சி வழியாக பொன்குறிச்சியில்



2013 மார்ச் 25]

சேருமாறு திட்டம் போடப்பட்டது. தற்போதைய மாண்புமிகு சபாநாயகர் அவர்கள், துணை சபாநாயகராக இருந்தபோது 22—6—2011—ல் அதனை தொப்பப்பட்டி, ஜேடர்பாளையம் வழியாக மாற்றியமைக்கக் கோரி நெடுஞ்சாலைத் துறையினரிடம் கடிதம் கொடுத்துள்ளார். இந்தச் செயல்பாட்டினால் 4 கி.மீ. அதிகத் தொலைவிலும், சுற்றி வளைத்தும், பொதுமக்கள் விரும்பாத வகையில் அமைக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதுசம்பந்தமாக பொதுமக்கள் போராட்டங்களை அறிவித்து, காவல் நிலையம் மற்றும் அனைத்து அதிகாரிகளுக்கும், எனக்கும் புகார் மனு கொடுத்துள்ளனர். எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சிக் காலத்தில், 2001—2006—ல் போடப்பட்ட அந்தத் திட்டத்தையே மீண்டும் செயல்படுத்திக் கொடுக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராசிபுரம் புறவழிச் சாலையானது மல்லியக்கரை, இராசிபுரம், திருச்செங்கோடு, ஈரோடு மாநிலச் சாலைகளில் கி.மீ.36/8—ல் காக்காவேரியில் ஆரம்பித்து, அப்பநாயக்கன்பாளையம், ஏ.கே. சமுத்திரம், குருசாமிபாளையம் வழியாக அதே சாலையில், கி.மீ.51/2—ல் பொன்குறிச்சியில் முடிவடைகிறது. நாமகிரிப்பேட்டை மற்றும் சீராப்பள்ளி ஆகிய பேரூராட்சிப் பகுதிகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும்பொருட்டு, மல்லியக்கரை, இராசிபுரம், திருச்செங்கோடு, ஈரோடு சாலையில், கி.மீ.36/8—ல், காக்காவேரி கிராமத்தில் இராசிபுரம் புறவழிச் சாலை நேர்பாட்டினை ஆரம்பிப்பதற்குப் பதிலாக, அதே சாலையில் கி.மீ.30/4—ல் தண்ணீர்பந்தல் காட்டிலிருந்து ஆரம்பித்து மோகனூர், நாமக்கல், சேந்தமங்கலம், இராசிபுரம் சாலையில் கி.மீ. 52/4—ல் அப்பநாயக்கன்பாளையத்தில் இணைவதற்கு தற்போது ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.

[2013 மார்ச் 25

**திருமதி ஆர். சாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னபடி, தண்ணீர்பந்தல்காட்டிலிருந்து பொன்குறிச்சி வரையிலும் புறவழிச் சாலை அமைக்க வேண்டும் என்பதுதான் அனைவருடைய கோரிக்கையும். ஆனால், 2001–2006–லே, இன்றைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தலைமையிலான ஆட்சியிலே, தண்ணீர்பந்தல்காட்டிலிருந்து பொன்குறிச்சி வழியாக புறவழிச்சாலை அமைக்க ஒரு திட்டம் தீட்டப்பட்டது. இதை கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே மாற்றியமைத்து காக்காவேரியிலிருந்து போடப்பட்டது. இந்தத் திட்டத்திற்காகத்தான் இன்றைய தொழில் துறை அமைச்சர் அவர்களும், முன்னாள் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தினார்கள். 2001–2006–ல் போடப்பட்ட திட்டத்தில் என்ன குறையைக் கண்டீர்கள்? கடந்த ஆட்சியில் ஏன் இந்தத் திட்டத்தை மாற்றியமைத்தார்கள்? 4 கி.மீ. அளவிற்கு இந்தச் சாலை சுற்றி வருகிறது. இப்பொழுது டீசல் விலையும், பெட்ரோல் விலையும் எவ்வளவு ஏறிப்போயிருக்கிறது என்பது அனைவருக்கும் தெரியும். அப்படி இருக்கும் சூழ்நிலையில், ஏன் 4 கி.மீ. சுற்றி வளைக்க வேண்டும்? தாங்கள் இதற்குமுன் தீட்டிய அந்தத் திட்டத்தைத்தான் பொதுமக்கள் விரும்புகிறார்கள். அனைவருடைய கோரிக்கையும் இதுதான். தாங்கள் 2001–2006–ல் தீட்டிய அந்தத் திட்டத்தையே செயல்படுத்துமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமகிரிப்பேட்டை மற்றும் சீராப்பள்ளி ஆகிய பேரூராட்சிப் பகுதிகளில் ஏற்படுகின்ற போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டுதான், அந்த புறவழிச் சாலை அமைக்கப்படுகிறது. இராசிபுரம் புறவழிச் சாலை முதற்கட்டப் பகுதி–1 பணி, கி.மீ.2/8 முதல் 8/8 வரை அப்பநாயக்கன்பாளையம் என்ற கிராமத்தில் ஆரம்பித்து சந்திரசேகரபுரம், அண்ணாபாளையம் வழியாக சேலம்–நாமக்கல் தேசிய நெடுஞ்சாலை எண் 7–ல் கி.மீ.230/4–ல் சென்றடைகிறது.



2013 மார்ச் 25]

இதற்காக 18.802 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டு தற்போது சாலை அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. முதற்கட்டப் பகுதி 2002–க்கான புறவழிச் சாலைப் பணி, கி.மீ.8/8 முதல் 13/675 வரை அமைப்பதற்கு சேலம்–நாமக்கல் தேசிய நெடுஞ்சாலை எண் 7–ல் கி.மீ.230/4–ல் ஆரம்பித்து, குறுக்காபுரம், கல்யாணி 85, ஆர். குமராபாளையம், ஆயப்பாளையம், பிள்ளாநல்லூர் மற்றும் பொன்குறிச்சி கிராமங்கள் வழியாக மல்லியக்கரை, இராசிபுரம், திருச்செங்கோடு, ஈரோடு மாநிலச்சாலை எண் 79–ல் கி.மீ.51/2–ல் சென்றடையும் வகையில், மொத்தம் 13.234 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 54, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**54—**

### நியாய விலைக் கடை

***10988—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, கத்தேரி கிராமம், வளையக்காரனூரிலுள்ள பகுதிநேர நியாய விலைக் கடையை முழுநேரக் கடையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சங்ககிரி தொகுதி, கத்தேரி கிராமம், வளையக்காரனூர் பகுதிநேர நியாய விலைக் கடையை முழு நேரக் கடையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 மார்ச் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி என்னுடைய துணை வினாவை எழுப்புகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கத்தேரி ஊராட்சி, வட்டமலைப் பகுதி மக்கள் 2 கி.மீ. தூரம் நடந்து சென்று சாமியம்பாளையம் நியாய விலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்களை வாங்க வேண்டியுள்ளதால், வட்டமலைப் பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடையை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், சாமியம்பாளையம் தொடக்கக் கூட்டுறவுச் சங்கத்தால் கத்தேரி கிராமத்தில் நடத்தப்பட்டு வரும் வளையக்காரனூர் பகுதிநேர நியாய விலைக் கடையில் தற்பொழுது 513 குடும்ப அட்டைகள் உள்ளன. இந்தப் பகுதிநேரக் கடை, வாரத்தில் 3 நாட்கள் மட்டுமே இயங்கி வந்தது. இந்த அங்காடி தினமும் செயல்பட்டு அத்தியாவசியப் பொருட்களை வழங்கினால், குடும்ப அட்டைதாரர்கள் அனைவரும் பயனடைவார்கள் என்ற கோரிக்கை வரப்பெற்றதால், இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில், 1 கோடியே 85 இலட்சம் குடும்ப அட்டைகளுக்கு 20 கிலோ விலையில்லாத அரிசி வழங்கும், (மேசையைத் தட்டும் ஒலி) நுகர்வோரின் நலன் காக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, இந்த அங்காடியை முழுநேர அங்காடியாகச் செயல்பட 15–3–2013–ல் உத்தரவிட்டுள்ளது. இதன்படி, வளையக்காரனூர் பகுதிநேர நியாய விலைக் கடை அங்காடி, வரும் 1–4–2013 முதல் முழுநேர அங்காடியாகச் செயல்பாட்டுக்கு வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2013 மார்ச் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், என்னுடைய தொகுதியில், சங்ககிரி பேரூராட்சி, வார்டு எண் 6 மற்றும் வார்டு எண் 10–ல் உள்ள இரண்டு நியாய விலைக் கடைகளிலும் 1,600–க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகளுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் விநியோகம் செய்யும்போது, அடிக்கடி பல பிரச்சினைகள் வருவதால் பொதுமக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மேற்கண்ட இரண்டு நியாய விலைக் கடைகளையும் இரண்டாகப் பிரித்து, அத்தியாவசியப் பொருட்கள் சிரமமின்றிக் கிடைக்க ஆவன செய்வாரா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஆய்வு செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**55—**

## அணை கட்டுதல்

***2717—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேப்பனஹள்ளி தொகுதி, சிங்கிரிப்பள்ளி கிராமம், நாச்சிக்குப்பம் ஆற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[2013 மார்ச் 25

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தளர்வுறாத துணிவு, அசையாத உறுதி, திடமான முடிவு, தீர்க்கமான நடவடிக்கை ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ள தன்னிகரில்லா தமிழ்நாடு முதலமைச்சர், (மேசையைத் தட்டும் ஒலி) காவிரி எங்கே கானல் நீர் ஆகிவிடுமோ என்று எண்ணிக்கொண்டிருந்த தமிழக மக்களின் வயிற்றிலே பால் வார்த்த அன்புத் தாய், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ரூ.2,185 இலட்சம் திட்ட மதிப்பீடு தயார் செய்து, இதில் 57.63 ஏக்கர் நிலம் வனப் பகுதியில் இருப்பதால், வனப் பகுதி நிலத்தைக் கையகப்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவரிடம், நிலம் கேட்டு பரிந்துரை அனுப்பப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அந்த நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதி உள்ளடங்கிய வேப்பனஹள்ளி ஊராட்சி ஒன்றியம், மணவாரன்பள்ளி ஊராட்சியை ஒட்டியுள்ள, கர்நாடகம், ஆந்திரம் ஆகிய இரு மாநிலங்களின் எல்லைப் பகுதியில் உள்ள மலைப் பிரதேசத்தில் உருவாகி, தமிழக எல்லைக்குள் வருகிற நதிதான் சிங்கிரிப்பள்ளி, நாச்சிக்குப்பம் அருகில் ஓடும் மார்க்கண்டேயா ஆறு மேற்படி ஆற்றின் குறுக்கே அணை கட்டினால், நாச்சிக்குப்பம், சென்னதந்தரம், நாராயணஹள்ளி, வேப்பனஹள்ளி, பெரியகோட்டப்பள்ளி, எம்.சி.பள்ளி ஆகிய 15 ஊராட்சிகளுக்குட்பட்ட 100–க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயனடையும். 5 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட விவசாய நிலங்கள் பயன்படக்கூடிய வகையில் ஆற்றின் குறுக்கே அணை கட்டப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2013 மார்ச் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி, ஆலங்குளம் தொகுதிகளுக்குட்பட்ட ராம நதியின் உபரி நீரை அதன் உப நதியான ஜம்புநதி பாசனப் பகுதிகளுக்குக் கொண்டு செல்ல நாராயணபேரி கால்வாய் ஏற்படுத்த வேண்டும். இக்கால்வாய்மூலம் நாராயணபேரி, கைகொண்டார், வெள்ளாளன், வடக்கு மாத்தூர், தெற்கு மாத்தூர் ஆகிய குளங்கள் பாசன வசதி பெறும் என்பது அனைவருக்கும் தெரியும். ஓராண்டில் இப்பகுதியிலுள்ள குளங்கள் பெருகினால், 3 ஆண்டுகளுக்கு நிலத்தடி நீர் மட்டம் குறையாமல் இருக்கும். இந்தக் கால்வாய்க்காக ரூ.8.87 கோடியில் திட்டம் தயாரிக்கப்பட்டு, தற்போது சென்னை முதன்மைப் பொறியாளர் அலுவலக திட்ட நடைமுறைப் பிரிவின் பரிசீலனையில் உள்ளது. தற்போது இத்திட்ட மதிப்பீடு ரூ.10 கோடியாக இருப்பதாக நான் அறிகிறேன். எனவே, இந்தத் திட்டத்தை விரைவுபடுத்தி, இப்பகுதி மக்களின் நீண்டநாளைய கோரிக்கையை நிறைவேற்ற, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு ஆவன செய்யுமா என தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனையில் உள்ளது என்றும், அதன் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, வருகின்ற நிதியாண்டிலே செயல்படுத்தப்படும் என்பதையும் இந்த நேரத்திலே தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 மார்ச் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 56, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**56—**

## ஆட்டுப் பண்ணை

***17428—திரு. ஆர்.பி. உதயகுமார்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தூர் தொகுதி, சாத்தூர்–இருக்கன்குடி சாலையிலுள்ள ஆட்டுப் பண்ணையை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலம், மக்களுக்கு மட்டுமல்ல, கால்நடைகளுக்கும் பொற்காலம்தான் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நிரூபிக்கின்ற வகையிலே, உறுப்பினர் குறிப்பிட்டிருக்கின்ற ஆட்டுப் பண்ணையை மேம்படுத்த ரூ.83.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொகையின்மூலம் தற்போது 5 போர்வெல்கள்–ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மேலும், இந்தப் பண்ணையைச் சுற்றிலும் வேலி அமைத்தும், சாலைகள் அமைத்தும் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இங்குள்ள ஆடுகளை நன்கு பராமரிக்கின்ற வகையிலே, புதிய ஆட்டுக் கொட்டகைகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்ல, தீவன அபிவிருத்திக்காக சுமார் 50 ஏக்கர் நிலப்பரப்பிலே அங்கே தீவனம் பயிரிடப்பட்டு, அங்கேயிருக்கின்ற ஆடுகள் செம்மையாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பதை பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.



2013 மார்ச் 25]

**திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பொருளாதாரத்தை முன்னேற்றுகின்ற வகையிலே, நிலமற்ற ஏழைப் பெண்களுக்கு விலையில்லா கறவை மாடுகள், ஆடுகள் வழங்குகின்ற, இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத முன்னோடித் திட்டத்தை அறிமுகப்படுத்தி, அதன்மூலம் இதுவரை 24 ஆயிரம் கறவைப் பசுக்களும், 10 இலட்சம் ஆடுகளும் இரண்டு ஆண்டுகளாக வழங்கப்பட்டு, இந்த நிதியாண்டிலே 12 ஆயிரம் கறவைப் பசுக்களும், 6 இலட்சம் ஆடுகளும் ரூ.250 கோடி நிதி ஒதுக்கீட்டிலே வழங்குகின்ற புரட்சிகர ஆணையை வழங்கி, இதுவரை இல்லாத அளவிலே, பால் உற்பத்தியைப் பெருக்கி, இரண்டாவது வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தியிருக்கின்ற வாழும் மனித தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, சாத்தூர் தொகுதிக்குட்பட்ட சாத்தூர் ஒன்றியத்திலே, சாத்தூர்–இருக்கன்குடி நெடுஞ்சாலையில் அமைந்திருக்கின்ற ஆட்டுப் பண்ணையை மேம்படுத்த வேண்டுமென்று கேள்வி வைத்து, அது இந்த மாமன்றத்தில் வருவதற்கு முன்பாகவே கருணை உள்ளம் கொண்டு நிறைவேற்றிக் கொடுத்திருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு சாத்தூர் தொகுதி மக்களின் சார்பாக கோடானு கோடி நன்றியைத் தெரிவித்து அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 57, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**57—**

## வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

***3751—திருமதி க. அழகுவேலு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2013 மார்ச் 25

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, 2011–2012 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின்போது, கள்ளக்குறிச்சியில் பகுதி அலுவலகம் போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கைக்கேற்ப துவக்கப்படும் என அறிவிக்கப்பட்டு, உளுந்தூர்பேட்டை பகுதி அலுவலகத்தின் வரம்பின்கீழ் வந்த கள்ளக்குறிச்சியில் தனியாக பகுதி அலுவலகம் அமைக்க அரசாணை நிலை எண் 812, நாள் 30–11–2011–ல் ஆணையிடப்பட்டு, கள்ளக்குறிச்சியில் புதிய பகுதி அலுவலகம் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் தொடங்கி வைக்கப்பட்டு, 19–6–2012 முதல் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.

**திருமதி க. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் நலனுக்காகப் புதிய வரிகள் இல்லாத பட்ஜெட்டை வழங்கிய, காவிரியை மீட்டெடுத்த கருணைத் தாயே, (மேசையைத் தட்டும் ஒலி) வருவாய்த் துறையே மக்களைத் தேடி, அடித்தட்டு மக்களுக்கு அதிக சேவை செய்யும் ‘அம்மா’ என்னும் மகத்தான திட்டத்தைத் தந்த மனிதகுல மாணிக்கமே, (மேசையைத் தட்டும் ஒலி) நித்தம் பல திட்டங்களைத் தந்து, தமிழக மக்களைத் திகைக்க வைக்கும் எங்கள் அம்மாவே, தங்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகின்றேன் தாயே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிவாழ் மக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று கள்ளக்குறிச்சியில் ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்த மறுகணமே நிறைவேற்றிக் கொடுத்த மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு என் சார்பாகவும், எனது தொகுதி



2013 மார்ச் 25]

மக்களின் சார்பாகவும் கோடானு கோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவதால், மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொந்தக் கட்டடம் கட்டித் தர முன்வருவாரா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இயங்குகின்ற முழு நேர வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாக இருந்தாலும் சரி அல்லது பகுதி நேர அலுவலகமாக இருந்தாலும் சரி, அனைத்து அலுவலகங்களும் சொந்தக் கட்டடங்களில்தான் இயங்க வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு, இதுவரை 12 கோடியே 77 இலட்சம் ரூபாய் நிதியை சொந்தக் கட்டடங்களைக் கட்டுவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாரி வழங்கியுள்ளார்கள் என்பதையும் இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன். அதன்மூலம் 5 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள், 5 பகுதிநேர அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள், 4 ஓட்டுநர் தேர்வுத் தடங்கள் என இப்பொழுது கட்டப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து இடம் தேர்வு செய்யப்பட்டபின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவைப் பெற்று, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.

[2013 மார்ச் 25

**திருமதி க. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் 30 வருடங்களுக்குமேலாக ஒரேயொரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் செயல்பட்டு வருகிறது. சமீபத்தில்கூட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 5 வட்டங்களைப் பிரித்து 7 வட்டங்களாகவும், 8 ஒன்றியங்களைப் பிரித்து 10 ஒன்றியங்களாகவும் விரிவாக்கம் செய்திருக்கிறார்கள். அந்தளவுக்கு மக்கள் தொகைக்கு ஏற்ப வளர்ந்து கொண்டிருக்கிறது.

என்னுடைய அரூர் தொகுதியில் அரூரில் வாகன வட்டார ஆய்வாளர் அலுவலகம் மற்றும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் இவற்றுக்கான கட்டடம் கட்டுவதற்காக நிலம் உள்ளது. ஒரேயொரு வட்டார அலுவலகம் உள்ள தருமபுரி மாவட்டத்தில், கூடுதலாக அரூரிலே ஒரு வட்டார அலுவலகத்தை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் இருக்கின்ற வாகனங்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப புதிய அலுவலகங்களைத் தொடங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு, பாலக்கோட்டையிலே புதிய பகுதி அலுவலகம் தொடங்கப்பட்டு தற்போது மக்களுடைய பயன்பாட்டுக்கு வந்துள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பகுதியில் போக்குவரத்து வாகனங்கள், போக்குவரத்து அல்லாத வாகனங்களுடைய எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கிறது. வாகனங்களுடைய எண்ணிக்கை அதிகமாகின்ற நிலைமை ஏற்படுகின்றபோது, ஆய்வு செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2013 மார்ச் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.

**திரு. க. தினகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூலூரில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2012–2013 ஆம் ஆண்டில் சூலூரில் புதிய பகுதி அலுவலகம் தொடங்கப்படவேண்டுமென்று உத்தரவிட்டு, இடங்கள் வாடகைக்குத் தேர்வு செய்யப்படுகின்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்த இடங்களுக்கான உரிமையாளர்களிடத்திலே ஒப்பந்தம் ஏற்பட்ட பின்பு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் விரைவில் சூலூரில் புதிய பகுதி அலுவலகம் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக உருவாக்கப்பட்ட என்னுடைய ஆம்பூர் தொகுதி, ஆம்பூர் தாலுகாவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–50

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஆம்பூர் தாலுகாவில் வாகனங்களுடைய எண்ணிக்கை மிகவும்

[2013 மார்ச் 25

குறைவாக இருக்கிறது. எந்தெந்த மாவட்டங்களில், எந்தெந்த இடங்களில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் அதிகப்படியான எண்ணிக்கையில் வாகனங்கள் இருக்கின்றனவோ, அவற்றைப் பிரித்து மக்களுடைய பயன்பாட்டிற்கேற்ப, போக்குவரத்து வசதிகளுக்கேற்ப புதிய அலுவலகங்கள் தொடங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியில் வாகனங்களின் எண்ணிக்கை ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, புதிய அலுவலகம் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 58, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**58—**

## மீன் இறங்கு தளம்

***5748—திரு. பொன். ராஜா:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதி, அண்ணாமலைச்சேரி பகுதியில் நடைபெறும் மீன் இறங்கு தளப் பணியை விரைவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதிக்குட்பட்ட, அண்ணாமலைச்சேரி மீனவக் கிராமத்தில் ரூ. 471.92 இலட்சம் செலவில் மீன் இறங்கு தளம் கட்டுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2013 மார்ச் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.

**திரு. பொன். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்தில் வாழும் ஒட்டுமொத்தத் தமிழர்களின் ஒரே தலைவர், காவிரியை மீட்டெடுத்த கருணைத் தாய் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களைப் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பொன்னேரி தொகுதியில், பழவேற்காடு பகுதியிலே பறவைகள் சரணாலயம் தொடங்குவதற்கு அறிவிக்கப்பட்டுள்ளதால், அதைச் சுற்றி 10 கிலோ மீட்டர் தொலைவிற்கு எந்தவிதப் பணியையும் தொடங்குவதற்கு வனத் துறையின் அனுமதியைப் பெற வேண்டியுள்ளது. இப்பணிக்கு ஒப்பந்தங்கள் பெறப்பட்டும் அதற்கு வனத் துறையின் அனுமதி இன்றுவரை பெற முடியவில்லை. டிசம்பர் மாதம் 2011 முதல் இப்பணி தொடங்கப்படாமல் அப்படியே நிலுவையிலுள்ளது. இப்பணியைத் தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழகக் கடற்கரையோர மாவட்டங்களில், சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ.50 கோடி திட்ட மதிப்பீட்டில் 10 இடங்களில் புதிதாக மீன் இறங்கு தளங்கள் அமைத்திட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அனுமதி அளித்தது. மீன் இறங்கு தளம் அமைக்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில், திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதிக்குட்பட்ட அண்ணாமலைச்சேரி மீனவக் கிராமமும் ஒன்றாகும். இக்கிராமத்தில் மீன் இறங்கு தளம் அமைக்கும் பணி ரூ. 471.92 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. பொன்னேரி தொகுதிக்குட்பட்ட, அண்ணாமலைச்சேரி மீனவக் கிராமத்தில் மீன் இறங்கு தளம் அமைப்பதற்கான கட்டுமானப் பணியில் 28 சதவீதம் பணிகள் முடிவடைந்துள்ளன.

[2013 மார்ச் 25

அண்ணாமலைச்சேரி மீனவக் கிராமம், பழையேரிப் பகுதியில் அமையப்பெற்றுள்ள கிராமம். பழவேற்காடு ஏரி மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்கள், அண்ணாமலைச்சேரி கிராமம் உட்பட அமையப்பெற்ற பகுதிகள், பறவைகள் சரணாலயமாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், மத்திய வனத் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து உரிய அனுமதி பெற்று, கட்டுமானப் பணிகளைத் தொடர வேண்டுமென்று சென்னை வன உயிரினக் காப்பாளர், அதாவது Wildlife Warden அவர்கள் கூறியதைத் தொடர்ந்து, கட்டுமானப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அண்ணாமலைச்சேரி மீனவக் கிராமத்தில் மீன் இறங்கு தளம் அமைத்திட தேசிய பறவைகள் சரணாலயக் காப்பாளரிடமிருந்து உரிய அனுமதியைப் பெற State Level Standing Committee மூலம் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அனுமதி கிடைக்கப்பெற்று, விரைவில் மீன் இறங்கு தளக் கட்டுமானப் பணிகள் மீண்டும் தொடங்கப்பட்டு, அனைத்துப் பணிகளையும் முடித்திட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.

**திரு. பொன். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் 44 மீனவக் கிராமங்கள் இருக்கின்றன. சுமார் 50,000–க்கும் அதிகமான மீனவர்கள் மீன் பிடித் தொழிலை நம்பியிருக்கிறார்கள். ஆனால், அந்தப் பகுதியிலே மீன் இறங்கு தளம் இதுவரையிலும் அமைக்கப்படவில்லை. கன்னியாகுமரி மாவட்டத்திலே மீன் இறங்கு தளம் அமைக்கும்போது அங்குள்ள மீனவர்களுடைய வாழ்க்கைத்தரம் முன்னேறும். ஆகவே, அங்கு மீன் இறங்கு தளம் அமைக்க



2013 மார்ச் 25]

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை எந்த அரசும் செய்யாத சாதனையாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற கன்னியாகுமரி மாவட்டத்திலே, குளச்சல் பகுதியிலே, ஏறத்தாழ முன்பு அனுமதி அளிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்ட தொகை 27.10 கோடி ரூபாய். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக தமிழக முதல்வராக ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னாலே குளச்சல் துறைமுகத்திற்கு ரூ. 87.75 கோடி ஒதுக்கி, பணிகள் நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–55

அதேபோல, தேங்காய்ப்பட்டினம் துறைமுகத்திற்கு ஆரம்பத்தில் அனுமதிக்கப்பட்ட தொகை ரூபாய் 40 கோடி. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உறுப்பினருடைய கோரிக்கையையும், தேங்காய்ப்பட்டினம் பகுதியிலே உள்ள மக்களுடைய கோரிக்கையையும் ஏற்று, ரூ.97.40 கோடிக்கு பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீன் இறங்கு தளம் (Fish Landing Centre) அமைக்கப்படவில்லை என்று சொன்னார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின், கன்னியாகுமரி மாவட்டம், இனையம்புத்தன்துறையிலே ரூ. 2.40 கோடி திட்ட மதிப்பீட்டிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் சைமன் காலனியில் ரூ. 2.73 கோடி திட்ட மதிப்பீட்டிலும், கன்னியாகுமரி மாவட்டம், குறும்பனையிலே ரூ. 2.04 கோடி திட்ட மதிப்பீட்டிலும் மீன் இறங்கு தளம் அமைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவுசெய்து அவைக்கு சரியான தகவலை இந்த

மாமன்றத்திலே தெரிவிக்குமாறு நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 59, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**59—**

**காலிப் பணியிடங்கள்**

*4238—**திரு. பி.வி. கதிரவன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறையின்கீழ் இயங்கும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணி இடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கின்றேன்.

மிகவும் அற்புதமான பொற்கால ஆட்சிக்குச் சொந்தமான, எங்கள் பொற்கால முதல்வர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறையின்கீழ் மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் உள்ள 289 அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில், மொத்தம் 235 ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருந்தன. நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின்படி, இவற்றில் 47 பணியிடங்கள் இந்த ஆண்டு நிரப்பப்பட்டுள்ளன. மீதமுள்ள 188 காலிப் பணியிடங்களை நிரப்பத் தேவையான ஆசிரியர்கள் தெரிவுப் பட்டியலை அனுப்பி வைக்குமாறு





13–3–2013 அன்று ஆசிரியர் தேர்வு வாரியத்திடம் கோரப்பட்டுள்ளது. ஆசிரியர் தேர்வு வாரியத்திடமிருந்து தெரிவுப் பட்டியல் வரப்பெற்றவுடன் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஒப்புதலுடன் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்கள் விரைவாக நிரப்பப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், பள்ளிக் கல்வித் துறையிலே, ஆட்சிக்கு வந்த இரண்டு ஆண்டுகளுக்குள், 51,757 ஆசிரியர் பணியிடங்களையும், 7,275 ஆசிரியர் அல்லாத பணியிடங்களையும் நிரப்பி, தமிழகத்திலேயே, இன்னும் சொல்லப்போனால், இந்தியாவிலேயே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பணியை கல்வித் துறைக்கு செய்திருப்பதை மனதாரப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் இயங்கி வருகின்ற அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை இருக்கின்ற பள்ளிகளில் காலியாகவுள்ள இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் இன்னும் நிரப்பப்படாமல் இருந்துவருகின்றன. ஏற்கெனவே இந்தப் பள்ளிகளில் பணிபுரிந்த பட்டதாரி ஆசிரியர்கள் கிட்டத்தட்ட 141 பேர், வெளி மாவட்டங்களிலிருந்து இங்கு பணிபுரிவதால், அவர்களை வெளி மாவட்டங்களுக்குச் சென்று பணிபுரிவதற்கு தமிழக அரசு ஆணையிட்டிருக்கிறது. அவர்களுக்கும் சேர்த்து கள்ளர் சீரமைப்புத் துறையில் இப்போது புதியதாக ஆசிரியர் பணியிடங்கள் நியமனம் செய்ய வேண்டி இருக்கிறது. அதுமட்டுமல்ல, காவலர் மற்றும் சமையலாளர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. இந்தப் பணியிடங்களெல்லாம் உடனடியாக நிரப்பப்படுமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், மற்றும் சிறுபான்மையினர் நலத் துறைக்கு ஒரு பொற்காலம் என்றே சொல்லலாம். இதுவரை சரித்திரத்திலே இல்லாத அளவிற்கு, ஆசிரியர் பணிக்குத் தேவையான அனைத்து காலிப் பணியிடங்களும் நிரப்பப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோன்று, தமிழ்நாடு முழுவதும் எங்கெல்லாம் காப்பாளினி மற்றும் சமையலாளி பணியிடங்கள் காலியாக இருக்கின்றனவோ, அங்கெல்லாம் வேலைவாய்ப்புத் துறைமூலம் அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படும் வேலைகள் நடந்து வருகின்றன. அனைத்து மாவட்டங்களிலும் அதற்கு வேண்டிய பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. விரைவில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஒப்புதலோடு அந்தக் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போதும், அந்தப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுக் கொண்டே வருகின்றன. அதையும் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

*வினா வரிசை எண் 60, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*





**60—**

## குடமுழுக்கு

***21312—திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு அருள்மிகு ஆதிகேசவப்பெருமாள் திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் நிருவாகத்திற்கு உட்பட்ட திருவட்டாறு அருள்மிகு ஆதிகேசவப்பெருமாள் திருக்கோயில் 108 வைணவத் தலங்களில் ஒன்றாகும். இத்திருக்கோயில் நம்மாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்ட பெருமை கொண்டது. இத்திருக்கோயில் இணை ஆணையர் மற்றும் செயல் அலுவலர்களால் நிருவாகம் செய்யப்பட்டு வருகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய ஆணையின்படி, இத்திருக்கோயிலுக்குத் திருப்பணிகள் செய்திட, கடந்த 2005 ஆம் ஆண்டு திருப்பணிக் குழு அமைக்கப்பட்டது. பின்னர், ஆட்சிக்கு வந்த மைனாரிட்டி தி.மு.க. அரசின் அக்கறையின்மையின் காரணமாக இத்திருக்கோயில் திருப்பணிகள் கிடப்பில் போடப்பட்டன. மீண்டும் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றதும், இத்திருக்கோயிலில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் கருவறை மண்டபம் மற்றும் ஒற்றைக்கால் மண்டபம் பழுது பார்த்து, செப்புத் தகடுகள் புதிதாகப் பதிக்கப்பட்டன. ரூ. 40 இலட்சம் மதிப்பீட்டில் திருவம்பாடி அருள்மிகு கிருஷ்ணசாமி சன்னதி திருப்பணிகள் செய்து முடிக்கப்பட்டன. ரூ. 10 இலட்சம் மதிப்பீட்டில்

[2013 மார்ச் 25

திருக்கோயிலின் கல்தூண்கள் மற்றும் அலங்காரத் தூண்கள் ஆகியவற்றை இரசாயனக் கலவையின்மூலம் சுத்தம் செய்தும், ரூ. 3.75 இலட்சம் மதிப்பீட்டில் ஊற்றுக்கூரை மண்டபம் பழுது பார்த்தல் மற்றும் ரூ. 3 இலட்சம் மதிப்பீட்டில் அருள்மிகு தர்மசாஸ்தா சன்னதி திருப்பணி என மொத்தம் ரூ. 106.75 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

மேலும், திருக்கோயில் சுற்றுப்பிரகாரம் மண்டபத்தில் கல்தளம் அமைத்தல், திருக்கோயில் சுற்றுப்பிரகார ஓட்டுக்கூரை, சாந்தி மண்டபம், கதகளி மண்டபம் ஆகியவற்றைப் பழுது பார்த்து பராமரித்தல், திருக்கோயில் நமஸ்காரம் மண்டபம் மற்றும் சுற்று மண்டபம் ஆகியவற்றில் செப்புத் தகடுகள் பதித்தல் மற்றும் புதிய மின் இணைப்புப் பணிகள் போன்ற பணிகளுக்கு சுமார் ரூ.90.63 இலட்சத்திற்கு நிருவாக அனுமதியும், மதிப்பீடு அங்கீகாரமும் வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் அங்கீகரிக்கப்பட்டு விரைவில் பணிகள் துவங்கப்படவுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவட்டாறு திருக்கோயிலுக்கு கடந்த 17 ஆம் நூற்றாண்டில், கேரளாவை ஆண்டு வந்த மன்னர்களால் குடமுழுக்கு நடத்தப்பட்டது. கிட்டத்தட்ட 300 ஆண்டுகளுக்குப் பிறகு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி) பொற்கால ஆட்சியில் இந்தப் பணிகளெல்லாம் செய்து முடிக்கப்பட்டு, விரைவிலே குடமுழுக்கு நடத்தப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவட்டாறு அருள்மிகு ஆதிகேசவப்பெருமாள் திருக்கோயில் தொல்பொருள் ஆராய்ச்சிக் குறிப்புகளில் 4,500 ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பரசுராமர் அவதாரம் முடிந்தபின், 16,000 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பாகவே, பரசுராமரின் சிலையை பிரதிஷ்டை செய்த திருக்கோயில் என்ற ஐதீகமும் உண்டு. 300 ஆண்டுகள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார். ஆனால், 450 ஆண்டுகளுக்கு முன்பு இத்திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு



2013 மார்ச் 25]

நடந்ததாகக் கூறப்படுகிறது. எனக்கு வந்த தகவலும் அதுதான். கேரள மாநிலம் உத்திராடம் திருநாள் மன்னர் கைவசம் 1956 ஆம் ஆண்டு வரை இருந்த இந்தக் கோயில், பின்னர் தமிழக அரசிடம் ஒப்படைக்கப்பட்டது. 1991 ஆம் ஆண்டு வரை குடநம்பி பூஜை இங்கே நடைபெற்று வந்தது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி, கேள்வி மட்டும் கேளுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதன்பின்னர் குடநம்பி பூஜை இங்கே நடைபெறவில்லை. தொடர்ந்து குடநம்பி பூஜை இங்கே நடைபெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புராதனக் கோயிலின் சீரமைப்பிற்கான நிதி தலா ரூ. 1 கோடி சுசீந்திரம் கோயிலுக்கும், ஆதிகேசவப்பெருமாள் கோயிலுக்கும் ஒதுக்கப்பட்டது. அந்த நிதி சுசீந்திரம் கோயிலுக்குக் கிடைக்கப்பெற்றது. ஆனால், திருவட்டாறு கோயிலுக்குக் கிடைக்கப்பெறவில்லை. 2004–ல், தற்போதுள்ள மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆட்சிக்காலத்தில், ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து, பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ந்து நடைபெறாமல், தற்போது மீண்டும் அந்தப் பணிகளுக்கு ரூபாய் ஒரு கோடியே ஆறு இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு, பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். தொடர்ந்து இந்தப் பணிகள் விரைவில் நடைபெற வேண்டும். திருப்பணிகள் மிகவும் தாமதமாக நடைபெறுகின்றன. அதுமட்டுமல்ல, இந்த ஆண்டே இந்தத் திருப்பணிகள் நிறைவு பெற்று, குடமுழுக்கு நடைபெற வேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன், உபயதாரர்களும் இதற்கு உதவி செய்ய தயாராக இருக்கிறார்கள். ஆனால், மதிப்பீடு கொடுத்தால், நேரடியாக அவர்களும் பணியில் இணைந்து செய்வதாகக் கூறுகிறார்கள். அதையும் நம்முடைய அரசு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

அல்லா மண்டபம் என்று ஒரு சிறப்பான அம்சம் இங்கு உண்டு. சிறுபான்மையின மக்களும், இந்து மக்களும் இணைந்து சென்றுவரக்கூடிய தன்மையை வெளிப்படுத்தக்கூடிய மண்டபம் அது. அந்த மண்டபம் இந்தத் திருக்கோயிலில் உண்டு. அந்த அல்லா மண்டபத்தையும் சீரமைத்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

[2013 மார்ச் 25

முற்பகல் 11–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்றைக்கும் இல்லாத அளவிற்கு, கடந்த 2011–2012 ஆம் நிதியாண்டு முதல், தமிழகத்திலே இருக்கின்ற திருக்கோயில்கள் எல்லாம் புனரமைக்கப்பட்டு, குடமுழுக்கு செய்யப்பட வேண்டுமென்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின் அடிப்படையிலே, வருடத்திற்கு 1,006 திருக்கோயில்கள் வீதம் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கின்ற திருக்கோயில்கள் எல்லாம் விரைவாகப் புனரமைக்கப்பட்டு, திருப்பணிகள் எல்லாம் நடத்தப்பட்டு, குடமுழுக்கு நடத்தப்பட்டு வருகின்றது. கடந்த வருடம் இருந்த இலக்கைக் காட்டிலும் அதிகமாக, இந்த நிதியாண்டில் 1,906 திருக்கோயில்களில் குடமுழுக்கு செய்யப்பட்டு உள்ளது என்பதையும் இந்த அவையிலே குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல், அந்தக் கோயிலை நானே நேரில் சென்று ஆய்வு நடத்தியிருக்கின்றேன். திருப்பணிகள் விரைவாக முடிந்திடும் வகையில், பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையினைப் பெற்று, விரைவிலே குடமுழுக்கு நடத்தப்படும் என்பதைத் தங்களின்வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணிக்காக ஒதுக்கப்பட்டுள்ள 1 கோடியே 8 இலட்சம் ரூபாய் நிதி போதவில்லை என்று கூறுகிறார்கள். ஆகையால், இதற்கு மேற்கொண்டு நிதி தேவைப்படுமானால், அரசு அதிலே கவனம் செலுத்தி, தேவைப்படும் நிதியினை வழங்கி, அந்தப் பணிகளை நிறைவு செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.



2013 மார்ச் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரி வழங்கிக் கொண்டிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, இதைப் பரிசீலனை செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையினைப் பெற்று, நிச்சயமாக அதிகமான நிதியினை ஒதுக்கீடு செய்து, அந்தக் கோயிலில் குடமுழுக்கு நடத்தப்படும் என்பதைத் தங்களின்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### கெயில் இந்தியா நிறுவனம் விவசாய நிலங்களில் எரிவாயுக் குழாய்களைப் புதைப்பதால் விவசாயிகள் பாதிக்கப்படுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொச்சி முதல் பெங்களூரு வரை கெயில் இந்தியா நிறுவனத்தின்மூலம் விவசாய நிலங்களில் எரிவாயுக் குழாய்களைப் புதைப்பதால் விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவது குறித்து, இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன், திரு. ப. டில்லி பாபு, திரு. கே. தங்கவேல், மனித நேய மக்கள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா ஆகியோர் பேரவை விதி 55–ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள்.

இதே பொருள் குறித்து, இன்றைக்குச் சபைக்கு வந்த பிறகு, காலை 10–20 மணிக்குத்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த திரு. அர. சக்கரபாணி, திரு. கம்பம் இராமகிருஷ்ணன் ஆகியோர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அதேபோன்று, டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள் காலை 10–50 மணிக்குத்தான் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இதனைச் சிறப்புக் கவன

ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்தவர்களில் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில், சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

***திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Gas Authority of India Limited என்று சொல்லக்கூடிய கெயில் எரிவாயு நிறுவனம், கொச்சி முதல் பெங்களூரு வரை எரிவாயுக் குழாய்களைப் பதித்துக் கொண்டு செல்கின்ற பணியினைத் தற்போது மேற்கொண்டிருக்கிறது. குறிப்பாக, தமிழகத்திலே 310 கிலோ மீட்டர் தூரம், அதாவது, கோவை, திருப்பூர், ஈரோடு, நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்கள் வழியாகக் கொண்டு செல்கின்ற அந்தத் திட்டத்தினை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி எதிர்க்கவில்லை என்பதனை முதலிலே இந்தச் சபைக்கும், அரசுக்கும் நாங்கள் தெரிவித்துக்கொள்கிறோம். இந்தத் திட்டம், ஏறக்குறைய 28 ஆயிரம் விவசாயிகளுடைய விளை நிலங்கள் பாதிப்புக்குள்ளாகின்ற அளவிற்கு ஒரு நிலையை உருவாக்கியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. டில்லி பாபு, சுருக்கமாகச் சொல்லுங்கள். பாதிப்புக்கு என்ன காரணம் என்பதை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விஷயத்தைத்தான் நான் சொல்லிக் கொண்டு வருகிறேன். குறிப்பாக, கேரள மாநிலத்திலே, 505 கிலோ மீட்டர் தூரத்திற்குக் கொண்டு செல்கின்ற இந்தத் திட்டத்திலே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. டில்லி பாபு, கவனத்தை ஈர்ப்பதுமாதிரி பேசுங்கள். (குறுக்கீடு) அரசின் கவனத்தை ஈர்த்து, உட்காருங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** இரண்டே நிமிடங்களில் முடித்து விடுகிறேன். கேரள மாநிலத்திலே, வெறும் 32 கிலோ மீட்டர் மட்டுமே விவசாய நிலங்கள் பாதிக்கின்ற அளவிற்கும், மீதமுள்ள தூரத்திற்கு நெடுஞ்சாலைகள் ஓரமாகவும் அந்த எரிவாயுக் குழாய்களைப் பதிக்கின்ற அளவிற்கு அந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.





அதேபோன்று, கர்நாடகா மாநிலத்திலே, பூனப்பள்ளியிலிருந்து, பெங்களூரு எல்லை வரை செல்லக்கூடிய அந்தத் திட்டத்தில், விவசாய நிலங்கள் 15 கிலோ மீட்டர் தொலைவிற்குத்தான் பாதிக்கப்பட்டிருந்தும் உடனடியாக அங்கிருக்கக்கூடிய அரசும் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தலையிட்டு, அத்திட்டத்திற்கான alignment மாற்றப்பட்டிருக்கிறது. விவசாய நிலங்கள் பாதிக்கப்படாமல், நெடுஞ்சாலைகள் ஓரமாக அந்தக் குழாய்களைக் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகளும் அங்கு துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், தலைமைச் செயலாளர் அவர்களுக்கும் நான் முதலிலே நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். பாதிக்கப்படுகின்ற விவசாயிகளை உடனடியாக அழைத்து, கடந்த மார்ச் மாதம் 6, 7, 8 ஆம் தேதிகளில் அவர்களிடம் கருத்துக் கேட்கின்ற பணி, முழு ஜனநாயகப்பூர்வமாக நடைபெற்றிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக மதிப்பிற்குரிய தலைமைச் செயலாளர் அவர்கள், மூன்று தினங்களும் அத்தனை விவசாயிகளையும் அழைத்து யாராவது மீண்டும் கருத்துச் சொல்ல வேண்டுமென்றால் தாராளமாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டு, முழு ஜனநாயகத்தைக் கடைப்பிடித்திருப்பதை நான் நேரில் பார்த்ததால், அதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒட்டுமொத்தமாக, 28 ஆயிரம் விவசாயிகள் கலந்து கொண்டார்கள். எனது தருமபுரி மாவட்டத்தில் 30 சென்ட் நிலத்திற்கு 36 ரூபாய் எனவும், 40 சென்ட் நிலத்திற்கு 46 ரூபாய் எனவும் அடிமாட்டு விலைக்கு, நஷ்டஈட்டுத் தொகை கொடுத்திருக்கின்றார்கள். மேலும், அந்த மக்களிடம் உண்மை நிலைமையைத் தெரிவிக்காமல், கையெழுத்து பெறப்பட்டு, செக் வழங்கப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11–10

குழாய் பதிப்பதற்கான பணிகளுக்காக, மஞ்சள், கரும்பு, வாழை மரம், தென்னை மரம் போன்றவை வெட்டப்பட்ட பணிகளும் நடைபெற்றுள்ளன; இதனால், விவசாயிகள் மனம் வெந்து துயரத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக, சேலம் மாவட்டத்திலுள்ள கெயில் நிறுவனத்தின் முன்பாக, தமிழக விவசாயிகள் பாதுகாப்பு இயக்கம் என்று, 2, 3 ஆயிரம் விவசாயிகள்

திரண்டு, கோயம்புத்தூர் தொகுதியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் தலைமையில் போராட்டம் நடத்தி, அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலையிட்டது உண்மையிலேயே வரவேற்கத்தக்க விஷயம். கேரளா மற்றும் கர்நாடக மாநிலங்களில் நெடுஞ்சாலைகள் ஓரமாக எரிவாயு பைப் பதிக்கும் திட்டம் விவசாய நிலங்களுக்குப் பாதிப்பு இல்லாமல், எவ்வாறு கொண்டு செல்லப்படுகிறதோ, அதேபோல், அதே அமைப்பில், அதே alignment-ல் தமிழகத்திலும் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வர்த்தக நிறுவனங்களுக்கு திரவ நிலையில் எரிவாயுவினை வழங்குவதற்காக Gas Authority of India Limited எனப்படும் GAIL நிறுவனம் கொச்சியிலிருந்து, பெங்களூரு வரை பைப்களை பதித்துக் கொண்டு வரக்கூடிய நிகழ்வு, தமிழகத்தின் மேற்குப் பகுதியிலுள்ள கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, சேலம், நாமக்கல், கிருஷ்ணகிரி, தருமபுரி போன்ற 7 மாவட்டங்களில் நடைபெற்று வருகிறது. வர்த்தக நிறுவனங்கள் பயன்பெறுவதற்கான இந்தத் திட்டத்தினால், மேற்கூறிய மாவட்டங்களில் வாழக்கூடிய விவசாயிகள் மிகப்பெரிய அளவிலே பாதிக்கப்பட்டு இருக்கின்றார்கள். பாதிக்கப்பட்ட விவசாயிகள் தங்களுடைய எதிர்ப்பை வெளிக்காட்டிய நேரத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு, 3 நாட்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தை உளப்பூர்வமாக நடத்தினார்கள்; அதை மனித நேய மக்கள் கட்சி வரவேற்கின்றது. அதேநேரத்தில், அந்தக் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கலந்துகொண்ட விவசாயிகள் பல்வேறு கருத்துகளை வலியுறுத்தியிருக்கின்றார்கள்; அவற்றில் ஒன்று, 15 சென்ட் நிலத்திற்கு வெறும் 750 ரூபாய் செக் கொடுத்ததை எல்லாம் விவசாயிகள் அந்தக் கூட்டத்திலே பதிவு செய்து இருக்கின்றார்கள். எனவே, விவசாயிகளைப் பாதிக்காத வகையில், விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில், விவசாய





நிலங்களைத் தவிர்த்து, நெடுஞ்சாலை வழியாக, பைப் லைனைப் பதிக்க வேண்டுமென்ற, விவசாயிகளுடைய கருத்தை, இங்கே குறிப்பிட்டு அரசாங்கத்தினுடைய கவனத்தை ஈர்த்து, மாற்றுப் பாதையை ஏற்படுத்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் இதுபோன்ற கவன ஈர்ப்புத் தீர்மானத்தை என் அறையிலே வந்து சீக்கிரம் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் என் அறையில்தான் இருக்கிறேன்; 10 மணிக்கு முன்பே தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் 10-20, 10-40 மணிக்குக் கொடுத்தால், அதை எடுப்பதற்கு சிரமமாக இருக்கும். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் இனிமேல் இதுபோன்ற நிலையினைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெயில் நிறுவனம், தமிழ்நாட்டிலுள்ள விவசாய நிலங்களின் வழியாக கேரளாவிலிருந்து பெங்களூரு வரை 871 கி.மீ. தூரத்திற்கு எரிவாயுக் குழாய்களைப் பதிக்கின்ற பணியினை மேற்கொண்டு வருவதால், தமிழ்நாட்டு விவசாயிகள் பதட்டத்திற்கும், கொந்தளிப்பிற்கும் ஆளாகியிருக்கின்றார்கள். தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், திருப்பூர், சேலம், கிருஷ்ணகிரி, தருமபுரி, ஈரோடு போன்ற மாவட்டங்களில் 371 கி.மீ. தூரத்திற்கு எரிவாயுக் குழாயைப் பதிக்கின்றபோது கிட்டத்தட்ட 27 ஆயிரம் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர்.

இந்நிலையில், நிலத்தின் விலை மதிப்பில் 10 சதவிகிதம் மட்டும் இழப்பீடு தருவதும், குழாயைப் பதிக்கின்ற நிலத்தின் இருபுறமும் 10 மீட்டர் நீளத்திற்கு விவசாயம் செய்ய முடியாது என்பதாலும் விவசாயிகள் கடுமையான நஷ்டத்திற்கு ஆளாகின்றார்கள். மேலும், விவசாய விளை நிலங்களில் பதிக்கின்ற எரிவாயுக் குழாய்களுக்கு விவசாயிகள்தான் பாதுகாப்புத் தரவேண்டும் என்றும், பாதிப்பு ஏற்பட்டால் விவசாயிகள்தான் பொறுப்பேற்க வேண்டும் என்றும், இயற்கையிலேயே குழாய்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டால், இந்திய குற்றவியல் சட்டத்தின்கீழ் கைது செய்து சிறையில் அடைக்கலாம் என்றும் GAIL நிறுவனம் விதித்திருக்கின்ற நிபந்தனைகளை எப்படி விவசாயிகள் ஏற்றுக்கொள்வார்கள்? குறைந்த விலைக்கு நிலத்தைத்

தந்து, உற்பத்தி இழப்பையும் ஏற்றுக்கொண்டு, குழாய்க்கு பாதிப்பு ஏற்பட்டால், சிறைக்குச் செல்ல வேண்டும் என்று சொன்னால், அது கொடுமையிலும் கொடுமை. எனவே, இந்த அரசு, தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தப் பிரச்சினையை மத்திய அரசின் கவனத்திற்கு இந்த அவையின் மூலமாகக் கொண்டுசென்று, விளைநிலங்களில் எரிவாயுக் குழாயைப் பதிக்காமல், மாற்றுப் பாதையில் இந்தக் குழாய்களைப் பதிக்க வேண்டுமென்று சொல்லுமாறு அவையின் கவனத்தை ஈர்த்து அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொச்சியிலிருந்து பெங்களூரு வரையிலும் GAIL நிறுவனத்தின்மூலமாக திரவ எரிவாயுவை எடுத்துச் செல்கின்ற பாதை பெரும்பாலும் விவசாய நிலங்களின் வழியாகச் செல்கின்ற காரணத்தினாலும், விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய நஷ்டஈடு மிக, மிக சொற்பமாக இருக்கின்ற காரணத்தினாலும், விவசாயிகளினுடைய கடுமையான எதிர்ப்பை சந்தித்துக்கொண்டிருக்கிறது. எனவே, கேரளம் மற்றும் கர்நாடகத்தைப்போல, GAIL நிறுவனம் திரவ எரிவாயுவை எடுத்துச்செல்கின்ற பாதையை, நெடுஞ்சாலை ஓரமாக மாற்றி அமைக்க வேண்டுமென்பதை தமிழ்நாடு அரசு கடைப்பிடிக்க வேண்டியதனுடைய அவசியம் குறித்து இந்த அவையினுடைய கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “நமது அரசியல் சட்டம் நிலையானது அல்ல. ஏனென்றால், ஒரு ஜனநாயக நாட்டில் அரசியல் சட்டத்தைத் திருத்த அந்த மக்களுக்கு எப்போதும் எல்லா உரிமையும் உண்டு” என்றார் பேறிஞர் அண்ணா அவர்கள். பேரறிஞர் அண்ணா மற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோரின் வழியில் ஆட்சி





நடத்தி வரும் எனது தலைமையிலான அரசு, (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுக்காக இயற்றப்படும் சட்டங்கள் மற்றும் வகுக்கப்படும் திட்டங்களால் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதில் கண்ணுங்கருத்துமாக இருந்து வருகிறது.

கேரள மாநிலம், கொச்சி திரவ எரிவாயு முனையத்திலிருந்து பெங்களூரு வரை தமிழ்நாட்டின் கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, நாமக்கல், சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய ஏழு மாவட்டங்களின் விவசாய நிலங்களின் ஊடே 310 கிலோ மீட்டர் தூரத்திற்கு எரிவாயு கொண்டு செல்லும் குழாய்கள் அமைக்கும் பணியினை மேற்கொள்ள கெயில் நிறுவனம், அதாவது, Gas Authority of India Limited திட்டமிட்டது.

மேற்படி திட்டத்தினைச் செயல்படுத்தும் வகையில், 310 கிலோ மீட்டர் நீளத்திற்கும், 20 மீட்டர் அகலத்திற்கும் எரிவாயுக் குழாய்கள் பதிக்கப்படுவதற்காக Petroleum and Minerals Pipeline Act, 1962 என்ற சட்டத்தின்கீழ், 5,842 பட்டாதாரர்களுக்குச் சொந்தமான சுமார் 1,491 ஏக்கர் நிலத்தின் பயன்பாட்டு உரிமையை, அதாவது Right of Use–ஐப் பெறுவதற்கு கெயில் நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதற்காக வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை நிலத்தின் சந்தை மதிப்பில் 10 சதவீதம் ஆகும்.

இந்தத் திட்டம் விவசாயிகளின் விருப்பத்திற்கு மாறாகச் செயல்படுத்தப்படுகிறது என்றும், தற்போது கெயில் வகுத்துள்ள திட்டப்படி, இது செயல்படுத்தப்பட்டால், விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்படும் என்றும் தெரிவித்து, இந்தத் திட்டத்திற்கு ஏழு மாவட்டங்களைச் சார்ந்த விவசாயிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர். விவசாயிகளின் கவலை எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டவுடன், 28–2–2013 அன்று மாண்புமிகு அமைச்சர்களுடனும், அரசு உயர் அதிகாரிகளுடனும் நான் ஆலோசனையை நடத்தினேன்.

முற்பகல் 11–20

இக்கூட்டத்தில் விவசாயிகளின் கருத்துகளை முதலில் கேட்டறிவது அவசியம் என்று நான் எடுத்துக் கூறியதுடன், சென்னை உயர் நீதிமன்ற அமர்வு உத்தரவின் அடிப்படையில், அரசு தலைமைச் செயலாளரால் கருத்துக் கேட்புக் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும் என்றும் உத்தரவிட்டேன்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2013 மார்ச் 25

எனது ஆணைப்படி, கெயில் நிறுவனத்தின் எரிவாயுக் குழாய் பதிக்கும் திட்டம் தொடர்பாக கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, நாமக்கல், சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய ஏழு மாவட்டங்களைச் சார்ந்த விவசாயிகள் மற்றும் நில உரிமையாளர்களுக்காக பொது கருத்துக் கேட்புக் கூட்டங்கள் 2013 மார்ச் திங்கள், 6, 7, மற்றும் 8 ஆகிய நாட்களில் சென்னை–ராஜா அண்ணாமலைபுரம், பி.எஸ். குமாரசாமி ராஜா சாலையிலுள்ள, அண்ணா மேலாண்மை நிலைய கூட்டரங்கத்தில் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் தலைமையில் நடத்தப்பட்டன. இந்தப் பொது கருத்துக் கேட்புக் கூட்டங்களில் மேற்குறிப்பிடப்பட்ட ஏழு மாவட்டங்களின் 134 கிராமங்களைச் சார்ந்த 2,428 விவசாயிகள் மற்றும் நில உரிமையாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் கருத்துக் கேட்புக் கூட்டங்களில் கலந்து கொண்ட அனைத்து விவசாயிகளும்,

1. கெயில் நிறுவனம் எரிவாயுக் குழாய் அமைப்பதனால் சிறு மற்றும் குறு விவசாயிகளின் வாழ்வாதாரம் மிகக் கடுமையாகப் பாதிக்கப்படும் என்றும்;

2. கெயில் நிறுவனம் சிறு மற்றும் குறு விவசாயிகளின் விவசாய நிலத்தின் பெரும்பகுதியின் நிலப் பயன்பாட்டு உரிமையினைப் பெறுவதால் விவசாயிகள் தங்களது நிலத்தில் உரிய விவசாயம் செய்ய இயலாமல் நிலத்தின் பெரும்பகுதியினை இழக்க நேரிடுவதுடன், எதிர்காலத்தில் நில மேம்பாட்டிற்குத் தேவையான எதையும் செய்ய இயலாத சூழ்நிலை ஏற்படும் என்றும்;

3. சிறு மற்றும் குறு விவசாயிகளின் வேளாண் நிலங்களின் வழியாக கெயில் நிறுவனம் எரிவாயுக் குழாய்கள் பதிப்பதனால் அந்த விவசாயிகளின் பொருளாதார நிலைமை மிகக் கடுமையாகப் பாதிப்படைவதுடன், அவர்கள் எரிவாயுக் குழாய் பதிக்கப்படும் நிலத்தில் தேவையான விவசாயப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள இயலாத சூழ்நிலை ஏற்படும் என்றும்;

4. விவசாய நிலங்களின் வழியாக கெயில் நிறுவனம் எரிவாயுக் குழாய்கள் பதிப்பதனால், அந்நிலங்களின் மதிப்பு மிகக் கடுமையாக வீழ்ச்சியடையும் என்றும்;



2013 மார்ச் 25] [செல்வி ஜெ ஜெயலலிதா]

5. கெயில் நிறுவனத்தின் எரிவாயுக் குழாய் திட்டத்தில் கவரப்படும் விவசாய நிலங்களுக்கு, வங்கிகள் கடன் தர முன் வருவதில்லை என்றும்;

6. கெயில் நிறுவனத்தின் எரிவாயுக் குழாய் திட்டத்தை மாற்றுப் பாதையில் கொண்டு செல்ல சாத்தியப்படக்கூடிய பகுதிகளிலும் விவசாயிகளின் கோரிக்கைகள் கெயில் நிறுவனத்தால் கருத்தில் கொள்ளப்படாமல், விவசாய நிலங்களின் வழியாகவே எரிவாயுக் குழாய் பதிக்க கெயில் நிறுவனம் முனைந்துள்ளது என்றும்;

7. இத்திட்டம் விவசாயிகளின் முழு மனதான ஒப்புதல் பெறாமலும், விவசாயிகளுக்கும், நில உரிமையாளர்களுக்கும் முறையான தகவல் அளிக்காமலும், கெயில் நிறுவனத்தினால் செயலாக்கம் செய்யப்பட்டது என்றும்;

8. இக்குழாய்கள் பதிப்பதனால், விவசாயிகள் மற்றும் நில உரிமையாளர்கள் வாழ்நாள் முழுவதும் சிரமப்பட்டு உருவாக்கிய அவர்களின் வீடுகள், கோழிப்பண்ணைகள், கிணறுகள், ஆழ்குழாய்க் கிணறுகள் மற்றும் தண்ணீர்த் தொட்டிகள் கடுமையான சேதத்திற்கு உள்ளாகும் என்றும்;

9. விவசாயிகளின் நிலங்களில் எரிவாயுக் குழாய் பதிக்கப்படும் பகுதியில் ஆழமாக வேரூன்றும் மரங்கள் வளர்க்கக்கூடாது என கெயில் நிறுவனம் தடை செய்வதால், தென்னை மரம் மற்றும் பழவகை மரங்களைச் சார்ந்துள்ள இப்பகுதி விவசாயிகளின் வாழ்வாதாரம் மிகக் கடுமையாகப் பாதிக்கப்படும் என்றும்;

10. கெயில் நிறுவனத்தின் எரிவாயுக் குழாய்த் தடம் சில இடங்களில் அனுமதி பெறப்பட்ட வீட்டுமனைப் பிரிவுகள், கல்வி நிறுவனங்கள் வழியாகச் செல்வதால், அவ்விடங்களில் எரிவாயுக் கசிவு அல்லது பெரும் விபத்து ஏற்படக்கூடிய சாத்தியம் உள்ளது என்றும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக, 8–3–2013 அன்று கெயில் நிறுவனம் தமிழக அரசின் தலைமைச் செயலாளருக்கு அனுப்பிய கடிதத்தில், தேசிய நெடுஞ்சாலை வழியாகக் குழாய் பதிக்கும் பணியை மேற்கொண்டால், அந்தப் பணிகள் முடியும் வரை தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து பாதிப்புகள் ஏற்படும் என்றும்,

தேசிய நெடுஞ்சாலை வழியாகக் குழாய்கள் பதிக்கும் பணிகளுக்கு தேசிய நெடுஞ்சாலை ஆணையம் பொதுவாக அனுமதி வழங்காது என்றும், எதிர்கால விரிவாக்கத்தைக் கருத்தில் கொண்டு, தேசிய நெடுஞ்சாலை வழியாகக் குழாய் பதிப்பு மேற்கொள்ள இயலாது என்றும், ஒவ்வொரு எட்டு கிலோ மீட்டர் தூரத்திற்கு கூடுதல் வால்வு நிலையம் அமைக்க வேண்டியிருப்பதால், பாதுகாப்பு மற்றும் பராமரிப்புப் பிரச்சினைகள் ஏற்படும் என்றும், தேசிய நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள பகுதிகளில் குழாய்கள் பதிக்கும்போது, பாறைகள் உள்ள இடங்களில் பாறைகளை வெடிக்கச் செய்யும்போது, இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்கு போக்குவரத்து நிறுத்தப்பட வேண்டும் என்றும், ஏற்கெனவே வாங்கப்பட்ட பொருட்கள், குழாய்கள் மற்றும் திட்ட வடிவமைப்பில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

*முற்பகல் 11–25*

விவசாயிகள் மற்றும் நில உரிமையாளர்களின் ஆட்சேபணைகள் மற்றும் கெயில் நிறுவனத்தின் கருத்துகள் ஆகியவற்றை எனது தலைமையிலான அரசு கவனமாகப் பரிசீலித்தது. தேசிய நெடுஞ்சாலை வழியாகக் குழாய் பதிக்கும் பணிகளை மேற்கொள்ள முடியாததற்கு வலுவான தொழில்நுட்பக் காரணங்கள் எதையும் கெயில் நிறுவனம் தெரிவிக்கவில்லை. மாறாக, விவசாயிகள் தங்கள் வாழ்வாதாரம் எவ்வாறு பாதிக்கப்படும் என்பதை தெள்ளத்தெளிவாக எடுத்துக் கூறியுள்ளனர்.

விவசாயிகளின் வீழ்ச்சியில் தொழில் வளர்ச்சி ஏற்படுவதை நியாய உணர்வு கொண்ட யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஒரு திட்டத்தால் பாதிப்பு ஏற்படுமெனில், அதனால் யாருக்கு, எவ்வளவு பாதிப்பு என்பதையும், தேச நலன் எவ்வளவு என்பதையும் கருத்தில் கொண்டே முடிவு எடுக்கப்பட வேண்டும். இந்த அடிப்படையில், இந்தத் திட்டத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்து தேசிய நெடுஞ்சாலை வழியாகக் குழாய்கள் பதிக்கும் பணிகளை மேற்கொண்டால், திரவ எரிவாயு தொழிற்சாலைகளுக்கும், பொதுமக்களுக்கும் கிடைப்பது உறுதி செய்யப்படுவதோடு மட்டுமல்லாமல், விவசாயிகளின் வாழ்வாதாரமும் பாதுகாக்கப்படும் என்பதைக் கருத்தில் கொண்டு,





எனது தலைமையிலான அரசு கீழ்க்காணும் முடிவுகளை எடுத்துள்ளது:

1. கெயில் நிறுவனம் விவசாய விளை நிலங்கள் வழியாக எரிவாயுக் குழாய்களைப் பதிக்கும் தற்போதைய திட்டத்தினை உடனடியாகக் கைவிட வேண்டும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

2. இத்திட்டத்திற்கான குழாய்களைத் தமிழக விவசாயிகளின் வேளாண் நிலங்கள் பாதிக்காத வகையில் நெடுஞ்சாலைகளின் ஓரமாகப் பதிப்பதற்கு கெயில் நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

3. கெயில் நிறுவனம் ஏற்கெனவே நிலங்களில் குழாய்களைப் பதிக்க தோண்டியுள்ள குழிகளை உடனடியாகச் சமன்படுத்தி, *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்நிலங்களை அதன் முந்தைய நிலையில் விவசாயிகளிடமும், நில உரிமையாளர்களிடமும் ஒப்படைக்க வேண்டும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

4. விவசாயிகள் தங்களது விவசாயப் பணிகளைத் தொடரும் வகையில், ஏற்கெனவே பதிக்கப்பட்ட குழாய்களை கெயில் நிறுவனம் உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

5. இந்தத் திட்டத்தினால் பழவகை மரங்களையும் மற்றும் பிற கட்டுமானங்களையும் இழந்து, தற்போது வரை இழப்பீடு அளிக்கப்படாத விவசாயிகளுக்கும், நில உரிமையாளர்களுக்கும் உடனடியாக கெயில் நிறுவனம் உரிய இழப்பீட்டினை வழங்க வேண்டும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மேற்கண்ட தமிழக அரசின் முடிவுகள் சென்னை உயர் நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கப்படும்.

தேசிய நெடுஞ்சாலை வழியாகக் குழாய் பதிப்பு நடவடிக்கைகளை கெயில் நிறுவனம் மேற்கொள்ளலாம். இதன் தொடர்ச்சியாக, தமிழகத்திற்கு திரவ எரிவாயு வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளையும் கெயில் நிறுவனம் மேற்கொள்ள வேண்டும்.

"கெயில்" திட்டம் தொடர்பாக விவசாயிகள்மீது தொடரப்பட்ட அனைத்து வழக்குகளையும் திரும்பப் பெற நடவடிக்கை எடுக்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

'திட்டத்திற்காக மக்கள் அல்ல, மக்களுக்காகவே திட்டம்' என்பதில் (மேசையைத் தட்டும் ஒலி) எனது தலைமையிலான அரசு உறுதியாக உள்ளது என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் வாழ்வாதாரங்களைப் பாதிக்கும் எந்தத் திட்டத்திற்கும் எனது தலைமையிலான தமிழ்நாடு அரசு என்றைக்கும் உடந்தையாக இருக்காது என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) தங்கள்வாயிலாக, இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்து அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள 7 மாவட்டங்களை உள்ளடக்கிய விவசாயிகளைப் பாதுகாத்து, அவர்களின் வாழ்க்கையிலே, வாழ்க்கையின் அடித்தளத்தில், விளிம்பில் இருந்து கொண்டிருந்த எங்களுக்கு நல்ல நீதி கிடைக்கும், நியாயம் கிடைக்கும் என்று காத்துக்கிடந்த அந்த மக்களுக்கு, (மேசையைத் தட்டும் ஒலி) இதே சட்டமன்றப் பேரவையில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், விவசாயிகளைப் பாதுகாப்பதற்காக, 'திட்டத்திற்காக மக்கள் அல்ல, மக்களுக்காகவே திட்டம்' என்று, 7 மாவட்டங்களை உள்ளடக்கிய 28,000 விவசாயிகளைப் பாதுகாப்பதற்காக, விவசாய நிலங்களில் கெயில் நிறுவனம் குழாய் பதிக்கும் பணியை இடம் மாற்றி, வேறு வகையில் கொண்டு செல்லவேண்டும் என்றும், இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டை அந்த நிறுவனம் வழங்க வேண்டும் என்றும், விவசாயிகளின் நலன் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், தமிழகத்தினுடைய விவசாயிகளின் நலனும் உயர்த்தப்பட வேண்டும் என்றும், முழு அக்கறையோடு இன்று பேரவையில் அறிவித்திருக்கக்கூடிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகவும், தமிழகத்தில் உள்ள 7 மாவட்டங்களைச் சார்ந்த விவசாயிகள் சங்கத்தின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியினை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய உள்ளக் குமுறல்களையெல்லாம் மிகத் தெளிவாகப் புரிந்து, உணர்ந்து, அறிந்து, அதுமட்டுமல்லாமல், 'திட்டத்திற்காக மக்கள் அல்ல, மக்களுக்காகவே திட்டம்' என்ற அடிப்படையில், (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு வகையிலே சொல்லவேண்டும் என்று சொன்னால், கெயில் நிறுவனத்தின் எதேச்சதிகாரத்தை இந்த மன்றத்திலே வீழ்த்தி, விவசாயிகளினுடைய வாழ்வாதாரம் எல்லாவகைகளிலும் பாதுகாக்கப்படுவதற்கான சிறந்த அறிவிப்பை அளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள், சொல்லுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7 மாவட்ட விவசாயிகளுடைய வயிற்றில் பால் வார்த்தது போன்று, கடந்த சில மாதங்களாகப் போராடிக்கொண்டிருந்த விவசாயிகளுக்கு ஒரு விடிவு காலத்தை உருவாக்கக்கூடிய வகையில், கெயில் நிறுவனத்திற்கு இனிமேல் விவசாய நிலங்களில் குழாய்களைப் பதிக்க எந்தவிதத்திலும் அனுமதி அளிக்க இயலாது என்றும், ஏற்கெனவே பதித்த குழாய்களையும் உடனடியாக அகற்ற வேண்டும் என்றும், விவசாய நிலங்களையும் புனரமைத்திட வேண்டும் என்றும் உத்தரவிட்டிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு புதிய தமிழகம் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எரிவாயுக் குழாய்கள் பதிக்கும் திட்டத்தினை உடனடியாக நிறுத்தி, அவற்றை நெடுஞ்சாலைகளின் ஓரமாகப் பதிக்க உத்தரவிட்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், என்றைக்குமே தமிழக விவசாயிகளின் நலனில் அக்கறையோடு இருப்பார்கள் என்று மீண்டும், மீண்டும் தெரிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலும், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். நன்றி, வணக்கம்.

## 4. அறிக்கை அளித்தல்

### தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை உரிமைக் குழுவின் அறிக்கையை அளித்தல். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், அவை உரிமைக் குழுவின் தலைவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்களை தேசிய முற்போக்கு திராவிட கழகக் கட்சியினைச் சேர்ந்த சில சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் 8–2–2013 அன்று பேரவையில் தாக்கியது தொடர்பான அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்த அறிக்கையினை குழுவின் சார்பில் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. அரசினர் தீர்மானம்

**தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள்மீதான உரிமை மீறல் பிரச்சினையில் அவை உரிமைக் குழு அளித்த பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளுதல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.





***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இன்று பேரவைக்கு அளிக்கப்பெற்ற தேசிய முற்போக்கு திராவிட கழகக் கட்சியைச் சார்ந்த சில சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள்மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்த அவை உரிமைக் குழுவின் அறிக்கை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 229 (ஆ)–வின்கீழ் இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

(தேசிய முற்போக்கு திராவிட கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்), இந்திய தேசிய காங்கிரஸ் மற்றும் புதிய தமிழகம் கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)

முற்பகல் 11–35

இதில் பேசுவதற்கு என்ன இருக்கிறது? தீர்மானம்தானே! தீர்மானத்தை இப்போதுதான் ஆய்வுக்கு எடுத்துக்கொள்கிறோம். (குறுக்கீடுகள்) தீர்மானம் இப்போதுதான் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். இப்போதுதான் தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிறார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

[2013 மார்ச் 25

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மேற்படி அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 229(இ)–ன்கீழ் இப்பேரவை ஏற்றுக்கொள்கிறது"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பிரச்சினையில் விவாதத்திற்கு ஒன்றுமே இல்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள் சொல்கிறேன். இதில் விவாதிப்பதற்கு ஒன்றுமே இல்லை. ஏனென்றால் இந்த அவையிலேதான் எல்லாமே நடந்தது. எல்லோரும் பார்த்துக்கொண்டிருந்தோம். எவ்வளவு கீழ்த்தரமாக நடக்க முடியுமோ அவையில் அப்படி நடந்து கொண்டார்கள். வீடியோவில் யார் யார் இருக்கின்றார்கள், தவறு நடந்ததா இல்லையா என்று தெரிவதற்காகத்தான், அதை நான் அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பினேன். வீடியோவில் என்ன இருந்தது? யார் யார் ஈடுபட்டார்கள்? தாக்கியவர்கள் யார் யார் என்பதைத் தெரிந்துகொண்டு அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்பதற்காகத்தான் அவை உரிமைக் குழுவிற்குக் கொடுக்கப்பட்டது. அந்தக் குழுவிலே அனைத்துக் கட்சிகளினுடைய உறுப்பினர்கள் அங்கம் வகிக்கிறார்கள். உறுப்பினர்களுடைய கருத்துகளையெல்லாம் அந்தக் குழுவிலே ஏற்கெனவே நிறைய சொல்லியிருக்கிறீர்கள். சொன்னதற்குப் பின்னால்தான் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் டாக்டர். நான் உங்களுக்கு மைக் கொடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) ஏற்கெனவே உரிமைக் குழுவிலே எல்லா உறுப்பினர்களும் விவாதித்துவிட்டுத்தான் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்கள். இதிலே புதிதாகப் பேசுவதற்கு ஒன்றும் இல்லை. ஏனென்றால் இது அவையிலே நடந்திருக்கிறது. வேறு எங்காவது நடந்திருந்தால் பரவாயில்லை. இந்த அவையை எவ்வளவு கேவலப்படுத்த வேண்டுமோ, அவ்வளவு கேவலமாக நடந்துகொண்டார்கள்.

இன்னும் சொல்லப்போனால், இது முதல் தடவை இல்லை. ஏற்கெனவே இரண்டு, மூன்று தடவை நடந்திருக்கிறது. போன



2013 மார்ச் 25] [பேரவைத் தலைவர்]

தடவையெல்லாம் அவர்களுக்கு அவை உரிமைக் குழுவில் விளக்கம் அளிக்கப்பட்டது. ஆனால், ஓர் உறுப்பினரைத் தாக்குவது என்பது இந்த அவையை கேவலப்படுத்துகின்ற செயல். (குறுக்கீடுகள்) எவ்வளவு கீழ்த்தரமாக நடக்க முடியுமோ, அவ்வளவு தூரம் இந்த அவையில் நடந்துகொண்டார்கள். இதற்கு நீங்கள் பரிந்து பேசக்கூடாது. இந்த அவையில் நடக்கவில்லை என்கிறீர்களா? (குறுக்கீடுகள்) சம்பவம் நடக்கவில்லை என்று சொல்கிறீர்களா? சரி என்று ஏற்றுக்கொள்கிறீர்களா? (குறுக்கீடுகள்) திரு. சவுந்தரராசன், இதை சரி என்று ஏற்றுக்கொள்கிறீர்களா? (குறுக்கீடுகள்) தண்டனை அதிகம் என்பது பற்றியெல்லாம் பேச முடியாது. அதை உரிமைக் குழுவில் முடிவெடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். பேரவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

இன்று மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்து அவையிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி தேசிய முற்போக்கு திராவிட கழகத்தைச் சார்ந்த திரு. வி.சி. சந்திரகுமார், திரு. ப. பார்த்தசாரதி, திரு. து. முருகேசன், திரு. கு. நல்லதம்பி, திரு. எஸ். செந்தில்குமார், திரு. ஆர். அருள்செல்வன் ஆகிய 6 தேசிய முற்போக்கு திராவிட கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் இன்றிலிருந்து ஒரு வருட காலத்திற்கு அவை நடவடிக்கைகளிலிருந்து நீக்கப்படுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இக்காலத்தில் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் எந்தவிதமான ஆதாயத்தையும், ஊதியத்தையும், சலுகைகளையும், தகுதிகளையும் பெற முடியாது. எனவே, தேசிய முற்போக்கு திராவிட கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் திரு. வி.சி. சந்திரகுமார், திரு. ப. பார்த்தசாரதி, திரு. து. முருகேசன், திரு. கு. நல்லதம்பி, திரு. எஸ். செந்தில்குமார்,

திரு. ஆர். அருள்செல்வன் ஆகியோர் அவையைவிட்டு வெளியேற வேண்டுமென்று உத்தரவிடுகிறேன். வெளியேறுங்கள். (குறுக்கீடுகள்) இதற்கு மேலேயும் என்ன? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் நான் நிற்கிறேன் இல்லையா? நீங்கள் உட்காருங்கள். வீடியோ காட்சியைப் பார்த்துத்தான், உங்களுடைய கட்சி உறுப்பினரும் பார்த்துத்தான் அடையாளம் காட்டினார்கள். அதனால் ஒன்றும் இல்லை, நீங்கள் உட்காருங்கள்.

2013–2014 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கைமீது பொது விவாதம். (குறுக்கீடுகள்) வெளியேறுங்கள், வெளியேறுங்கள் இல்லையென்றால் வெளியேற்ற வேண்டி வரும். நீங்கள் வெளியேறவில்லையென்றால் நான் காவலர்களைக்கொண்டு வெளியேற்ற வேண்டி வரும். அவைக் காவலர்கள் ஆறு பேரையும் வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–40

(தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் திரு. வி.சி. சந்திரகுமார், திரு. ப. பார்த்தசாரதி, திரு. து. முருகேசன், திரு. கு. நல்லதம்பி, திரு. எஸ். செந்தில்குமார், திரு. ஆர். அருள்செல்வன் ஆகியோர் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)

(தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் (திரு. சி. மைக்கேல் ராயப்பன், திரு. செ. அருண் பாண்டியன், திரு. ஆர். சுந்தர்ராஜன் தவிர) அவையிலிருந்து வெளியேறினர்.)

திரு. சக்கரபாணி, உங்களுக்கு என்ன பிரச்சினை? தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அவர்களும் வெளியேறி விட்டார்கள். நீங்கள் உட்காருங்கள்.

(இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்), புதிய தமிழகம், திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)





## 6. வரவு–செலவுத் திட்டம், 2013–2014, பொது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2013–2014 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைமீது பொது விவாதம். திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.

**திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு"

குடிமக்களை அணைத்து, நல்லாட்சி நடத்தும் தலைவனின் அடியைப் பின்பற்றி நடக்கும் இந்த உலகம் என்ற தெய்வப்புலவன் வள்ளுவனின் குறளுக்கு இலக்கணமாய், அன்னை தமிழகத்தில் புனித ஆட்சி நடத்தி வருகின்ற வாழும் மனித தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய சிந்தனையில் புரட்சிப் பூவாய் மலர்ந்து, வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த அவையிலே தாக்கல் செய்யப்பட்டு இருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையிலே என்ன கொடுப்பார், ஏது கொடுப்பார் என்று இவர்கள் எண்ணும் முன்பே, பொன்னும், பொருளும் கொடுத்திருக்கின்றார், உணவும், உடையும் கொடுத்திருக்கின்றார், கல்வியும் வேலையும் கொடுத்திருக்கின்றார், நிதியும், வீடும் கொடுத்திருக்கின்றார். (குறுக்கீடு)

## 5. அரசினர் தீர்மானம்–தொடர்ச்சி

### தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள்மீதான உரிமை மீறல் பிரச்சினையில் அவை உரிமைக் குழு அளித்த பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளுதல்–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நாகரிகமாக நடந்துகொள்ளவேண்டும். வெளியேறிய உறுப்பினர்கள் வெளியே செல்கின்றபோது, மாண்புமிகு உறுப்பினர்

[திரு. கே.பி. முனுசாமி] [2013 மார்ச் 25

பேசிக்கொண்டு இருக்கின்றபோது, திரும்பவும் வந்து விரலைக் காட்டி, அதிகாரம் செலுத்தி விட்டுச் சென்றால் என்ன அர்த்தம்? சட்டசபையில் எவ்வாறு நாகரிகமாக நடந்துகொள்ளவேண்டுமென்று அவர்களுக்கு அறிவுரை கூறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் இவ்வாறு ஒழுங்கீனமாக நடக்கக்கூடாது. இதுபோல் ஒழுங்கீனமாக நடக்கும் உறுப்பினர்கள்மீது நடவடிக்கை எடுக்கவேண்டி வரும். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள், அவர்கள் கட்சியில் புதியதாகக் கூட்டு சேர்கின்றார்கள் என்றால், சேர்ந்துவிட்டுப் போகட்டும். நம்மிடம் எதற்காக இவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்?

## 6. வரவு–செலவுத் திட்டம், 2013–2014, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார், நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும், எண்ணிலடங்காத வளர்ச்சித் திட்டங்களையும், தொலைநோக்குத் திட்டங்களையும், மக்கள் நலன் காக்கும் திட்டங்களையும் வாரி, வாரிக் கொடுத்து இருக்கின்றார்கள். இத்தனையும் போதாது, போதாது என்றால், இன்னும் கொடுப்பார், இருப்பதையெல்லாம் கொடுப்பார், கொடுத்துக் கொண்டே இருப்பார் அன்னை தமிழக மக்களுக்காக. (மேசையைத் தட்டும் ஒலி) தன்னையே கொடுத்த தியாக சரித்திரம் படைத்திருக்கின்ற தெய்வத் தலைவி, மாண்புமிகு அம்மா அவர்கள். சாதிக்கு ஒரு நீதி என்று இருக்கின்ற தலைவர்களுக்கு மத்தியிலே, சகலருக்கும் ஒரே நீதி என்ற புதிய சகாப்தத்தை உருவாக்கி, சமூக நீதி காத்திட்ட வீரத் தாயே!



2013 மார்ச் 25] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

அமெரிக்காவிற்கு நல்வழி காட்டிய மார்ட்டின் லூதர் கிங்கைப்போல, ரஷ்யாவிற்கு நல்வழி காட்டிய லெனினைப்போல, சீனாவிற்கு நல்வழி காட்டிய மாவோ—வைப்போல, ஜெர்மனிக்கு நல்வழி காட்டிய பிஸ்மார்க்—கைப்போல, கியூபாவிற்கு நல்வழி காட்டிய ஃபிடரல் கேஸ்ட்ரோவைப்போல, ஆப்பிரிக்காவிற்கு நல்வழி காட்டிய நெல்சன் மண்டேலாவைப் போல, ரோமிற்கு நல்வழி காட்டிய ஸ்பார்ட்டகஸ்ஸைப் போல, இந்தியத் திருநாட்டிற்கு நல்வழி காட்டிட (மேசையைத் தட்டும் ஒலி) கருணையின் பிறப்பிடமாய், ஆற்றலின் வடிவாய், வீரத்தின் மொத்த உருவாய், நமக்குக் கிடைத்திட்ட ஒரே வழிகாட்டி, வாழும் மனித தெய்வம், அம்மா அவர்கள்தான்.

*முற்பகல் 11–45*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்திரனில் காலடியெடுத்து வைத்தபோது, ஆம்ஸ்ட்ராங் என்ன மகிழ்ச்சி அடைந்தாரோ, இமய மலை சிகரத்தில் ஏறியபோது, டென்சிங் என்ன மகிழ்ச்சி அடைந்தாரோ, அதைப்போன்றதொரு மகிழ்ச்சியை கழகத்தின் கடைக்கோடி தொண்டான நானும் அடைந்திடும் வகையிலே, *2013–2014* ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை வரவேற்றுப் பேசுகின்ற வரலாற்று வாய்ப்பினை எனக்கு வழங்கிய, வாழும் மனித தெய்வம் அம்மா; தங்களின் புனிதப் பாதங்களிலே பணிந்து, வணங்கி, கோடானு கோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, என் உரையைத் தொடங்குகின்றேன்.

“யாரோ போட்டு வைத்த பாதையில் நடப்பவர்களைவிட, புதிய பாதைகளை வகுத்துக் கொடுப்பவர்களைத்தான் இந்த பூமி விரும்புகின்றது” என்று கூறிய ஸ்பெயின் தேசத்தின் மிகச் சிறந்த கவிஞரான ஆண்டனியோ மச்சதோவின் வாய்மொழிக்கு இலக்கணமாய், இந்தியத் திருநாட்டில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் புதியதொரு வழியை வகுத்துக் கொடுக்கின்ற வகையிலே, வரிக்கு வரி, வரி போடாமல், வரிக்கு வரி, வரி உயர்வு இல்லாமல், வரிக்கு வரி வாரி, வாரி வழங்கிய (மேசையைத் தட்டும் ஒலி) கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் உணவளிக்கின்ற கடவுளைப் போல, அன்னை தமிழகத்தின் கடைக்கோடி குடிமக்களுக்கும் பலன் அளிக்கின்ற வகையிலே, நிதிநிலை

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2013 மார்ச் 25

அறிக்கையை உருவாக்கித் தந்து, தாய்த் தமிழ் நாட்டின் புதிய விடியலுக்கு வழிகாட்டிய வாழும் மனித தெய்வம் அம்மா அவர்களே!

"வரப்புயர நீருய ரும்
நீருயர நெல்லுய ரும்
நெல்லுயரக் குடியுய ரும்
குடியுயரக் கோலுய ரும்
கோலுயரக் கோனுயர் வான்"

என்ற ஔவைப் பாட்டியின் முதுமொழிக்கு ஏற்ப, இதுவரை இல்லாத அளவில், வேளாண்மைத் துறைக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் 5,189.15 கோடி ரூபாயை உயர்த்தி வழங்கி இருப்பதோடு,

"வங்கத்தி லோடிவரும் நீரின் மிகையால்,
மையத்து நாடுகளிற் பயிர் செய்குவோம்"

என்ற பாரதியின் பாடல் வரிகளுக்கு உயிர் கொடுக்கின்ற வகையில், குடகு விட்டுக் குதித்து வரும் காவிரியை, அடகு வைத்திட்ட சுயநலத் தலைவர்களுக்கு மத்தியிலே தன் பேரறிவால் (மேசையைத் தட்டும் ஒலி) தொடர் சட்டப் போராட்டம் நடத்தி, சங்கநாதம் புரிந்து, 2007 இல் பெறப்பட்ட காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை, மத்திய அரசிதழில் வெளியிட வைத்து, காவிரியை மீட்டு எடுத்து, வரலாற்றுப் புரட்சியை உருவாக்கியதோடு, (மேசையைத் தட்டும் ஒலி) "நீரின்றி அமையாது உலகு" என்ற வாக்கியத்தைக் கருத்திலே கொண்டு, மாநிலத்திற்கு இடையே பாயும் பெரு நதிகளை இணைப்பதற்கான திட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்தி வரும் அதே நேரத்தில், நமது மாநிலத்திற்குள் பாயும் நதிகளை இணைப்பதற்கான திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி வருவதோடு, தாமிரபரணி–கருமேனியாறு–நம்பியாறு இணைப்புத் திட்டம், கட்டளை கதவணையுடன் காவிரி–குண்டாறு இணைப்புத் திட்டம் ஆகியவற்றிற்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே 156.44 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருவதோடு, மூன்றாவது நதி இணைப்புத் திட்டமாக பெண்ணையாறு–பாலாறு இணைப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிற



2013 மார்ச் 25] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

வாழும் மனித தெய்வம் அம்மா அவர்களின் புனித பொற்கரங்களிலே, கங்கை–காவிரி இணைப்புத் திட்டத்தினை வகுத்துச் செயல்படுத்தும் மத்திய ஆட்சி அதிகாரத்தை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நாட்டு மக்கள் தந்திடும் அந்த பொன்னான நாள், வெகு தொலைவிலே இல்லை என்பதிலே இங்கே யாருக்கும் ஐயமில்லை.

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு"

என்ற தெய்வப் புலவரின் குறளுக்கு ஏற்ப, அன்னை தமிழகத்தில் அனைவருக்கும் உணவு கிடைக்கச் செய்திட, அனைவரின் பசிப் பிணியை அறவே அகற்றிட, விலையில்லா அரிசியை ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நாள் முதலாய் வழங்கி வருவதோடு, அரிசி விலையைக் கட்டுப்படுத்தும் வகையில், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் சிறப்பு அங்காடிகள்மூலமாக அரிசி கிலோ ஒன்றுக்கு 20 ரூபாய் என்ற விலையில் வழங்கி வருவதோடு, காய்கறி விலையைக் கட்டுப்படுத்த விவசாயிகளையும், நுகர்வோர்களையும் நேரடியாக இணைக்கக்கூடிய "பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள்" (Farm Fresh Consumer Outlets) திறப்பதோடு, மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கையால், தொடர்ந்து உயர்ந்து வருகின்ற அத்தியாவசியப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்த, பொது விநியோகக் கடைகள்மூலமாக துவரம் பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பு ஆகியவற்றை கிலோ ஒன்றுக்கு 30 ரூபாய் என்ற வகையிலும், பாமாயில் லிட்டர் ஒன்றுக்கு 25 ரூபாய் என்ற வகையிலும் வழங்கி வருவதோடு, அவசரக் காலங்களில் அத்தியாவசியப் பொருட்களை வாங்கி விநியோகம் செய்வதற்காக 50 கோடி ரூபாய் அளவிலே இருந்த விலை நிலைப்படுத்தல் நிதியின் அளவை 100 கோடி ரூபாயாக உயர்த்தியதோடு, உணவு மானியத்திற்காக 4,900 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, இந்தியாவிலே உள்ள அனைத்து மாநிலங்களிலும் உணவு இல்லை என்ற நிலை வந்தாலும், அன்னை தமிழகத்தில் உணவுப் பாதுகாப்பை வழங்கி, புரட்சி வரலாறு படைத்திட்ட சாதனைத் தலைவியே! (மேசையைத் தட்டும் ஒலி)

"அன்ன யானினும் புண்ணியம் கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத்தறி வித்தல்"

என்னும் மகாகவி பாரதியின் பாடல் வரிகளுக்கு உயிரூட்டுகின்ற

[திரு. ஆர். பி. உதயகுமார்] [2013 மார்ச் 25

வகையில், அனைத்துத் துறைகளையும் விட மிக உயர்ந்த ஒதுக்கீடாக பள்ளிக் கல்வித் துறைக்கு 16,965.30 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, அன்னை தமிழகத்தில் கல்விப் புரட்சியை நிகழ்த்திக் காட்டி, உலகத் தரம் வாய்ந்த உன்னதக் கல்வியை அன்னை தமிழகத்தின் மாணவச் சமுதாயத்திற்குத் தடையின்றி வழங்கிட்ட வாழும் மனித தெய்வம் அம்மா அவர்கள் வாரி, வாரி வழங்கி வருகின்ற கோடிகள்தான் எத்தனை? எத்தனை?

முற்பகல் 11–50

விலையில்லா மடிக்கணினி வழங்குவதற்காக 1,500 கோடி ரூபாயும், விலையில்லா மிதிவண்டிகள் வழங்குவதற்காக 200.98 கோடி ரூபாயும், விலையில்லா பாடப் புத்தகங்கள் வழங்குவதற்காக 217.22 கோடி ரூபாயும், விலையில்லா நோட்டுப் புத்தகங்கள் வழங்குவதற்காக 110.96 கோடி ரூபாயும், விலையில்லா நான்கு சீருடைத் தொகுப்புகள் வழங்குவதற்காக 353.22 கோடி ரூபாயும், விலையில்லா புத்தகப் பைகள் வழங்குவதற்காக 19.79 கோடி ரூபாயும், விலையில்லா காலணிகள் வழங்குவதற்காக 8.47 கோடி ரூபாயும், விலையில்லா வடிவியல் பெட்டிகளும், வரைபடப் புத்தகங்களும் வழங்குவதற்காக 6.65 கோடி ரூபாயும், விலையில்லா கம்பளி ஆடைகள் வழங்குவதற்காக 4.12 கோடி ரூபாயும், விலையில்லா சானிடரி நாப்கின் வழங்குவதற்காக 54.63 கோடி ரூபாயும், இலவசப் பேருந்துப் பயணச் சலுகை வழங்குவதற்காக 323.70 கோடி ரூபாயும் தாயுள்ளத்தோடு வாரி வழங்கி தியாக வரலாறு படைத்ததோடு, கடந்த இரண்டு ஆண்டுகளில் 22 புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளையும், ஒரு அரசு பொறியியல் கல்லூரியையும் திறந்து வைத்ததோடு, மேலும் 10 புதிய அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளையும், 2 புதிய அரசு பொறியியல் கல்லூரிகளையும் விரைவாகத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதோடு, இந்திய தகவல் தொழில்நுட்ப ஆய்வு நிறுவனத்தை பாரதிதாசன் தொழில்நுட்ப நிறுவன வளாகத்தில் தொடங்கிடவும், கூடுதலாக 8 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கிடவும் வழிவகுத்துக் கொடுத்துள்ளார்கள்.

“உற்றுழி யுதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே”



2013 மார்ச் 25] [திரு. ஆர். பி. உதயகுமார்]

கல்வி கற்க விரும்புகின்றவர்களெல்லாம் பெரும் பொருள் செலவழித்துத்தான் கல்வி கற்க வேண்டும் என்பதே அன்றைய புறநானூற்றுக் காலத்திலிருந்து நேற்றைய ஆட்சியாளர்கள் காலம் வரை இருந்தது என்பதை இந்த புறநானூற்றுப் பாடல் வரிகள்மூலம் அறிகின்ற நாம், இன்று

“உற்றுழி யுதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்பித்தல் நன்றே”

என்று அனைவரும் தரமான கல்வியை தடையின்றி பெற்றிட பெரும் பொருள் உதவியும், பெரும் நிதி உதவியும் செய்து கொடுத்து கல்வியைக் கற்பித்து வருகின்ற பொற்காலம், வாழும் மனித தெய்வம் நம் அம்மா அவர்களின் ஆட்சிக் காலம் மட்டும்தான் என்பதை இந்த மாபெரும் அவையிலே அமர்ந்திருக்கின்ற சான்றோர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள் என்பதிலே யாருக்கும் ஐயமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

வறுமையில்லா தமிழகத்தை உருவாக்க, அமெரிக்காவின் மார்டின் லூதர் கிங்–ஐப் போல கனவு காண்கிறேன் என, ‘தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம்–2023’–ன் வெளியீட்டு விழாவிலே மாண்புமிகு அம்மா அவர்கள், குறிப்பிட்ட அந்த இலட்சிய முழக்கத்தை நிறைவேற்றிக் காட்டுகின்ற வகையிலே, இந்த நிதிநிலை அறிக்கையிலே இன்னும் வாரி, வாரி வழங்கியிருக்கின்றார்கள்.

எண்ணிலடங்கா மக்கள் நலத் திட்டங்கள், எண்ணிலடங்கா வளர்ச்சித் திட்டங்கள், தொலைநோக்குத் திட்டங்கள், அந்த முத்தான திட்டங்களையெல்லாம் வரிசை வரிசையாகப் பட்டியலிட்டு வருகின்ற இந்த பொன்னான நேரத்திலே, நடைபெற்று முடிந்த தர்ம யுத்தத்தை வென்று, வீர வரலாறு படைத்திருக்கின்ற வாழும் மனித தெய்வம் அம்மா அவர்களின் வெற்றி வரலாற்றுப் பக்கங்களை மகிழ்ச்சியோடு புரட்டிப் பார்க்கையிலே, நடந்து முடிந்த அரசியல் போர்க்களத்தை வென்றெடுக்க களம் கண்ட இரண்டு போர்க் கப்பல்களிலே ஒரு கப்பலுக்குப் பெயர் ஜனநாயகப் போர்க் கப்பல், மற்றொரு கப்பலுக்குப் பெயர் குடும்ப போர்க் கப்பல்.

கருணையின் வடிவமாய், தியாகத்தின் பிறப்பிடமாய், புரட்சியின் இருப்பிடமாய், புதுமையின் புகலிடமாய், தாயுருவ தெய்வமாய்,

வாழ்ந்து வருகின்ற புனிதத் தலைவி அவர்கள் ஜனநாயகப் போர்க் கப்பலுக்கு தலைமையேற்று வழிநடத்துகிறார். சுயநலத்தையும், குடும்ப நலத்தையும் சுவாசமாகக்கொண்டு வாழ்ந்து வருகின்ற காலாவதி என்கின்ற தலைவர் குடும்ப போர்க் கப்பலுக்கு தலைமையேற்று வழி நடத்துகிறார்.

முற்பகல் *11–55*

அரசியல் போர் முனைக்குச் செல்லும்போது எடுத்துச் செல்ல வேண்டிய கருவிகளாக பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் குறிப்பிட்ட, கடமை என்னும் வாள்; கண்ணியம் என்னும் கேடயம்; கட்டுப்பாடு என்னும் கவசம் ஆகிய இம்மூன்று கருவிகளுடன், தர்மத்தை தனது அடையாளமாகக் கொண்டு, மாண்புமிகு புனிதத் தலைவி ஜனநாயகப் போர்க் கப்பலை அரசியல் போர் முனைக்கு வழிநடத்துகிறார்.

எதிர்புறத்திலே சூது, சூழ்ச்சி, துரோகம், பழி உணர்ச்சி, வஞ்சகம், பொறாமை, பதவி வெறி ஆகியவற்றை ஆயுதங்களாக எடுத்துக்கொண்டு, அதர்மத்தை தன் அடையாளமாகக் கொண்டு, காலாவதி தலைவர் குடும்ப போர்க் கப்பலை அரசியல் போர் முனைக்கு வழிநடத்துகிறார்.

இதற்கு இடையிலேதான், தன்னந்தனியாக இருளிலே படகை ஓட்டி வந்த கருப்புப் படகோட்டிக்கும் போர்க் கப்பலிலே ஏறி களத்திற்குச் செல்ல ஆசை. ஆனால், என்ன செய்வது? அந்தக் கருப்புப் படகோட்டிக்கு களத்திற்குச் செல்கின்ற வழியும் தெரியாது, களத்தைச் சந்திக்க வேண்டிய வலிமையும் இல்லாது, ஒற்றை மனிதனாய் நின்றுகொண்டு, ஜனநாயகக் கப்பலின் தலைவரான மாண்புமிகு புனிதத் தலைவியின் பொது நலத்தையும், குடும்பக் கப்பலின் தலைவரான காலாவதி தலைவரின் சுயநலத்தையும் பலநாள் பார்த்துப் பார்த்து உணர்ந்திருந்ததால் ஜனநாயக போர்க் கப்பலின் துணைக் கொண்டு அரசியல் போர்முனைக்குச் செல்வதற்காக மாண்புமிகு புனிதத் தலைவியிடம் அடக்கமாக அடைக்கலம் வேண்டினார்.

தன்னை நம்பி வந்தவர்களையெல்லாம் வாழ வைத்து, தியாக வரலாறு படைத்து வருகின்ற மாண்புமிகு புனிதத் தலைவி அம்மா அவர்களோ, (மேசையைத் தட்டும் ஒலி) அடைக்கலம் கேட்டு





வந்த, அந்தக் கருப்புப் படகோட்டிக்கு மட்டுமல்லாது, அவருடன் படகிலே வந்த அனைத்துப் பயணிகளுக்கும் ஜனநாயகப் போர்க் கப்பலிலே தாய் உள்ளத்தோடு இடம் கொடுத்து, பாதுகாப்பாக அரசியல் போர்க் களத்திற்கு உடன் அழைத்துச் செல்கின்றார். அங்கே சூழ்ச்சி என்னும் சூறாவளியைச் சந்தித்து, துரோகம் என்னும் சுனாமியை எதிர்கொண்டு, ஊழல் என்னும் திமிங்கலத்தை வீழ்த்தி, வன்முறை என்னும் சுறாவைச் சமாளித்து, கள்ளத்தனம் என்னும் இராட்சத அலையைத் தகர்த்து, எல்லையில்லா தன் வீரத்தால், அயராத தன் உழைப்பால், ஈடு இணையில்லாத தன் தியாகத்தால், அழியாத தன் ஆழ்ந்த அறிவாற்றலால், மாற்றார் போற்றும் தன் மதிநுட்பத்தால், ஆண்டவனின் அருள் ஆசி கொண்டு, மக்களின் பேராதரவுடன் குடும்ப போர்க் கப்பலை சுக்கு நூறாகத் தகர்த்தெறிந்து, காலாவதி தலைவனை அரசியல் போர் முனையிலிருந்து ஓட, ஓட விரட்டியடித்தார். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு குடும்ப ராஜ்யத்தை வீழ்த்தி சர்வாதிகாரத்தை ஒழித்து, ஆணவத்தை அடக்கி, அநீதியை அழித்து அன்னை தமிழகத்தில் ஜனநாயகத்தை மலரச் செய்ததோடு, ஜனநாயகப் போர்க் கப்பலில் தன் தலைமையேற்று உடன் வந்த பயணிகளுக்கெல்லாம் வெற்றி வீரர்களாகப் பட்டம் சூட்டி, புனித செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு அழைத்து வந்து, மக்கள் பணியாற்றுகின்ற, மாபெரும் மதிப்புமிக்க இந்த அரியாசனத்தை கருணை உள்ளத்தோடு வழங்கியபோது, அடையாளம் இழந்து, அடக்கமாக அடைக்கலம் கேட்டு, தன்னோடு அரசியல் போர்முனைக்கு வந்து வேடிக்கை பார்த்திட்ட அந்தக் கருப்புப் படகோட்டிக்கும் புனித செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலே மக்கள் பணியாற்றுகின்ற எதிர்திசையின் அரியாசனத்தை தெய்வ உள்ளத்தோடு வழங்கினார், வீரத்தாய் வேலு நாச்சியாரின் மறு உருவமாய் வாழ்ந்து வருகின்ற மாண்புமிகு புனிதத் தலைவி அம்மா அவர்கள்.

ஆனால், அதுவரை அந்த அரியாசனத்தைப் பார்த்திராத அந்தக் கருப்புப் படகோட்டி எதிர்திசை அரியாசனத்தில் அமர்ந்தவுடன் அடக்கத்தைத் துறந்து, வந்த வழி மறந்து, திடீரென்று கத்துகிறார், ஆடுகிறார், ஓடுகிறார், குதிக்கிறார், முறைக்கிறார், மிரட்டுகிறார், நாக்கைக் கடிக்கின்றார், திடீரென்று அருகில் இருப்பவர்களை அடிக்கின்றார். அவர் வழியிலே, அவரது பயணிகளும் வந்த பாதையிலே பயணத்தைத் தொடங்குகிறார்கள். மொத்தத்தில் தலை,

[திரு. ஆர். பி. உதயகுமார்] [2013 மார்ச் 25

கால் புரியாமல் தலைகீழாக நடக்கின்றார், ஏன் இப்படியெல்லாம் கூப்பாடு போடுகின்றார், ஏன் இப்படியெல்லாம் ஒப்பாரி வைக்கின்றார் என்று விவரம் கேட்டால், அவரை நன்கு அறிந்தவர்கள் அச்சத்தோடு சொல்கிறார்கள்; காலையும், மாலையும் நாள் தவறாமல் தன் உடல் இயக்கத்திற்காக அயல்நாட்டு கசாயம் குடிப்பதை வழக்கமாகக் கொண்டு இருக்கின்றாராம் அந்தக் கருப்புப் படகோட்டி, அதனால்தான் இந்தத் தள்ளாட்டம் என்று. இப்படி காலையும், மாலையும் கசாயம் குடித்துவிட்டு தள்ளாட்டம் போடுவதையே வழக்கமாகக் கொண்டு வேடிக்கை காட்டுகின்ற இந்தக் கருப்புப் படகோட்டியின் பின்னால் சென்றால், நம் பாடும் திண்டாட்டம் ஆகிவிடும் என்று விழித்துக்கொண்ட அந்த *5* பேர் தப்பித்தோம், பிழைத்தோம் என்று மாண்புமிகு புனிதத் தலைவி அம்மா அவர்களைச் சந்தித்து தன்னிலை மறந்து தள்ளாட்டம் ஆடுகின்ற அந்தத் தலைவனின் நிலையை எடுத்துச்சொல்லி எங்கள் வழி தொடர வழி காட்டுங்கள் என்று வணங்கி நின்ற போது, வணங்கிய கரங்கள் விலகும் முன்னே, வரந்தரும் புனிதத் தலைவி, நம் அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) தன்னை நாடி வந்தவர்களை வாழ்த்தி, அவர்களின் பணி தொடர நல்வழி காட்டினார். தப்பி வந்த அந்த *5* பயணிகளும் தங்கள் தன்மானத்தைக் காப்பாற்றிக்கொண்ட மகிழ்ச்சியோடு பயணத்தைத் தொடர்வதைக் கவனித்து வருகின்ற கருப்புப் படகோட்டியுடன் மிச்சம் மீதம் இருக்கின்ற பயணிகளும் புனிதத் தலைவி காட்டுகின்ற நல் வழியிலே தங்கள் பயணத்தையும் தொடர சுப முகூர்த்த நாள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்று பத்திரிகைச் செய்தி வந்துகொண்டேயிருக்கிறது.

நண்பகல் *12–00*

ஆகவே, கருப்புப் படகோட்டியே, கருப்புப் படகோட்டியே, உன்னால் சிறுவர்கள் விளையாடுகின்ற கில்லி விளையாட்டிற்குக்கூட தலைவனாக முடியாத நிலை இருக்கும்போது, இங்கே வந்து 'நான்தான் தலைவன், நான்தான் தலைவன்' என்று கூப்பாடு போடுவதையும், ஒப்பாரி வைப்பதையும் உடனே நிறுத்திவிட்டு, தன் தகுதியையும், தன் நிலையையும் முதலிலே புரிந்துகொள்ள வேண்டுமென்று கருப்புப் படகோட்டியிடம் அன்போடு வேண்டுகிறது அன்னை தமிழகம்.



2013 மார்ச் 25] [திரு. ஆர். பி. உதயகுமார்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓநாயின் கிடைக்குள்ளே சிக்கிக்கொண்ட அப்பாவி ஆடுகளைப்போல, இரத்த வெறி பிடித்த இராஜபக்சே கும்பலிடம் சிக்கித் தவித்த நம் இனத் தமிழர்களை, கொத்து, கொத்தாகக் கொன்று குவித்து, உலகின் மிகப் பெரிய இனப் படுகொலையை நடத்தியபோது, இங்கே நாளுக்கொரு பாராட்டு விழா, நித்தம் ஒரு கொண்டாட்டம், கவர்ச்சி ஆட்டம், பாட்டம் எனக் கண்டுகளித்து, தமிழினத்திற்கு துரோகம் செய்திட்ட கருணாநிதி போன்றவர்களை ஓட, ஓட விரட்டியடித்து, அன்னை தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற உடனே இலங்கைக்கு எதிராக, மத்திய அரசு, ஐக்கிய நாட்டு சபையிலே தீர்மானம் கொண்டு வந்து போர்க் குற்றவாளிகளைத் தண்டிக்க . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. ஆர்.பி. உதயகுமார்:** நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டுமென்றும், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அவையிலே வீரத்தோடு தீர்மானம் கொண்டு வந்த உலகத் தமிழினத்தின் ஒரே பாதுகாவலர், (மேசையைத் தட்டும் ஒலி) வாழும் மனித தெய்வம், நம் அம்மா அவர்கள் மட்டுந்தான் என்பதை உலகத் தமிழினம் இந்த அவனிக்கு எடுத்துரைக்கின்ற வகையிலேதான் . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். வார்த்தைக்கு வார்த்தை குறுக்கிடக் கூடாது.

**திரு. ஆர்.பி. உதயகுமார்:** ஜெனிவாவிலே நடைபெற்ற மாபெரும் பேரணியிலே பங்கேற்ற உலகத் தமிழர்கள் எல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களின் திருவுருவப்படத்துடன் ஆங்கிலத்தில் 'Amma You can' என்ற வைர வரிகளுடன்கூடிய பதாகைகளை கையிலே ஏந்தி, அம்மா உங்களால் மட்டுந்தான் முடியும், அம்மா தமிழர்களைக் காப்பாற்ற உங்களால் மட்டுந்தான் முடியுமென்று அணி வகுத்து வந்த காட்சிதான் இதற்கு சாட்சி. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அடுத்து, உங்கள் உறுப்பினர் பேசப் போகிறார். நீங்கள் பேசும்போது அதுகுறித்துப் பேசுங்கள். அடுத்து நீங்கள்தான் பேசப் போகிறீர்கள்.

[2013 மார்ச் 25

**திரு. ஆர்.பி. உதயகுமார்:** இன்றைக்கு உலகத்தையே ஆளுகின்ற ஆற்றல் பெற்றிருக்கும், இந்தத் திருநாட்டின் வழிகாட்டி, வாழும் மனித தெய்வம் அம்மா அவர்களின் விலையில்லா மடிக்கணினி வழங்குகின்ற ஒரு புரட்சிகர சிந்தனையை வழிமொழிந்து, இந்தியாவின் மிகப் பெரிய மாநிலமான உத்திரப்பிரதேசத்திலே மாண்புமிகு முதலமைச்சராக அகிலேஷ் யாதவ் வர முடியும் என்று சொன்னால், . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசுகிறார் அல்லவா! உட்காருங்கள். வார்த்தைக்கு வார்த்தை குறுக்கிடக் கூடாது.

**திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு அம்மா அவர்களே, விலையில்லா 20 கிலோ அரிசி வழங்குகின்ற இரக்க சிந்தனையை வழிமொழிந்து, விலையில்லா கறவைப் பசுக்கள், ஆடுகள் வழங்குகின்ற பொருளாதார சிந்தனையை வழிமொழிந்து, விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்சார விசிறி வழங்குகின்ற புதிய சிந்தனையை வழிமொழிந்து, 14 வகையான கல்வி உபகரணங்களோடு 5,000/– ரூபாய் ஊக்கத்தொகை வழங்குகின்ற அறிவார்ந்த சிந்தனையை வழிமொழிந்து, தாலிக்குத் தங்கம் வழங்குகின்ற அன்பான சிந்தனையை வழிமொழிந்து, ரூ.1,000/– உதவித் தொகையாக வழங்குகின்ற கருணைமிகு சிந்தனையை வழிமொழிந்து, பசுமை வீடுகள் வழங்குகின்ற தயாள சிந்தனையை வழிமொழிந்து, இதுபோன்று மாண்புமிகு அம்மா அவர்கள் தருகின்ற ஆயிரம், ஆயிரம் அடுக்கடுக்கான ஆற்றல்மிகு சிந்தனைகளை நாடெங்கும் வழிமொழிந்து, (மேசையைத் தட்டும் ஒலி) வாழும் மனித தெய்வம் நம் அம்மா அவர்களை இந்தியத் திருநாட்டிற்கே தலைமையேற்கச் செய்திட எந்தவிதத் தியாகத்திற்கும் தயார், தயார் என போர் முழக்கம் செய்து, அணி வகுத்து நிற்கின்ற கோடானு கோடி தொண்டர்களிலே கடைக்கோடி தொண்டனாக இருக்கின்ற நானும், மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களிலே, நடைபெற இருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலின் வெற்றிச் செய்தியைக் காணிக்கையாக்க எந்தவிதத் தியாகத்திற்கும் தயார், தயார் என இந்தப் பொன்னான நேரத்திலே சூளுரை ஏற்று, நன்றிகூறி, அமைகின்றேன். நன்றி. வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள்.



2013 மார்ச் 25]

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்கள் தனது 13–வது வயதில் பொது வாழ்க்கையைத் தொடங்கி, தன்னுடைய 77 ஆண்டுக் கால அரசியல் பயணத்திலே, சந்திக்காத ஏற்ற இறக்கங்களே கிடையாது. எந்தச் சூழ்நிலையிலும் மனம் தளராமல் போராடுகின்ற வலிமையும், சக்தியும், ஆற்றலும், திறனும், நம்பிக்கையும் இந்த வயதிலும் அவருக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) விமர்சனங்களை எதிர்கொள்ளக்கூடிய, அதை ரசித்துக்கொண்டபடியே அரசியலிலும், இலக்கியத்திலும் ஆட்சித் திறனிலும், திரைத் துறையிலும், கலைத் துறையிலும், உணர்விலும், எழுத்திலும், பேச்சிலும் ஏன் இந்தியாவிற்கே வழிகாட்டும் புதிய, புதிய திட்டங்களை அறிமுகப்படுத்துவதிலும் சாதனை படைத்தவர் தலைவர் கலைஞர் ஆவார். (மேசையைத் தட்டும் ஒலி). மிக, மிக, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில், பெரிய அரசியல் பின்னணியோ அல்லது சமுதாயத்தில் பெரிய வளம் கொண்ட பொருளாதார பின்னணியோ எதுவும் இல்லாமல், தன் சொந்த உழைப்பாலும், முயற்சியாலும் இத்தனை ஆண்டு காலம் அரசியலில் தாக்குப்பிடித்து, பல வெற்றிகளைக் குவித்து சாதனை படைத்தவர் நம் தலைவர் ஆவார். (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய அளவில் அவருக்கு நிகராக வேறு ஒரு தலைவரை உதாரணமாகக் காட்ட முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) தான் சந்தித்த அனைத்து . . . (குறுக்கீடு)

பிற்பகல் 12–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொல்லுகின்ற கருத்தில்கூட கிஞ்சித்த அளவாவது நியாயம் இருக்க வேண்டும். இந்திய அளவில் அவருக்கு இணையான தலைவராக வேறு யாரையும் சொல்ல முடியாது என்று மிகப் பெரிய தவறான ஒரு தகவலை இந்த அவைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்துக்கொண்டிருக்கின்றார். இந்திய அளவில் பல்வேறு உலகத் தலைவர்கள் இருந்துகொண்டிருக்கின்றார்கள். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மறைந்து 25 ஆண்டு காலம் ஆகிறது. இன்றளவும் போற்றப்படக்கூடிய

[திரு. கே.பி. முனுசாமி] [2013 மார்ச் 25

தலைவர். அப்படிப்பட்ட தலைவர்கள் எல்லாம் இருக்கின்ற இந்த நாட்டில், அவருடைய வழித்தோன்றல்களாக இருக்கின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவிக்கிற திட்டங்களை *7* கோடி மக்களும் மகிழ்ச்சியாக ஏற்றுக்கொண்டிருக்கின்ற இந்தக் காலக்கட்டத்தில், *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்தியத் துணைக் கண்டத்திற்கே தலைமை ஏற்க வாருங்கள் என்று அழைக்கின்ற நிலையிலே இருக்கின்ற ஒரே ஒரு தலைவர், இந்தியத் துணைக் கண்டத்தில் புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தவிர வேறு யாரும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய சாதனை படைத்த தலைவர் அவர்களுடைய வாழ்த்துகளையும், வழிகாட்டுதல்களையும் உளப்பூர்வமாகப் பெற்றிருக்கின்ற நம்முடைய தளபதி அவர்கள், துணை முதல்வராக இருக்கின்றபோது, ஆற்றிய பணிகளை எண்ணி, எண்ணி வியந்து பார்க்கின்றேன். ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் நலிவடைந்தால், மக்களாட்சித் தத்துவத்தின் வலிமை புரையோடிவிடும் என்பதனால், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் *12,618* ஊராட்சிகளுக்கும் கட்டமைப்பு வசதிகளைச் செய்து முடித்திருக்கின்றவர் நம் தளபதி அவர்கள்.

இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை குறித்த நாட்களுக்குள் முடித்து, சாதனை படைத்திருக்கின்றவர் நம்முடைய முன்னாள் துணை முதல்வர் தளபதி அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* பெண்களுக்கு சுய சார்பும், சுய பாதுகாப்பும், பொருளாதார முன்னேற்றமும் வேண்டும் என்பதற்காக மகளிர் சுய உதவிக் குழுக்களை சமூக இயக்கமாக உருவாக்கித் தந்திருக்கின்றவர் முன்னாள் துணை முதல்வர் தளபதி அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட மக்களுக்கு ரூ.*1928* கோடியில், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு முன்னாள் துணை முதல்வர் அவர்கள் . . . *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.



2013 மார்ச் 25]

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவையிலே பல முறை பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. சுய உதவிக் குழுக்களை முதன்முதலிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் தொடங்கினார்கள். பெண்கள் எல்லா நிலைகளிலேயும் உயர வேண்டும் என்பதற்காக அம்மா அவர்களால் தொடங்கப்பட்டது சுய உதவிக் குழுக்கள் என்று இதே அவையிலே பதிவு செய்யப்பட்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *908.28* கோடி ரூபாயில், *871.24* கோடி மானியத்தில் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தின்மூலம் அப்பகுதி மக்களுக்கு நாள் ஒன்றுக்கு *10* கோடி லிட்டர் குடிநீர் கிடைத்திட, உழைத்து சாதனை படைத்திருக்கின்றவர் முன்னாள் துணை முதல்வர் நம் தளபதி அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* அத்தகைய . . . *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய தலைவர்களைப் பற்றி புகழ்ந்துகொள்வதிலே எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனால், திட்டங்களினுடைய செயல்பாடுகளைச் சொல்லி, அந்தத் திட்டங்கள் அவர்களால்தான் கொண்டுவரப்பட்டது என்று கூறுகின்றபோது, அதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தையும், நெம்மேலியிலே இருக்கின்ற கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தினையும் துவக்கி வைத்ததோடு சரி. அவர்கள் காலத்தில் கிட்டத்தட்ட *55* விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், பணியே நடைபெறாமல் *18* விழுக்காடோடு நின்றுவிட்டது. அதற்குரிய நிதியும்கூட சரியான முறையில் செலவிடப்படாமல் இருந்தது. மாண்புமிகு இதய

தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்பு, (மேசையைத் தட்டும் ஒலி) ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம், டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் ஏற்கெனவே அறிமுகப்படுத்தப்பட்டு, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் வடிவமைக்கப்பட்ட திட்டமாகும். புரட்சித் தலைவி அம்மா அவர்களால் வடிவமைக்கப்பட்ட திட்டம் என்ற காரணத்திற்காகவே காலம் கடந்து அந்தத் திட்டத்தைத் துவக்கினார்கள்.

*பிற்பகல் 12–10*

அப்படித் துவக்கிய அந்தத் திட்டம் சரிவர செயல்படாத காரணத்தினால், இந்த 22 மாதத்திற்குள்ளாக அந்தப் பணிகள் முடிக்கப்பெற்று, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் இன்னும் ஒரு சில வாரங்களிலேயே அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே வெளியில் சொன்ன கருத்தை இங்கே சொல்ல வேண்டிய சூழ்நிலை வருகிறது. அவர்களுடைய தலைவர் வெளியிலே சொன்னார்—இந்தத் திட்டமே நிறைவேறாது, நீதிமன்றத்திற்கெல்லாம் செல்ல வேண்டியிருக்கும், நாங்கள் ஆட்சிக்கு வந்தால்தான் முடியும் என்றெல்லாம் சொன்னார். ஆனால், இந்த சட்டசபைக் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பாகவே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் அந்தத் திட்டம் மக்களுக்குப் பயன்படச் செய்யப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கும், நெம்மேலியில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்கும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எவ்வளவு தூரம் முயற்சி செய்து, தலைவர் கலைஞர் அவர்கள் மத்திய அரசின் நிதி மந்திரியிடமும் முயற்சி செய்து, அந்த நிதியை வாங்கிக் கொடுத்தார். ஆட்சி தொடர்ந்து இருந்திருக்குமேயானால், நாங்களே அத்திட்டத்தை செய்து முடித்திருப்போம். மீதம் கொஞ்ச, நஞ்சப் பணிகள் இருந்தன. (குறுக்கீடு) மீதம் இருந்த பணிகளை . . .





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவரே ஒத்துக்கொள்கிறார். நாங்கள் ஆட்சிக்கு வந்திருந்தால், தொடர்ந்து முடித்திருப்போம் என்று அந்தச் செயல்பாடுகளைச் சரியாகச் செய்யாத ஒரு தலைவராக, முதல்வராக இருந்த காரணத்தினால்தான், யார் அந்த செயல்பாடுகளைத் தெளிவாக, வேகமாகச் செய்வார்களோ அவர்களை இந்த மாநிலத்தின் முதலமைச்சராக அமர்த்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள், பேசுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மக்களாட்சியில் தவிர்க்கப்பட முடியாத மற்றும் தவிர்க்கப்படக்கூடாத அம்சம், மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட சட்டமன்றம் சிறப்புற இயங்குவது. சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களால் தேர்தல்மூலம், மக்களாட்சிப் பண்பின்படி தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் தங்களது கடமையை சட்டமன்றத்தில் செவ்வனே ஆற்றுவதற்கு ஏற்ற சூழல் நிலவுதல் முக்கியத் தேவை. மக்களாட்சியில், சட்டமன்றத்தில் ஆளும் கட்சியினருக்கு இருக்கின்ற பேச்சுரிமை போன்ற உரிமைகளுக்கு நிகரான உரிமைகள் எதிர்க்கட்சியினருக்கும் உண்டு. சிலருக்கு சிலவற்றில் மட்டும் மக்களாட்சிப் பண்புகளைக் கைக்கொண்டு, பலருக்குப் பலவற்றில் வாய்ப்புகள் கிடைக்கப்பெறாமல் இருந்தால், அதை மக்களாட்சி என்று சொல்வதற்கில்லை. நாட்டில் வாழும் ஒவ்வொரு குடிமகனும் மகிழ்ச்சியில் வாழ வகை செய்யவேண்டியது மக்களாட்சியின் முதன்மைக் குறிக்கோள். அவ்வகையில், மக்கள் பிரதிநிதிகளாகிய சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சட்டமன்றத்தில் பேச உரிமையும்,

[திரு. நா. இராமகிருஷ்ணன்] [2013 மார்ச் 25

கருத்துகளைப் பரிமாற வாய்ப்பும் தினம், தினம் தவறாமல் வழங்கப்பட வேண்டும் என்பதுதான் உயர்ந்த ஜனநாயகம் ஆகும். எடுத்துக்கொண்ட துறை சார்ந்த விஷயங்களைப் பேசாது, சபையில் இல்லாத நபர்களைப் பற்றி . . .(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இந்த அவையை எந்த அளவிற்குக் கண்ணியத்துடன் நடத்திக் கொண்டிருக்கிறீர்கள், ஜனநாயகத்தோடு நடத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறந்துவிட்டு, இங்கே பேசிக்கொண்டிருக்கிறார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் உரிய அறிவுரையை அவருக்கு வழங்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** முடியுங்கள் என்று சொல்லாதீர்கள் Sir. மாண்புமிகு அமைச்சர் அவர்களே நேரத்தை எடுத்துக்கொண்டுவிட்டார்கள். விவாதங்கள், கருத்துப் பரிமாற்றங்கள் என்பவையே மக்களாட்சிக்கான வலிமையான ஆயுதங்கள். யாராகட்டும், எவராகட்டும், எக்கட்சியினராகட்டும், அந்த ஆயுதங்களைக் கூர்மழுங்கச் செய்துவிடாமல், இந்த அவைக்குப் பாதுகாப்புத் தரவேண்டும். ஜே.எஸ். மில் என்ற அரசியல் அறிஞர், மக்களாட்சி பெரும்பான்மைகூட ஜனநாயகத்தில் சில, பல நேரங்களில் கேடு ஏற்படுத்த வாய்ப்புள்ளது என்று சொன்ன கருத்தை எண்ணிப் பார்க்க வேண்டும். திரு. ஏ.எல். ஓவல் அவர்கள் சொன்ன கருத்தும் இங்கே நினைவுகூரத் தக்கது. தமது கருத்தினைச் சொல்ல தனக்கு உரிமை மறுக்கப்பட்டது என ஒருவரும் குறைகூறாத நிலையே நல்லதொரு முழுமையான மக்களாட்சி அம்சமாகும். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜனநாயக முறைப்படிதான் இங்கே அனைத்தும் நடைபெற்றுவருகின்றன. நீங்கள் பேசுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** இலாபம் ஈட்டுவதிலேயே குறியாக இருக்கும் தனியார் தொழில் முனைவோர் . . .(குறுக்கீடு)



2013 மார்ச் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அவைக்கு மக்களாட்சித் தத்துவத்தைப் பற்றி விளக்கமான, விளக்கவுரை கொடுத்துக்கொண்டிருக்கிறார். காலையில் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்த பதிலுரைக்குப்பின், எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் ஜனநாயகம் தழைத்தோங்கிக் கொண்டிருக்கிறது, மக்களாட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை அந்தப் பகுதியில் இருந்தவர்கள் வாழ்த்திப் பேசினார்கள். அதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் கருத்தைச் சொல்லி, அந்தக் கருத்திற்குத் தேவையான பதிலையும் பெற்றிருக்கிறார். எங்கே மக்களாட்சி இருக்கிறது? எங்கே ஜனநாயகம் இருக்கிறது? அது இங்கே இருந்துகொண்டிருக்கிறது. அவர்கள் ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைத்துவிட்டு, இன்று அவர்கள் இங்கே நீலிக்கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன், உங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** என்ன சார் நீங்கள்? பேசவே வேண்டாம் என்று சொல்லியிருக்கலாமே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அதுதான் பேசிக்கொண்டிருக்கிறீர்களே. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** ** என்ற காரணத்தினால்தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் இன்றைக்கு வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள் என்பதனை அமைச்சர் அவர்கள் மறந்துவிடக் கூடாது. (குறுக்கீடுகள்) நீங்கள் வாய்ப்பு கொடுத்திருப்பீர்களானால் . . .

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. வெளிநடப்பு செய்த்தனால் ** என்று சொல்லிவிட முடியாது. (குறுக்கீடு) நீங்கள் ** என்று பேசிய வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. ** இருக்கிறது. நீங்கள் நல்லபடியாகப் பேசி முடியுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** இலாபம் ஈட்டுவதிலேயே குறியாக இருக்கும் தனியார் தொழில் முனைவோர் இலாப வாய்ப்பு மிகுந்த தொழில்களிலே மட்டும் முதலீடு செய்ய விரும்புவர். இலாப வாய்ப்பு அதிகமில்லாத, சேவை மிகுந்த, அதேசமயம் நாட்டு மக்களுக்குத் தேவையான பயனுள்ள தொழில்களிலே முதலீடு செய்ய விரும்பமாட்டார்கள். தனியார் துறைகள் மேற்கொள்ள அஞ்சும் தொழில்களில் முதலீடு செய்து, மக்களுக்குச் சேவையாற்றுவதற்கு அரசு நிறுவனங்கள் ஏற்பாடு செய்ய வேண்டியது அவசியம் ஆகிறது. அதன் அடிப்படையிலேதான், மின் உற்பத்தி, மின் விநியோகம், போக்குவரத்து, கல்வி, மருத்துவம், குடிநீர், தொலைத்தொடர்பு, பால், எரிவாயு, பொது விநியோகத் திட்டம் போன்றவை நாடு முழுவதும் அன்றாடம் தேவைப்படும் இன்றியமையாத வசதிகளாகும். இத்தேவைகளை மக்களுக்குக் குறைந்த விலையில், சேவை நோக்கோடு பூர்த்தி செய்ய வேண்டியது அரசின் முதன்மையான கடமையாகும். மக்களுக்கு வசதிகளைச் செய்து தரும் அரசு, சேவை தொடர்பான பணிகளில் இலாப நோக்கின்றி இயங்க வேண்டும். பொதுமக்களின் நலன் எவ்வகையிலும் பாதிப்புக்கு உள்ளாகாத வகையில், பேணிப் பாதுகாக்கின்ற அரசிற்குப் பெயர்தான் மக்கள் நலன் நாடும் அரசு. அந்த மக்கள் நலன் நாடும் அரசைத்தான், நாட்டு மக்களும் விரும்புவார்கள். அதையே நானும் விரும்புகின்றேன். எனவே, அந்தவகையில், இந்த அரசு, மக்கள் நலன் நாடும் அரசாக இருந்து, பால் விலையைக் குறைத்து, பேருந்துக் கட்டணத்தைக் குறைத்து, தடையில்லா மின்சாரத்தை வழங்கி, மின் கட்டணத்தைக் குறைத்து, விண்ணைத் தொடும் விலைவாசியைக் கட்டுப்படுத்தி, VAT வரியை அறவே நீக்கி, சமையல் எண்ணெய் மற்றும் சமையல் பொருட்களின்மீது விதித்திருக்கும் வரியை நீக்கி, சொத்து மதிப்பு வழிகாட்டுதல் மீது விதித்திருக்கிற வரியைக் குறைத்து, மக்கள் நலன் தரும் அரசாக இருக்க வேண்டுமென்ற என் உவகையினை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





அதேபோல், தலைவர் கலைஞர் அவர்கள் 2006 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த நேரத்திலே ஒரு கிலோ அரிசியை ஒரு ரூபாய்க்கு வழங்கினார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள், பேசி முடியுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** ஒரு கிலோ அரிசியை ஒரு ரூபாய்க்கு வழங்கினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் ஆட்சிக்கு வந்த பிறகு, அதை இலவசமாக்கினார்கள். 2007–ல் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் அன்றைக்கு விலைவாசி உயர்வு ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, வெளிச் சந்தையில் 80 ரூபாய்க்கு விற்றுக்கொண்டிருந்த துவரம் பருப்பை 30 ரூபாய்க்கும், 80 ரூபாய்க்கு விற்றுக்கொண்டிருந்த உளுத்தம் பருப்பை 30 ரூபாய்க்கும், 70 ரூபாய்க்கு விற்றுக்கொண்டிருந்த பாமாயிலை 25 ரூபாய்க்கும் . . . .(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்கள் ஆட்சியிலே ஏதோ ஜனநாயகம் தழைத்ததுமாதிரி சொல்கிறார். இன்றைக்கு நாள் என்ன நாள்? மார்ச் 25. அன்றைக்கு 1989 ஆம் ஆண்டு இந்தச் சபையில் ஒரு முதலமைச்சர், சபாநாயகர் இருக்கும்போது, துச்சாதனன் வேலையை, ஒரு எதிர்க்கட்சித் தலைவரை, முன்னாள் முதலமைச்சரே அரங்கேற்றியவர்கள் இங்கே இருந்தார்கள். அது ஜனநாயகம், இது ஜனநாயகம் இல்லையா? அவர் பேசிக்கொண்டிருக்கிறார். தவறான தகவலைச் சொல்லக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்காக, பதுக்கல்காரர்களை அறவே ஒழித்திருக்கிறது. கள்ளக்கடத்தல்காரர்களை அம்மா அவர்கள், சிறப்புக் கவனமாக எடுத்து கண்காணித்ததனால் புலனாய்வுத் துறை இன்றைக்கு பலபேரை குண்டர் சட்டத்திலே போட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், விலைக் கட்டுப்பாட்டு நிதியம் என்ற ஒரு நிதியத்தை உருவாக்கி, அதற்கு 100 கோடி ரூபாய் ஒதுக்கிக் கொடுத்து, ஏறிய விலைவாசியைக் கட்டுப்படுத்த,

[திரு. செல்லூர் கா. ராஜூ] [2013 மார்ச் 25

என்னென்ன பொருட்களின் விலை ஏறியிருக்கிறதோ, அந்த விலையையெல்லாம் கட்டுப்படுத்துவதற்கு, அந்தப் பொருள்கள் குறைந்த விலையில், அதுவும் தரமான அரிசி, ஒரு கிலோ அரிசி, 20 ரூபாய்க்குக் கொடுப்பதற்கும், இன்றைக்கு 30 ரூபாய்க்கு பொது விநியோகத் திட்டத்திலே துவரம் பருப்பு வழங்குவதற்கும், பாமாயில் 25 ரூபாய்க்கு வழங்குவதற்கும் அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்து, தரமான அரிசி, விலையில்லா அரிசி 1 கோடியே 64 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. இராமகிருஷ்ணன், நேரமாகிவிட்டது. உங்கள் உரையை ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** 2007–ல் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின்மூலம் அவர்தான் துவரம் பருப்பு 25 ரூபாய்க்கும், உளுத்தம் பருப்பு 25 ரூபாய்க்கும், பாமாயில் 25 ரூபாய்க்கும் வழங்கினார் என்பதை மறந்துவிட்டு அமைச்சர் பேசுகிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், ஒரு நிமிடத்தில் உங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** என்னுடைய உரையில் குறுக்கீடு செய்து, என்னுடைய நேரத்தை அதிகமாக எடுப்பது ** என்று இங்கே நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகின்றேன். (குறுக்கீடு) அருமைக்குரிய தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தலைவரையெல்லாம் நீங்கள் ** என்று சொல்லாதீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கம்பம் நா. இராமகிருஷ்ணன் அவர்கள், ஜனநாயகமே சரியில்லை என்றுதான் தி.மு.க.–வை விட்டு மறுமலர்ச்சி தி.மு.க.–விற்குச் சென்றார். அங்கு ஜனநாயகம் இல்லை, குடும்ப ஆட்சி நடக்கிறது

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2013 மார்ச் 25] [திரு. ஆர். வைத்திலிங்கம்]

என்று போனவர்தான் இப்பொழுது ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுகிறார். நாங்கள் பொறுமையாக இருந்தோம். அங்கு தன்னை வலிமைப்படுத்திக்கொள்ள இப்பொழுது துதிபாடிக் கொண்டிருக்கிறார், பாடட்டும். கருத்தைச் சொல்லட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** புறாவும், சேவலும் மாறி மாறி வந்ததை அவர் மறந்துவிட்டுப் பேசுகிறார். இலையிலிருந்து புறா பிரிந்தது, சேவல் பிரிந்தது. இரண்டும் சேர்ந்து . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், நீங்கள் பட்ஜெட்டில் பேசுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** இரண்டும் சேர்ந்து எப்படி இணைந்து போனதோ . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பட்ஜெட்டில் பேசுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** அதுபோல நான் . . . (குறுக்கீடு) அதில் ஒன்றும் தவறு இல்லையே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமகிருஷ்ணன், பட்ஜெட்டில் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

*__மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணி இரண்டாகப் பிரிந்தது, ஒன்றாக இணைந்தது. இழந்த சின்னத்தை மீட்டோம். ஆனால், உங்கள் கட்சி இன்னும் இணையவில்லை. நீங்கள் யார் தலைமையேற்று சென்றீர்களோ, அவர் இன்னமும் அந்தக் கட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. இராமகிருஷ்ணன், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:**

> "உழுதுஉண்டு வாழ்வாரே வாழ்வார்மற்று எல்லாம்
> தொழுதுஉண்டு பின்செல் பவர்."

(குறுக்கீடு)

[2013 மார்ச் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த ஆட்சிக் காலத்தில், ரேஷன் கடைகளிலே இதையெல்லாம் நாங்கள் கொடுத்தோம், இவ்வளவு மானியம் வழங்கினோம்–துவரம் பருப்புக்கு இவ்வளவு கொடுத்தோம் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், அரிசிக்கு மானியம் வழங்கினார்களே தவிர, ரேஷன் கடைகளில் கொடுக்கப்பட்ட தானியங்களுக்கு எவ்வளவு மானியம் அவர்களுடைய ஆட்சியில் கொடுத்தார்கள் என்பது நினைவிருந்தால், தயவுசெய்து சொல்லட்டும். (குறுக்கீடு) தயவு செய்து, பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) ஒரே ஒரு நிமிடம். அவசரப்படுகிறார் அவர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் பேசட்டும்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** அவசரப்படுகிறார் அவர். நான் முதலில் கேட்கிற கேள்வியை நன்கு கவனமாகக் கேட்கச் சொல்லுங்கள். அரிசி மானியத்தைத் தவிர பிற தானியங்கள்–பருப்பு வகைகளுக்கும் கொடுக்கப்படுகிறது. பருப்பு வகைப் பொருட்களுக்கு மட்டும் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் எவ்வளவு மானியம் வழங்கினார்கள் என்பதை நினைவு இருந்தால் சொல்லட்டும். இல்லையென்றால், இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தானியங்களுக்கு மட்டும் மானியமாக வழங்கக்கூடிய நிதி எவ்வளவு என்று சொன்னால் ரூ.1,053 கோடி. சும்மா 4 ஆயிரம் என்று சொல்லிவிடக் கூடாது. தானியங்களுக்கு மட்டும் 1,053 கோடி ரூபாய் கொடுக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக உணவு மானியத்திற்காக ரூ.4,900 கோடியை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஏதோ தேவைப்படுகின்ற நேரத்தில், தேவைப்படுகின்ற கருத்துகளைச் சொல்லிவிட்டுச் செல்லக் கூடாது. ஆதாரத்தோடு சொல்ல வேண்டும். ஆதாரம் இல்லாமல் பொதுவாகச் சொல்லிவிடக் கூடாது. இன்று ஏழைகளின் அரசாக சிம்மாசனத்தில் வீற்றிருக்கின்ற அரசு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.



2013 மார்ச் 25] [திரு. கே.பி. முனுசாமி]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. இராமகிருஷ்ணன், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். நேரம் ஆகிவிட்டது. புதிய சப்ஜெக்ட்டுக்குப் போகாதீர்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொன்ன பிறகு, நான் பதில் சொல்லியாக வேண்டும் அல்லவா!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நீங்கள் அப்படியெல்லாம் பேசிக் கொண்டிருக்க முடியாது. நீங்கள் பேசி முடியுங்கள். உங்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரத்திற்குள் முடிக்க வேண்டும். உரையை முடியுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** அழியாப் பண்பாடும், பாரம்பரியம் உடையதும், பிற மொழி குடும்பங்களுக்குக் கடன் பெறாத இலக்கிய பாரம்பரியமும் கொண்ட பெருமைக்குரியது போன்ற பல சிறப்புகளை உடையது செம்மொழி அந்தஸ்து. செம்மொழி அந்தஸ்து கிடைக்கப் பெறாமல் நீண்டகாலம் தமிழ் மொழி இருந்தது. பாவேந்தர் செம்மொழி நூலகம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன் அவர்கள். (குறுக்கீடு) உரையை முடிக்கச் சொன்னால், அவர் புது சப்ஜெக்ட்டுக்குப் போனால் எப்படி? நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** உரை என்பது சுவைக்க முடியாத கடல் நீரைப் போன்ற பட்ஜெட். நெல் வடிவத்தில் அதனுள் அரிசி இல்லாத பதர் போன்ற பட்ஜெட். Old Wine in the new bottle–பழைய கள்ளு புதிய மொந்தை.

பிற்பகல் 12–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன் (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் உட்கார்ந்து பேசுவது சரியல்ல. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) கேட்கிறேன், கேட்கிறேன். கேட்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பி.ஜி. நாராயணன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. பி.ஜி. நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவு ஞானமும், அரசியல் ஞானமும் ஒருங்கே கொண்டு, கனிவான இதயத்தைப்பெற்று. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இப்படி எல்லோரும் எழுந்துநின்று பேசினால் எப்படி? உங்களுடைய உறுப்பினர்தானே இவ்வளவு நேரம் பேசினார்? உட்காருங்கள்.

**திரு. பி.ஜி. நாராயணன்:** மனிதாபிமானத்தின் மணிமகுடமாக, காலத்தை வென்று காவியம் படைத்துக் கொண்டிருக்கும் தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், வருங்கால இந்தியாவை வழிநடத்திச்செல்லும் தகுதியும், பேராற்றலும் படைத்த இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, என் உரையைத் துவங்குகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் என்ன பேசினார் என்பதை நான் அவரைக் கூப்பிட்டுக் கேட்கிறேன், அவர் என்ன பேசினார் என்று தெரியவில்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மாண்புமிகு உறுப்பினர்கள் மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவருடைய அனுமதியைப் பெற்றுத்தான் எழுந்து நின்று பேசவேண்டும். உட்கார்ந்துகொண்டு பேசுகின்ற மரபினை தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்கள் கைவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அண்ணன் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய நிதிநிலை அறிக்கையைப் பற்றி உரையாற்றுகின்றபோது, கடைசியில் தனது உரையை முடிக்கின்ற வார்த்தைகளாகச் சொன்னார்கள். “இந்த பட்ஜெட், கடல் நீரைப் போல, யாருக்கும் உபயோகமாக இருக்காது” என்று சொன்னார்கள். அவருக்கு ஒரு சிறிய கருத்தைப் பதிய வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் கடல் நீரையும் நன்னீராக்குகின்ற வல்லமை படைத்தவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், இப்பொழுது கடல் நீர் நன்னீராக்கப்பட்டு சென்னை மாநகர மக்களுடைய தாகத்தைத் தீர்த்துக் கொண்டிருக்கிறது என்பது வரலாற்று உண்மை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் உட்கார்ந்துகொண்டு பேசவேண்டாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு உறுப்பினர் சிறிய வட்டத்திலேயே இருந்துகொண்டிருக்கிறார். அதற்கு முன்பே மீஞ்சூரிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை ஆரம்பித்து, கடல்நீரைக் குடிநீராக மாற்றி சென்னை மக்களுக்கு ஏற்கெனவே வழங்கிவிட்டார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தயவுசெய்து, வரலாற்றை நன்றாகத் தெரிந்துகொண்டு கருத்தைச் சொல்லவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி நாராயணன், பேசுங்கள்.

**திரு. பி.ஜி. நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கை அனைத்து மக்களின் பாராட்டைப் பெற்றிருப்பதற்குக் காரணம், கடுமையான நிதி நெருக்கடி நிலவிவரும் சூழ்நிலையிலும், வரிச்சுமையை ஏற்றி மக்களைச் சிரமப்படுத்தாமல், புது வரி விதிப்போ அல்லது நடைமுறையிலுள்ள வரி விகிதத்தை உயர்த்தவோ தேவையில்லை என்று மாண்புமிகு அம்மா அவர்கள் முடிவு எடுத்திருக்கிறார்கள் என்பதுதான்.

தமிழகத்தை வளமாக்கவும், அனைத்துத் தரப்பு மக்களை வாழ வைக்கவும், தேவையான அம்சங்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் நிறைய இடம்பெற்றுள்ளன.

(மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் தலைமை)

சுவாமி விவேகானந்தர் பிறந்தநாள் விழாவில் உரை நிகழ்த்தும்போது, ஒரு கருத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னார்கள். ‘எனக்கு என்று யாரும் கிடையாது.

[திரு. பி.ஜி. நாராயணன்] [2013 மார்ச் 25

எனக்கு எல்லாமே மக்கள்தான். மக்களால் நான். மக்களுக்காக நான்' என்று கூறியதிலிருந்து மக்கள் நலனை மட்டும் கருத்தில்கொண்டு தியாக உணர்வோடும், அர்ப்பணிப்பு உணர்வோடும் மாண்புமிகு அம்மா அவர்கள் பணியாற்றி வருகிறார்கள் என்பதை உலகிற்கு உணர்த்திக் காட்டியிருக்கிறார்கள்.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆட்சியில் இல்லாதபோதும் மக்களுக்காக நடத்திய போராட்டங்கள், அம்மா அவர்களின் ஓய்வில்லாத உழைப்பு, விடா முயற்சி, தன்னலமின்மை ஆகியவற்றைக் கவனித்து வந்த மக்கள், கடந்த சட்டமன்றத் தேர்தலில் அளித்த மகத்தான வெற்றியின்மூலம், விண்ணையும், இந்த மண்ணையும் ஆளத் தகுதியான ஒரே தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை இந்திய மண்ணுக்கே உணர்த்திக் காட்டியிருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

ஆட்சிப் பொறுப்பேற்ற 20 மாத காலத்தில் வீழ்ச்சியுற்றிருந்த மாநிலத்தை மீட்டெடுத்து, மீண்டும் செழிப்பான வளர்ச்சிப் பாதையில் தமிழகத்தைக் கொண்டு சென்று கொண்டிருக்கிறார்கள். தேர்தல் காலத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளையும், மக்கள் எதிர்பார்ப்புகளையும், அனைத்துத் தடைகளையும் மீறி செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நோக்கம், முதன்மையான மாநிலமாக, வறுமையும் ஏழ்மையும் ஒழிக்கப்பட்ட வளமிக்க மாநிலமாக, வேலைவாய்ப்பற்ற இளைஞர்களே இல்லாத மாநிலமாக, அனைத்துத் தரப்பு மக்களின் கண்ணீரைத் துடைத்தெடுக்கக்கூடிய மாநிலமாக, எல்லோரும் எல்லாமும் பெற்று முழுவளர்ச்சி பெற்ற மாநிலமாக தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்பதுதான். அந்த எண்ணம் ஈடேற, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தாக்கல் செய்திருக்கிற இந்த நிதிநிலை அறிக்கை நிச்சயமாக உதவும். எண்ணற்ற புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

*பிற்பகல் 12–30*

காவிரி நீரைப் பெற அம்மா அவர்கள் பட்ட கஷ்டங்களைச் சொல்லி மாளாது. தண்ணீரைத் தர மறுத்த கர்நாடக அரசைக் கண்டித்து புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சென்னை



2013 மார்ச் 25] [திரு. பி.ஜி. நாராயணன்]

மெரினாவில் 1993 ஆம் வருடம் ஜூலை மாதம் 18 ஆம் தேதி தொடங்கிய உண்ணாவிரதம், ஜூலை மாதம் 21 ஆம் தேதி அன்றைய மத்திய அமைச்சர் திரு. வி.சி. சுக்லா அவர்கள் தண்ணீரைப் பெற்றுத் தருவதாக உத்தரவாதம் கொடுத்த பிறகுதான் முடிந்தது. 2007–லே வழங்கப்பட்ட காவிரி நடுவர் மன்றத்தினுடைய இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிட மைய அரசு காலந்தாழ்த்தியபோது, உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பைப் பெற்றுத்தான் மத்திய அரசிதழில் வெளியிட முடிந்தது. காவிரி நீரில் நமக்குள்ள உரிமை நிலைநாட்டப்பட்டுவிட்டது. இனிமேல் காவிரித் தண்ணீரைத் தர முடியாது என்று கர்நாடகம் சொல்ல முடியாது. இருந்தாலும், இந்த உரிமையை நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில், காவிரி மேலாண்மை வாரியத்தையும், காவிரி நீர் முறைப்படுத்தும் குழுவையும் அமைப்பதற்காக மத்திய அரசுக்கு உத்தரவிடக் கோரி 18–3–2013 அன்று உச்ச நீதிமன்றத்தை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அணுகியுள்ளது. காலம் தவறிப் பெய்த குறைவான பருவ மழையாலும், கர்நாடகம் காவிரியில் தண்ணீர் திறந்துவிட மறுத்ததாலும் காவிரிப் பாசனப் பகுதியிலே பயிர் இழப்பு ஏற்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 15,000 ரூபாய் வீதம் 3 இலட்சம் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக வழங்கப்பட்டுள்ளதை இந்த நிதிநிலை அறிக்கை எடுத்துக் காட்டுகிறது.

இது மட்டுமல்லாமல், சென்னை நீங்கலாக, மற்ற மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவித்து, நில வரியையும் இரத்து செய்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணமும் வழங்கிட அம்மா அவர்களுடைய அரசு முடிவு செய்துள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் வேலைவாய்ப்புப் பெறுவதற்கு ஒரு குடும்பத்திற்கான ஆண்டு உச்சவரம்பு 100 நாட்களிலிருந்து 150 நாட்களாக உயர்த்தி, பாதிக்கப்பட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கும் பயன் அளித்திட இந்த நிதிநிலை அறிக்கையிலே வழி செய்யப்பட்டிருக்கிறது.

வீட்டுமனைப் பட்டா வழங்குவதிலே தமிழகம் முன்னணியில் உள்ளது. 2012–2013 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை 1.2 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

[திரு. பி.ஜி. நாராயணன்] [2013 மார்ச் 25

2013–2014 ஆம் ஆண்டிலும் மேலும் 2 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அம்மா அவர்களுடைய அரசு தயாராக இருக்கிறது.

பொருளாதாரத்தில் உயர் வளர்ச்சியை அடைய அடுத்த 10 ஆண்டுகள் காலவரம்பைக் கருத்தில் கொண்டு, 2023–ல் நாடு எய்த வேண்டிய வளர்ச்சியை, நாடு எய்த வேண்டிய இலக்கை வகுத்திருப்பதோடு, தொலைநோக்குத் திட்டம் 2023, இரண்டாவது பகுதிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 15 இலட்சம் கோடி ரூபாய் செலவிட திட்டமிட்ட இந்தத் திட்டத்தில், தனியார் துறையிடமிருந்தும் முதலீடு பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் அடுத்த 10 ஆண்டுகளில் தனி நபர் வருமானத்தை ஆறு மடங்கு உயர்த்தவும், அனைத்துத் துறைகளிலும் மிகச் சிறந்த கட்டமைப்புகளை உருவாக்கிடவும் எல்லா வகைகளிலும் முதன்மை மாநிலமாகவும், தமிழ்நாட்டை அறிவுசார் தலைநகரமாகவும், புதுமைகள் படைக்கும் மையமாகவும் மாற்றத் திட்டமிட்டு 2013–2014 ஆண்டுக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதிக்காக 2,000 கோடி ரூபாயும், திட்ட வடிவமைப்பு நிதிக்காக 200 கோடி ரூபாயும் இந்த நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

தமிழகத்தில் கல்விப் புரட்சி ஏற்படுத்தத் திட்டமிட்டு, இந்த நிதிநிலை அறிக்கையில் மற்ற துறைகளைவிட பள்ளிக் கல்விக்கு மட்டும் 16,965.30 கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது. தமிழகத்தில்தான் கட்டணமில்லா கல்வி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மாணவர்களுக்குப் பாடப் புத்தகமும், சீருடை, காலணி, நோட்டுப் புத்தகம், புத்தகப் பை, பஸ் பாஸ், சைக்கிள், கணினி போன்ற எல்லாமும் விலையில்லாமல் வழங்கப்படுகின்றன. மடிக் கணினி வழங்குவதன்மூலம் மாணவர்கள் தகவல் தொழில்நுட்ப அறிவில் சிறந்து விளங்குவதோடு அவர்களின் சர்வதேசப் போட்டியில் கலந்துகொள்ளும் தகுதியும், திறனும் வளர்க்கப்படுகிறது. உயர் கல்வி பெறுவதற்காக கடந்த இரண்டாண்டுகளில் மட்டும் 22 புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், இந்த ஆண்டு 8 புதிய கல்லூரிகளும், ஆக 30 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 10 புதிய அரசு பல் தொழில்நுட்பக் கல்லூரிகளும், 3 புதிய அரசு பொறியியல் கல்லூரிகளும், ஆக மொத்தம் 43 புதிய கல்லூரிகள் தொடங்கப்பட்டிருப்பது பாராட்டத்தக்க அம்சமாகும்.



2013 மார்ச் 25] [திரு. பி.ஜி. நாராயணன்]

பிற்பகல் 12–35

ஆரம்பத்தில் அமரர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் 100 கோடி ரூபாயில் துவங்கிய சத்துணவுத் திட்டம், படிப்படியாக விரிவாக்கப்பட்டு, இன்றைக்கு மிகப் பெரிய திட்டமாகச் செயல்படுத்தப்படுகிறது. இந்த நிதிநிலை அறிக்கையில் சத்துணவுக்கு 1,492.86 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. பள்ளி மாணவர்களுக்கு அறிவு வளர்ச்சியும் வேண்டும், உடல் வளர்ச்சியும் வேண்டும் என்று தரமான கல்வியும், தரமும், ருசியும் மிகுந்த 13 வகை கலவை சாதமும் அம்மா அவர்களின் முயற்சியால் வழங்கப்படுவதை அனைவரும் பாராட்டுகிறார்கள்.

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த மாண்புமிகு அம்மாவின் அரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது. மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் எண்ணெய் நிறுவனங்களே எரி பொருட்களின் விலையை நிர்ணயம் செய்துகொள்ளலாம் என்ற தவறான நடைமுறையினாலும் பெட்ரோல், டீசல் விலை தொடர்ந்து உயர்த்தப்பட்டு வருவதால், அத்தியாவசியப் பொருட்களின் விலை தொடர்ந்து உயர்ந்து கொண்டே வருவதைக் கவனித்த மாண்புமிகு அம்மா அவர்கள், விலைவாசியைக் கட்டுக்குள் கொண்டுவர விலைவாசி கட்டுப்பாடு நிதியம் அல்லது நிலைப்படுத்தல் நிதியை இந்த நிதிநிலை அறிக்கையில் 100 கோடி ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள்.

அரிசி விலையைக் கட்டுப்படுத்த அமுதம் அங்காடிகள், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் சிறப்பு அங்காடிகள் மூலம் 1 இலட்சம் மெட்ரிக் டன் அரிசியை கிலோ ஒன்றுக்கு 20 ரூபாய் என்று வெளிச் சந்தையில் விற்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. காய்கறி விலையைக் கட்டுப்படுத்த விவசாயிகளையும், நுகர்வோரையும் நேரடியாக இணைக்கக்கூடிய பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் திறக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதைப் போல், பொது விநியோகக் கடைகள்மூலம் துவரம் பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பு ஆகியவற்றை கிலோ ஒன்றுக்கு 30 ரூபாய் என்ற விலையிலும், பாமாயிலை லிட்டர் ஒன்றுக்கு 25 ரூபாய் என்ற விலையிலும் தொடர்ந்து விநியோகம் செய்வதன் மூலமும் விலைவாசி நிச்சயமாகக் குறையும் என்று மக்கள் நம்புகிறார்கள்.

[திரு. பி.ஜி. நாராயணன்] [2013 மார்ச் 25

இரண்டாம் பசுமைப் புரட்சியை உருவாக்க வேளாண்மைத் துறைக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு, இதுவரை இல்லாத அளவில், இந்த ஆண்டிற்கான ஒதுக்கீடு *5,189.15* கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. சொட்டுநீர்ப் பாசனம்மூலம் நீரை சேமித்துப் பயன்படுத்த இந்த நிதிநிலை அறிக்கையில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் *520* கோடி ரூபாய் செலவில் *1.30* இலட்சம் ஏக்கர் பயிர் நிலம் சொட்டுநீர்ப் பாசனத்தின்கீழ் கொண்டுவரவும், பயன்பாட்டின் உச்சவரம்பு ஒரு ஏக்கர் என்பதை நீக்கவும், தரமான நிறுவனங்களைத் தேர்வு செய்ய விவசாயிகளுக்கு முழு சுதந்திரம் அளிக்கவும் நிதிநிலை அறிக்கையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. வேளாண் விளை பொருள் பதப்படுத்தும் தொழிற்சாலை நிறுவ *20* கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சேமிப்புக் கிடங்கு வசதிகளை அதிகரிக்கும் முயற்சியை தொடர்ந்து அம்மாவின் அரசு நிறைவேற்றும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது.

வரலாறு மனிதனை உருவாக்குவதில்லை. மனிதன்தான் வரலாற்றை உருவாக்கி வழிகாட்டுகிறான். தனது வாரிசுகளுக்காக பத்து தலைமுறைகளுக்கும் மேல் சொத்து சேர்ப்பவர்கள், தொண்டனின் வியர்வையிலும், கண்ணீரிலும் காசு பார்க்க நினைப்பவர்கள் இவர்கள் யாரும் சக்திவாய்ந்த தலைவர்கள் அல்ல! பிறகு யார் சக்திவாய்ந்த தலைவர்? அடித்தட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் பாடுபடும் இலட்சியம் கொண்டவர்களே சக்திவாய்ந்த தலைவர்கள். மக்களின் தேவைகளை அறிந்து நடந்துகொள்ளும் பக்குவம், நாட்டின் முன்னேற்றத்திற்கு எது சிறந்தது என்பதைத் தெரிந்துகொள்ளும் ஆளுமைத் திறன், அதிகாரிகளை முனைப்புடன் செயல்பட வைக்கும் சாமர்த்தியம், எந்த நேரத்திலும் முனை மழுங்காமல் செயல்படும் நேர்மை போன்ற பல குணங்கள் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி செய்வதால்தான், தமிழகம் முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டு இருக்கிறது என்பது மறுக்கமுடியாத உண்மை.

தேர்தலுக்குப் பிறகு அ.இ.அ.தி.மு.க. என்ற கட்சியே இருக்காது என வாய்ச்சவடால் விட்ட பசுத்தோல் போர்த்திய புலிகள், இன்று இருக்கிற இடம் தெரியாமல், பாதுகாப்பான இடத்தைத் தேடி பதுங்கிக் கொண்டிருக்கிறார்கள். அரசியலில் இருந்து ஒதுங்கி நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள். மகா சக்திவாய்ந்த அம்மா



2013 மார்ச் 25] [திரு. பி.ஜி. நாராயணன்]

அவர்கள் அவ்வப்போது ஆட்சியிலும், கட்சியிலும் மாற்றத்தை ஏற்படுத்தி வருவதை அதிசயமாக மக்கள் பார்க்கிறார்கள். பாஞ்சாலியினுடைய அவலக்குரல் கேட்டு ஓடிவந்து காப்பாற்றிய கிருஷ்ணரைப்போல, மக்களின் துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் பரிகாரம் காண வந்தவர்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். துச்சாதனன், துரியோதனன் கூட்டத்தை வேரோடும், வேரடி மண்ணோடும் ஒடுக்க அவதரித்த மக்கள் தலைவிதான், மாண்புமிகு அம்மா அவர்கள். சூழ்நிலைக்கேற்ப கட்சியிலும், ஆட்சியிலும் மாபெரும் மாற்றத்தையும், புரட்சியையும் ஏற்படுத்துவதில் இவருக்கு நிகர் இவரே என்று நடுநிலையாளர்கள் நம்புகிறார்கள்; பாராட்டுகிறார்கள்.

பிற்பகல் *12–40*

ஒட்டுமொத்த உலக அரசியலையும் தன்னுடைய நுண்ணறிவால் அலசி ஆராய்ந்து பார்த்து, தலைசிறந்த ஆளுமைத் திறனைப் பெற்றிருப்பவர் நம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். நாடே போற்றும் அரசியல் தீர்க்கதரிசியாக; அரசியல் ஞானம் படைத்த தெய்வீக சக்தி படைத்தவராக; பன்மொழிப் புலமை படைத்த ஒப்பற்ற தலைவியாக; உலகத் தமிழர்களுடைய உண்மையான பாதுகாவலராக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தவிர, வேறு யாரும் இருக்க முடியாது. வருங்கால இந்தியாவை ஆள்வதற்கு வல்லமை பொருந்திய ஒரு தலைமை வேண்டும். தீய சக்திகளுக்கு அஞ்சாமலும், ஊழலையும், தீவிரவாதத்தையும் ஒழித்துக்கட்டும் பேராற்றல் கொண்ட தலைமை வேண்டும். இந்தியா என்றாலே எதிரிகளை சரணாகதி அடைய வைக்கும் ஏற்றமிகு தலைமை இருக்கிறது என்ற எண்ணம் வேண்டும். இப்படிப்பட்ட தலைமைக்கான பண்புகளும், இந்தியாவை வழி நடத்திச் செல்லும் ஆற்றல், அறிவு, திறமை, துணிவு ஆகியவை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு என்பதை அத்வானி போன்ற வட நாட்டுத் தலைவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியாவினுடைய வளர்ச்சியை உலக அரங்கில் முதல் இடத்திற்குக் கொண்டு செல்லவும், வறுமை இல்லாத இந்தியாவை, வன்முறை மற்றும் தீவிரவாதம் இல்லாத ‘வல்லரசு’ இந்தியாவை உருவாக்கிடவும், தமிழகத்தினுடைய

[திரு. பி.ஜி. நாராயணன்] [2013 மார்ச் 25

உரிமைகளைப் பெற்றிடவும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பிரதமராக வந்தால்தான் முடியும் என்பதை நாடே அறியும்.

திருக்குறளில் சொல்லியிருப்பதைப் போல, அஞ்சாமை, ஈகை, அறிவுடைமை, ஊக்கமுடைமை இவை நான்கும் அமையப் பெற்ற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நாளை மட்டுமல்ல, எந்நாளும் இந்தியப் பிரதமராக இருக்க தகுதியானவர். *(மேசையைத் தட்டும் ஒலி)* பெண் குலத்தின் பொன்விளக்கு, ஏழையெளிய மக்களினுடைய இதய தெய்வம், வரும் நாடாளுமன்றத் தேர்தலில் *40* தொகுதிகளிலும் வென்று, தீவிரவாதம் இல்லாத பொற்கால இந்தியாவை உருவாக்கி உலகத்திற்கே வழிகாட்டுவார் என்பது நிச்சயம் மட்டுமல்ல, அதுதான் காலத்தின் கட்டாயம் என்று சொல்லி, உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கையின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே கருத்துகளைப் பதிவு செய்வதற்கு வாய்ப்பு அளித்திருக்கிற தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் இருக்கிற மீனவர்கள், இலங்கை இராணுவத்தினரால் தொடர்ந்து தாக்கப்படுகிறார்கள். மீனவர்களைக் கைது செய்தல், மீன் வலைகள் மற்றும் படகுகள் உட்பட நாசப்படுத்தப்படுவது போன்ற அராஜகங்களை இலங்கை இராணுவம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. பலமுறை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சார்பிலும், தமிழக அரசின் சார்பிலும் மத்திய அரசை எவ்வளவு வலியுறுத்தியபோதும் இலங்கை அரசைக் கட்டுப்படுத்தவோ, தமிழக மீனவர்களைப் பாதுகாக்கவோ மத்திய அரசு ஒரு திராணியற்ற அரசாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு தமிழக மீனவர்களைப் பாதுகாக்க, மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவும், சிறையிலே இருக்கிறவர்களை விடுதலை செய்வதற்கான நடவடிக்கை எடுக்கவும் வேண்டுமென்று இந்த நேரத்திலே வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.



2013 மார்ச் 25] [திரு. க. பாலகிருஷ்ணன்]

தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டுகின்ற வகையில், கிடப்பிலே போடப்பட்ட காவிரி நதிநீர் நடுவர் மன்ற இறுதி ஆணையை மத்திய அரசிதழிலே வெளியிடுவதற்கு உறுதியான நடவடிக்கையை மேற்கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இப்போதும்கூட, மத்திய அரசு, தமிழர்களின் நலனுக்கு விரோதமாக, காவிரி நடுவர் மன்ற இறுதி ஆணையை செயல்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை மறுத்து வருகிறது. மேலாண்மைக் குழு அமைப்பது, நீர் முறையீட்டுக் குழுவை அமைப்பது போன்றவற்றை நிறைவேற்றி, காவிரித் தண்ணீரைத் தொடர்ந்து பெறுவதற்கு மீண்டும் தமிழக அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தை அணுக வேண்டிய கட்டாய நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். நிச்சயமாக தமிழகத்திற்குத் தொடர்ந்து துரோகம் இழைத்து வருகிற மத்திய அரசை, தமிழக மக்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள் என்பதை இந்த நேரத்திலே இங்கே நான் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 12–45*

மக்களின் வாழ்வை நாசமாக்கும் மோசமான மத்திய அரசின் கொள்கைகளை எதிர்த்து, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தொடர்ந்து குரல் கொடுத்து வருவதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். *(மேசையைத் தட்டும் ஒலி)* மானியங்களை வெட்டுவது, டீசல், பெட்ரோல் போன்ற பொருட்களின் விலையை அடிக்கடி உயர்த்துவது, டீசலுக்கு இரட்டை விலைக் கொள்கையைத் தீர்மானித்து, மாநில அரசுக்குக் கூடுதல் நிதிச் சுமையை உயர்த்துவது, மாநிலத்திற்கான உணவு, மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்கான ஒதுக்கீட்டைக் குறைப்பது போன்ற அடுக்கடுக்கான தாக்குதல்களைத் தொடுத்து, மத்திய அரசு கூட்டாட்சித் தத்துவத்தையே குழி தோண்டிப் புதைக்கிறது. அப்படிப்பட்ட மத்திய அரசை எதிர்த்து, தமிழக அரசும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும் மேற்கொள்கிற முயற்சிக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிற அதேநேரத்தில், அத்தகைய நடவடிக்கைகளுக்கு நாங்கள் துணை நிற்போம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2013 மார்ச் 25

மத்திய அரசு, தமிழகத்திற்கான நிதி ஒதுக்கீட்டையும், வரிப் பங்கீட்டையும் குறைத்து வருகிற சூழ்நிலையிலும், மானியங்களையும், மக்கள் நலத் திட்டங்களையும், மத்திய அரசு வெட்டிச் சுருக்கி வருகிற நிலையிலேயும், இந்த நிதிநிலை அறிக்கையில் புதிய வரிகள் இல்லாமல், மக்கள் தலையிலே சுமைகளை ஏற்றாமல், ஏற்கெனவே இருக்கிற சமூக மற்றும் மக்கள் நலத் திட்டங்களைத் தொடர்ந்து கொண்டே, அந்தத் திட்டங்களுக்கு, நிதிநிலை அறிக்கையில் மொத்தத்தில் 45,171.06 கோடி ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கி, அந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு வழிவகை செய்திருப்பதற்குப் பாராட்டுகளை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மத்திய அரசின் பாரபட்சமான போக்கினால், நம்முடைய சொந்த நிதியாதாரத்தைப் பெருக்கிக்கொள்ள வேண்டிய, சார்ந்து நிற்க வேண்டிய ஒரு அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்பது நிதிநிலை அறிக்கையிலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எப்படி ஒரு காலத்தில், மது விற்பனைமூலம், பல தனியார் நிறுவனங்கள் கொள்ளை இலாபம் அடித்ததையெல்லாம் தடுத்து, இன்றைக்கு அரசின் வருவாயைப் பெருக்கும் வகையில், அதை அரசின் கஜானாவிற்குக் கொண்டு வருகிற நடவடிக்கைகளை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்தார்களோ, அதைப்போலவே, தமிழகத்திலே மொத்தக் கனிம வளங்களுடைய வியாபாரத்தையும் அரசே ஏற்று நடத்தி, நம்முடைய மாநிலத்தினுடைய சொந்த வருவாயைப் பெருக்குவதன்மூலம், பல புதிய வளர்ச்சித் திட்டங்களை உருவாக்குவதற்கு வழி ஏற்படுத்துவார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தூத்துக்குடியிலே கப்பல் கட்டும் தளம், மதுரையிலே, மதுரை—தூத்துக்குடி வழித்தடம் போன்ற இப்படிப்பட்ட திட்டங்கள் தென் மாவட்டங்களின் வளர்ச்சிக்குப் பேருதவி புரியும். இதோடு சேது சமுத்திரத் திட்டத்தையும் நிறைவேற்ற வேண்டுமென இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், விலை உயர்வைக் கட்டுப்படுத்திட, ஒரு இலட்சம் மெட்ரிக் டன் அரிசியை கிலோ ஒன்றிற்கு 20 ரூபாய் என்ற விலையில் வெளிச்சந்தையில் விற்பனை செய்வது, மானிய



2013 மார்ச் 25] [திரு. க. பாலகிருஷ்ணன்]

விலையிலே பருப்பு வகைகள் வழங்குவதற்கான காலத்தை நீட்டித்திருப்பது, காய்கறி விலையினைக் கட்டுப்படுத்த, பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் திறப்பது போன்ற நல்ல திட்டங்களை அறிவித்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

நம்முடைய தமிழ்நாடு வரலாறு காணாத வறட்சியினால் பாதிக்கப்பட்டபோது, வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு முதன்முறையாக வறட்சி நிவாரணம் வழங்கியிருக்கிற இந்த அரசை நான் பாராட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே ஆட்சியிலேயிருந்த திராவிட முன்னேற்றக் கழகம்கூட, வறட்சி ஏற்படுகிறபோது, இதுபோன்று நிவாரணம் இதுவரையில் வழங்கவில்லை என்பதை இங்கே நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேசமயத்தில், வறட்சி நிவாரணம் வழங்குவதோடு, இன்றைக்குப் பல்வேறு திட்டங்களை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு வறட்சியினால் பாதிப்புக்குள்ளான நிலங்களின் மதிப்பைக் குறைத்து, அதிகாரிகள் ஒரு குத்துமதிப்பாகக் கணக்கிட்டதினுடைய விளைவாக, உண்மையான மதிப்பீடு அரசினுடைய கவனத்திற்கு வராமல், குறைத்துக் கொடுக்கப்பட்ட காரணத்தினாலே, பலருக்கு உரிய நிவாரணம் கிடைக்கவில்லை என்கிற குறை இருப்பதை இந்த அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். பருவ மழை பொய்த்ததோடு, கர்நாடகத்திலிருந்து 68 டி.எம்.சி. தண்ணீர் மட்டுமே பெற்றுள்ள நிலையில், 50 சதவிகிதத்திற்கும் மேல் சாகுபடி இழப்பு ஏற்பட்ட நிலம், மூன்றரை இலட்சம் ஏக்கர் மட்டும்தான் என்று குறைத்துக் கணக்கு காட்டப்பட்டிருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்கு இந்த நேரத்தில் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, பாதிக்கப்பட்டிருக்கிற ஒரு விவசாயிகூட விடுபடாமல், அனைவருக்கும் இந்த அரசு நிவாரணம் வழங்கும் என்கிற உறுதியை நிறைவேற்றுகிற வகையில், புதுக் கணக்கெடுப்பு நடத்தி. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 மார்ச் 25

பிற்பகல் 12—50

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை பொய்த்துவிட்டது; தமிழகத்திற்கு மழை தரக்கூடிய தென்மேற்குப் பருவமழையும் பொய்த்துவிட்ட காரணத்தினாலும், மத்தியிலுள்ள, வறண்டுவிட்ட எண்ணம் கொண்டவர்களாலும், கர்நாடகத்திலிருந்து நாம் பெற வேண்டிய காவிரி நீரினுடைய முழுமையான அளவைப் பெற முடியாத சூழ்நிலை காரணமாகவும் தமிழகத்திலே வரலாறு காணாத வறட்சி ஏற்பட்டுள்ளது.

இன்றைக்கு மத்திய அரசாங்கம் நமக்குத் தொடர்ந்து துரோகத்தைச் செய்தாலும்கூட, மக்களை வறட்சி எந்தவிதத்திலும் பாதிக்காதவண்ணம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 'விவசாயிகளைக் காப்பாற்றுவதற்கு நான் இருக்கின்றேன்' என்று சொல்லி, வரலாற்றுச் சாதனையாக, சென்னை மாவட்டம் நீங்கலாக, தமிழத்திலே இருக்கிற அனைத்து மாவட்டங்களையும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவித்து; (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய தலைமையிலே ஓர் உயர் மட்டக் குழுவையும் அமைத்து, வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களையெல்லாம் ஆய்வு செய்யச் சொல்லி, அந்த ஆய்வின் அடிப்படையிலே, விவசாயிகள் எதிர்பார்க்காத வகையிலே, ஏக்கர் ஒன்றுக்கு 15 ஆயிரம் ரூபாயை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திலே ஒரு வரலாற்றுச் சாதனையாக இன்றைக்கு வழங்கியிருக்கின்றார்கள் என்பதை நான் பணிவோடு இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றைக்கு 3.61 இலட்சம் ஏக்கர் நிலம் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிறது; பாதிக்கப்பட்ட 3 இலட்சத்து 52 ஆயிரத்து 613 விவசாயிகளுக்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு 541 கோடியே 50 இலட்சம் ரூபாயை நிவாரண உதவியாக அறிவித்திருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



2013 மார்ச் 25]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த அத்தனை விவரங்களையும் நானும் ஏற்றுக்கொள்கிறேன். 3 இலட்சத்து 52 ஆயிரம் விவசாயிகளுக்குக் கொடுத்ததுபோக, விடுபட்டுப் போயிருக்கிற விவசாயிகளுக்கும், நிலங்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டுமென்றுதான் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இதர மாவட்டங்களையும் வறட்சி மாவட்டங்களாக அறிவித்து, அங்கே நிவாரண உதவிகள் அறிவிக்கப்படும் என்று அறிவித்திருப்பது ஆறுதலை அளிக்கிறது. நிவாரணத் தொகையையும் தாமதம் இல்லாமல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளிக்கவேண்டும். பாதிப்பு சம்பந்தமான உண்மையான, முழுமையான கணக்கெடுப்பு எடுத்து, பாதிக்கப்பட்டிருக்கிற அனைவருக்கும் நிவாரணம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நெல் பயிர் மட்டுமல்லாமல், கரும்பு உள்ளிட்ட அழிந்துபோன இதர சாகுபடி பயிர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயத் தொழிலாளர்களுடைய குடும்பங்களுக்கும், வறட்சியினால் நிலத்தைச் சாகுபடியே செய்ய முடியாமல் இருக்கிற கரம்பு நிலங்களுக்கும்கூட நிவாரணத் தொகையினை அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

100 நாள் வேலை திட்டத்தை 150 நாட்களாக உயர்த்தியிருப்பதும், 132 ரூபாய் தினக் கூலி என்பதை 148 ரூபாயாக உயர்த்தியிருப்பதும் நல்ல நடவடிக்கை, நாங்கள் வரவேற்கிறோம். அதேநேரத்தில், தினக் கூலி 148 ரூபாய் கிடைக்கவும், 150 நாள் வேலை கிடைக்கவும் முழு உத்தரவாதம் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், சராசரியாக தமிழகத்திலே 55 நாட்கள்தான் வேலை வழங்கப்பட்டதாக ஆவணங்கள் சொல்கின்றன; தினக் கூலி, சராசரியாக 80 ரூபாய், 90 ரூபாய் வழங்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. எனவே, அதனை ஒழுங்குபடுத்தி, அந்த மக்களுக்கு . . .(குறுக்கீடு)

[2013 மார்ச் 25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்தைத் தெரிவிக்கின்றபோது, சொல்லப்படுகிறது, கேட்கப்படுகிறது என்று சொல்கின்றார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்கெனவே, கொடுக்கப்படுகிற ஒரு நாள் கூலி 132 ரூபாய் போதாது என்ற நிலையில்தான், 148 ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனடிப்படையில், வேலை ஆட்கள் செய்கின்ற பணியினைத் துரிதப்படுத்தி, தினக் கூலியை சரியாகக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, அநேகமாக 120 ரூபாய், 125 ரூபாய், 110 ரூபாய் என்ற அளவிலே கூலி கொடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

பிற்பகல் 12—55

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அதை முழுமையாக நிறைவேற்றி, ஏழை, எளிய மக்களைக் காப்பாற்றுவதற்கான அந்தத் திட்டத்தை நல்லமுறையிலே செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, தமிழகத்திலே குத்தகை விவசாயிகளுக்கு நில வரி உட்பட அனைத்தும் தள்ளுபடி செய்கிறோம். ஆனால், வறட்சி, வெள்ளம் போன்ற காலங்களிலே குத்தகை விவசாயிகளுக்கு, குத்தகை பாக்கி தள்ளுபடி செய்யப்படாத காரணத்தினால், நிலுவை ஏராளமாகச் சேர்ந்து, பல இலட்சம் குத்தகை விவசாயிகள் மிகுந்த நெருக்கடிக்கு ஆட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். எனவே, வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற இந்த ஆண்டில், குத்தகை பாக்கியைத் தள்ளுபடி செய்வதற்கு அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



2013 மார்ச் 25] [திரு. க. பாலகிருஷ்ணன்]

நடப்பாண்டில் 2 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதாக அறிவித்திருப்பது நல்லது. வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கான அரசாணை காலாவதி ஆகி இருக்கிறது. அதை நீட்டித்து உத்தரவு வழங்க வேண்டும். புறம்போக்கு நிலங்களிலே குடியிருப்பவர்கள், கோயில், வக்ஃபு மற்றும் அறக்கட்டளை நிலங்களிலே நீண்ட காலமாகக் குடியிருக்கிற ஏழைகளுக்கு, விசேஷ திட்டத்தின்மூலம் பட்டா வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால், 25 இலட்சம் குடும்பங்கள் தமிழ்நாட்டிலே இன்றைக்கு வீட்டுமனைப் பட்டா இல்லாமல் அவதிக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள்.

வேளாண்மைக்கு கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று, பல திட்டங்களும் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு முறை வரன்முறைப்படுத்தக்கூடிய திட்டத்தின்மூலமாக பட்டா வழங்கக்கூடிய நிலையை, இப்பொழுது நிறுத்தி வைத்திருப்பதாக அவையிலே பதிவு செய்தார்கள். அந்தத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்துவதற்கு ஏற்கெனவே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று, அதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் நான் பணிவோடு இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். பட்டா வழங்குவதைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டில் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னாலே, அரசினுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே, வருடம் ஒன்றுக்கு ஒரு இலட்சம் பட்டாக்கள் அரசு வழங்கும் என்று அறிவித்தார்கள். ஆனால், கடந்த ஆண்டு மட்டும் ஒரு இலட்சத்து 27 ஆயிரம் பட்டாக்கள் வழங்கப்பட்டு சாதனை படைக்கப்பட்டிருக்கிறது என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) தொடர்ந்து இந்த ஆண்டும் அரசினுடைய இலக்கைவிட அதிகப்படியான பட்டாக்களை

[திரு. என்.டி. வெங்கடாச்சலம்] [2013 மார்ச் 25

வழங்கி, மிகப் பெரிய சாதனையை இந்த அரசு ஏற்படுத்தும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்மூலமாக அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மையை இலாபகரமான தொழிலாக மாற்றுவதன் மூலம்தான் விவசாய உற்பத்தியை அதிகரிக்க முடியும். அந்த வகையிலே, கரும்புக்கு டன் ஒன்றுக்கு *3,500/–* ரூபாயும், நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு *2,000/–* ரூபாயும், இதர விளைபொருட்களுக்கு கட்டுப்படியான விலையைத் தீர்மானித்து, விவசாயிகளைக் காப்பாற்ற இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தீவனங்களின் விலை உயர்ந்திருக்கிற இந்தச் சூழ்நிலையில், பால் கொள்முதல் விலையையும் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில், விளை நிலங்கள், ரியல் எஸ்டேட் நிறுவனங்களால் வீட்டுமனைகளாக மிக வேகமாக மாற்றப்பட்டு, நாளுக்கு நாள் சாகுபடி பரப்பளவு சுருங்கி வருகிற ஆபத்தான நிலைமை ஏற்படுகிறது. எனவே, விளை நிலங்களை வேறு தேவைகளுக்கு மாற்றுவதைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டம் இயற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று காலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'மக்களுக்காகத்தான் திட்டங்கள், திட்டங்களுக்காக மக்கள் இல்லை' என்கிற ஒரு நல்ல செய்தியை இங்கே வெளியிட்டார்கள். திருவாரூர் மாவட்டம், ஒரு நெற்களஞ்சியம். அங்கே பூமிக்கு அடியிலே இருக்கிற மீத்தேன் எரிவாயுவை எடுத்துப் பயன்படுத்துவதற்கு Eastern India Corporation என்கிற நிறுவனத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கி இருக்கிறது. அவர்கள் அந்தப் பணியைச் செய்தால், திருவாரூர் மாவட்டம் முழுவதும் விளைநிலங்கள் அழிகிற ஆபத்து ஏற்படும் என்கிற கவலை அங்கே பரவி இருக்கிறது. அதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு, தடுத்து நிறுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.



2013 மார்ச் 25] [திரு. க. பாலகிருஷ்ணன்]

மின்சார வாரியத்தை ஒழுங்குபடுத்துவதற்கும், மின் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்குமான நிறைய விவரங்கள் இந்த அவையிலே தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. மின் உற்பத்தியில் கடந்த ஆண்டுகளைவிட இந்த ஆண்டு ஒரு சில முன்னேற்றங்கள் ஏற்பட்டிருப்பது என்பது உண்மை என்பதை நாங்கள் அறிவோம். இருந்தாலும்கூட, நமது மாநில ஒட்டுமொத்த வளர்ச்சி விகிதம் *4.6* சதவிகிதமாக இந்த ஆண்டு குறைந்திருப்பதற்கு மின் வெட்டும் ஒரு முக்கியமான காரணம் என்று நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பிற்பகல் *1–00*

தற்போது கோடைப் பருவம் துவங்கியிருப்பதால், பல மாவட்டங்களிலே மின் வெட்டு மிக மோசமாக அதிகரித்ததன் விளைவாக, விவசாயம், தொழில், சிறு, குறு தொழில்கள் பாதிக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. எனவே, மின் வெட்டு பிரச்சினையை, மிகக் குறுகிய காலத்தில் தீர்க்க வேண்டும். *2014* ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையில் மின் வெட்டு நீடிக்கும் என்று நிதிநிலை அறிக்கையில்கூட சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, . . .(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது ஏற்பட்டிருக்கின்ற தற்காலிக மின் வெட்டுப் பிரச்சினைக்கு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு காரணம் அல்ல என்பது பல்வேறு புள்ளிவிவரங்களுடனும், ஆதாரங்களுடனும் இந்த அவையில் பலமுறை ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த விவரத்திற்குள் நான் மீண்டும் செல்ல விரும்பவில்லை. ஆனால், ஒட்டுமொத்தமாக மின் உற்பத்தியில் நமது மாநில அரசு வளர்ச்சிப் பாதையை நோக்கித்தான் நடைபோட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், அம்மாவினுடைய அரசு பொறுப்பேற்றபோது, நாளொன்றுக்கு சராசரியாக *180* மில்லியன் யூனிட்டுகள் என்ற அளவில்தான் மின்சாரம் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. தற்போது,

மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்து வருகின்ற அளப்பரிய முயற்சியின் காரணமாக, கையில் உள்ள மின் உற்பத்தித் திட்டங்களை ஒவ்வொன்றாகச் செயல்படுத்தத் தொடங்கியதன் விளைவாகவும், பல்வேறு சீரமைப்பு நடவடிக்கைகள் எடுத்ததன் விளைவாகவும், நாளொன்றுக்கு ஏறத்தாழ 220 மில்லியன் யூனிட்டுகள் என்ற அளவிற்கு இன்றைக்கு மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், 40 மில்லியன் யூனிட்டுகள் நாளொன்றுக்குக் கூடுதலாக வழங்கப்பட்டு வந்தாலும்கூட, தற்போது கோடைக்காலம் ஆரம்பமாகி விட்டதன் காரணமாக, மின் உபயோகத் தேவையும் அதிகரித்து இருக்கிறது. ஏறத்தாழ 11,500 மெகா வாட் என்ற அளவில் இருந்த மின் உபயோகத் தேவை, 12,500 மெகா வாட் என்ற அளவில் இப்போது சற்று அதிகரித்து இருக்கிறது. அதுவும் ஒரு காரணம்.

மின் வெட்டு நேரம் படிப்படியாகக் குறைக்கப்பட்டு வந்தது. ஆனால், இந்த ஒரு வார காலத்தில் மட்டும்தான் மின் வெட்டில் சற்று பின்னடைவு ஏற்பட்டு இருக்கிறது. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுச் சொல்கிறார் என்று நான் கருதுகிறேன். அதுகூட எதிர்பாராமல் ஏற்பட்ட தற்காலிக பின்னடைவுதான்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், மத்திய அரசினுடைய நிறுவனங்களான கர்நாடகாவில் உள்ள Kaiga Atomic Power Station, கல்பாக்கத்தில் இருக்கின்ற Atomic Power Station–ல் உள்ள பழுதுகளைச் சரி செய்யவும், வருடாந்திர பராமரிப்பிற்காகவும் முழுமையாக மின் உற்பத்தியைத் தற்காலிகமாக நிறுத்தி இருக்கிறார்கள்.

மற்றொன்று, மத்திய அரசு நிறுவனமான ஆந்திராவில் உள்ள ரேணிகுண்டாவிலிருந்து மாநில அரசிற்கு வழங்க வேண்டிய மின்சாரமும் வழங்கப்படவில்லை. நிலக்கரி பற்றாக்குறையின் காரணமாக அந்த நிறுவனமும் மின்சார உற்பத்தியைக் குறைத்திருக்கிறது. எனவே, மத்திய அரசின் நிறுவனங்களிலிருந்து நமக்குக் கிடைக்க வேண்டிய மின்சாரத்தின் அளவும் குறைந்திருக்கிறது. அதற்கு மத்திய அரசு நிறுவனம்தான் காரணம். மத்திய அரசு நிறுவனம்தான் மின் உற்பத்தியில் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

மாநில அரசின் சார்பாக புதியதாக உருவாக்கப்பட்ட மேட்டூர் அனல் மின் திட்டத்தில் இந்த ஒரு வார காலத்திற்குள் 600 மெகா வாட் மின் உற்பத்தி செய்யப்பட்டது. மேலும், இடையில் புதிய ஒரு திட்டம் உருவாகுகின்றபொழுது, அந்தத் திட்டம் முழுமையாக நிறைவேறுகின்ற வரையில், இடையில் சிறு, சிறு தடங்கல்கள், பழுதுகள் ஏற்படுவது வழக்கம்தான். புதிய திட்டம் என்பதால், பழுதுகள் ஏற்பட்டு இருக்கின்றன. இன்னும் இந்த மாத இறுதிக்குள், அதாவது இன்னும் இரண்டு, மூன்று நாட்களில் பழுதும் சரிசெய்யப்பட்டு, மீண்டும் உற்பத்தி தொடங்கி விடும்.



வல்லூரிலே இருக்கின்ற தமிழ்நாடு மின்சார வாரியமும், தேசிய அனல் மின் கழகமும் இணைந்து செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற மூன்று யூனிட்டுகளில், 3X500 மெகா வாட் வீதம், முதல் யூனிட் தற்போது தொடங்கப்பட்டுவிட்டது. அதிலும், ஆயில், அதாவது பசை எண்ணெய் போகின்ற வழியில் லீக்கேஜ் ஏற்பட்டிருப்பதால், அதுவும் நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்த லீக்கேஜூம் இன்னும் இரண்டு நாட்களில் சரி செய்யப்பட்டு விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வல்லூரில் உள்ள மற்றொரு யூனிட்டும் பழுதடைந்து இருப்பதால், அங்கும் மின் உற்பத்தியில் சற்று பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பழுதுகள் எல்லாம் இந்த மாத இறுதிக்குள் சரி செய்யப்பட்டு, மீண்டும் மின் வெட்டு நேரத்தைக் குறைக்கின்ற வகையில், தீவிரமாக, புயல் வேகத்தில் பணிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொடர்ந்து இந்த அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளின் காரணமாக, படிப்படியாக மின் வெட்டு குறைக்கப்பட்டு, ஏற்கெனவே சொன்னதுபோல், ஜூன் மாதத்திற்குள், நிச்சயமாக மின் வெட்டு அறவே நீக்கப்படும், அதற்குப்பின், தொடர்ந்து மின்சாரம் வழங்கப்படும். மேலும், புதிய திட்டங்களைச் செயல்படுத்துவதன்மூலமாக, மின் வெட்டு படிப்படியாகக் குறைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எதற்காக இவ்வளவு விளக்கமாகப் பதில் சொல்கிறேன் என்றால், மீண்டும், மீண்டும் இதையேதான் பேசப் போகிறீர்கள். அதற்காக ஒட்டுமொத்தமாக, முன்கூட்டியே விளக்கமான பதிலைச் சொல்லிக்கொள்கிறேன். அநேகமாக இனிமேல் இந்தப் பிரச்சினையை விட்டு விட்டு, அடுத்த பிரச்சினைக்குச் செல்வீர்கள் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

[2013 மார்ச் 25

பிற்பகல் 1–05

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய நீண்ட பதிலுக்கு நன்றி. தொடர்ந்து போர்க்கால அடிப்படையில், நடவடிக்கை எடுத்து, மின்வெட்டைப் போக்க வேண்டுமென்றுதான் நாங்கள் வற்புறுத்துகிறோம். கூட்டுறவுத் தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கென ஒரு தனி ஆணையத்தையும் உருவாக்கி இருப்பது வரவேற்கத்தக்க நடவடிக்கை. ஆனால், அந்தச் சட்ட விதிகளிலே தவணை கடந்த கடன் பாக்கி உள்ளவர்கள் தேர்தலிலே வாக்களிக்க முடியாது என்கிற விதி இருக்கிறது. அதனால், ஏறக்குறைய முக்கால்வாசிக்கு மேற்பட்டவர்கள் வாக்களிக்கவே முடியாத நிலை ஏற்படும். தேர்தலிலே போட்டியிட முடியாது என்பது சரி. தேர்தலில் வாக்களிக்கவே முடியாது என்கிற நிலைமையை மாற்றி, அதற்கு விதி விலக்கு கொடுத்து வாக்களிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். . . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, தேர்தல் ஆணையத்தை முதலில் அமைத்து தேர்தல் நடத்துகிற ஒரே முதலமைச்சர், தமிழக வரலாற்றில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னொன்று 97–வது அரசியல் சாசனத் திட்டம் திருத்தப்பட்ட பிறகு முதன்முதலில் தமிழகத்தில்தான் கூட்டுறவுத் தேர்தல் நடக்கிறது. இப்போது ஆணையர் முடிவு எடுத்திருக்கிறார். ஆணையரின் முடிவைப் பற்றிப் பேசுவது, அவருடைய கருத்துகளைப் பேசுவது சரியல்ல. நீங்கள் உங்களுடைய முறையீட்டை ஆணையர் அவர்களிடம் கொடுக்கலாமேயொழிய, நீங்கள் இங்கே பேசுவது சரியாக இருக்காது. அது சட்டப் பிரச்சினையாகிவிடும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.



2013 மார்ச் 25]

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆணையர் தேர்தலை நடத்தலாம். ஆனால், உறுப்பினரின் வாக்களிக்கிற உரிமை என்பது நமது சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட சட்டத்திலேயே அப்படி இருப்பதனால், அரசுதான் அதில் முடிவெடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதைத்தான் நான் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். வறட்சியின் காரணமாக கடன்களை எல்லாம் நீண்டகாலக் கடன்களாக மாற்றி, அரசு உத்தரவிட்டிருக்கிறது. ஆனால், பிரச்சினை என்னவென்றால், (மணியடிக்கப்பெற்றது) குறுகிய காலக் கடனாக இருந்தால், ஏழு சதவீத வட்டி, நீண்ட காலக் கடனாக இருந்தால், பத்தரை சதவீத வட்டி கட்ட வேண்டிய அவசியம் இருக்கிறது. எனவே, பாதிக்கப்பட்ட நிலங்களுக்கான பயிர்க் கடனைத் தள்ளுபடி செய்வதற்கு அரசு முன்வர வேண்டும்.

அதேமாதிரி, பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலே மீன் இறங்குதளம் அமைக்கப்பட்டிருக்கிறது. முகத்துவாரத்தை ஆழப்படுத்துவதற்குத் திட்டங்கள் அறிவித்திருப்பதற்கு நன்றி. மீனவ மக்கள் பயன்படுத்தக்கூடிய மீன்பிடி சாதனங்களான நைலான் நூல் மற்றும் நைலான் பன்னூல் போன்றவற்றிற்கு ஏற்கெனவே நீண்டகாலமாக VAT வரி அண்டை மாநிலங்களைவிட தமிழ்நாட்டில் மட்டும்தான் இருக்கிறது. எனவே, அண்டை மாநிலங்களைப் போல அதை இரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணாமலை பல்கலைக்கழக நிதி ஒழுங்கீனங்கள் குறித்து, நம்முடைய அரசு முதன்முறையாக ஒரு தணிக்கைக் குழு அமைத்து, விசாரணை நடத்த அறிவித்திருப்பது மிகுந்த பாராட்டுக்குரியது. நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புவது, பல்கலைக்கழக பேராசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்களுடைய நலன்கள் பாதிக்காத வகையில், நிதி நெருக்கடிக்குத் தீர்வு காண வேண்டும். இதர பல்கலைக்கழகங்களுக்கு இணையான நிருவாக அமைப்பை உருவாக்குகிற முறையிலே. . .

[2013 மார்ச் 25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள், இதை முடித்தவுடன் நன்றி சொல்லி உரையை நிறைவு செய்யுங்கள். (குறுக்கீடு) இன்னும் 3 உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல்கலைக்கழக சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக தமிழகத்திலே கிராமப்புறங்களிலே இருக்கிற பள்ளிகளில் மாணவர்களுடைய எண்ணிக்கை குறைந்து வருகிறது. ஆதி திராவிடர் நலத்துறையின்கீழ் இயங்கக்கூடிய அப்படிப்பட்ட பள்ளிகளிலே மாணவர்களுடைய எண்ணிக்கை மேலும், மேலும் குறைந்து வருவதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். கிராமப்புற வறுமையை ஒழிக்க நில உச்சவரம்புச் சட்டத்தை அமலாக்கி நிலமில்லாதவர்களுக்கு, நில விநியோகத்தைச் செய்தால்தான் உண்மையிலேயே கிராமப்புற வறுமையை ஒழிக்க முடியும்.

அதேபோல, வன உரிமைச் சட்டம் தமிழகத்திலே அமலாக்கப்படவில்லை. வன உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தி ஆதிவாசி மக்களுக்கு நிலங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். தனியார் வனப் பாதுகாப்புச் சட்டத்தினால் விவசாயிகள் பாதிப்படாமல் இருப்பதற்காக அரசு ஒரு குழு அமைத்து ஆய்வு நடவடிக்கையினை மேற்கொண்டிருக்கிறது. இதோ முடித்துவிடுகிறேன். அந்தக் குழுவினுடைய அறிக்கையைப் பெற்று நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, கோவை வடக்கு தாலுகாவில் காப்புக்காட்டிலேயே யானை வழித்தடங்களை மறைத்து அங்கே ஈஷா அறக்கட்டளை போன்ற பல நிறுவனங்கள் இன்றைக்கு கட்டடங்கள் கட்டியிருக்கிற காரணத்தினால். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள், உரையை நிறைவு செய்யுங்கள்.



2013 மார்ச் 25]

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, யானைகள் கிராமப்புறங்களுக்குள் நுழைந்து. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள், இதை மானியக் கோரிக்கையிலே பேசிக்கொள்ளலாம். உரையை நிறைவு செய்யுங்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, யானைகள் கிராமப்புறங்களுக்குள் நுழைவதைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, கடைசியாக நான் இங்கே குறிப்பிட விரும்புவது, நம்முடைய தமிழ் மொழி வளர்ச்சிக்கு, தமிழ் டிஜிட்டல் நூலகத்தை உருவாக்குவது, தமிழ் மொழியில் பிற மொழி இலக்கியங்களும் அறிவுத் துறை படைப்புகளும் ஆவணங்களும் பெறுவதற்குரிய முறையிலே மொழிபெயர்ப்பு மென்பொருளை உருவாக்குவது உட்பட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

சிறு, குறு தொழில்கள் வேலைவாய்ப்புகளை கூடுதலாக அளிக்கக்கூடியவகையில், இத்துறையில் கூடுதல் கவனம் செலுத்துவதற்கும், அதற்கான ஒதுக்கீடு, அதற்கான கடன் வசதி போன்றவற்றை அதிகப்படுத்தப்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

பிற்பகல் 1–10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைமீது இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள நிதிநிலை அறிக்கையில் தமிழக மக்கள் அனைவருக்கும் பல்வேறு வகைகளில் பயனளிக்கக்கூடிய பல புதிய திட்டங்களும், தமிழகம் மேலும் வளர்ச்சியில் செல்லக்கூடிய வகையில் முறையான பல்வேறு அறிவிப்புகளும் உள்ளதை

[திரு. வெ. பொன்னுப்பாண்டி] [2013 மார்ச் 25

இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே வரவேற்கிறோம். காவிரி பிரச்சினையில், தமிழகத்தின் உரிமைகளை நிலைநாட்டிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட பெருமுயற்சி, இன்றைக்கு வெற்றி அடைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) நடுவர் மன்றத் தீர்ப்பை அரசிதழில் வெளியிடச் செய்த சாதுர்யம், இவையெல்லாம் இன்றைக்கு தமிழக மக்களால் பெரிதும் போற்றப்படுகின்ற வரலாற்றுச் சாதனைகளாகும். காரணம் 22 ஆண்டுக் காலம் மத்திய அரசுகளால் பாதிக்கப்பட்ட காவிரி டெல்டா மாவட்ட மக்கள், இந்தத் தீர்ப்பின்மூலம் மத்திய அரசின் நயவஞ்சக சூழ்ச்சிகளைப் புரிந்துகொண்டுள்ளனர்.

தமிழகத்தில் பருவமழை பொய்த்துவிட்ட நிலையில், சென்னை நீங்கலாக, அனைத்து மாவட்டங்களையும் வறட்சி மாவட்டமாக, பாதிக்கப்பட்ட மாவட்டமாக அறிவித்து, நில வரியை இரத்து செய்த விதம், காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு, 50 சதவிகிதத்திற்கு மேல் பயிரிழப்பு ஏற்பட்ட விவசாயிகளுக்கு, ஏக்கர் ஒன்றுக்கு ரூ.15,000 நிதி ஒதுக்கியது, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் பணிபுரியும் பணியாளர்களின் ஆண்டு உச்சவரம்பை 150 நாட்களாக உயர்த்தியது, 15,000 பண்ணைக் குட்டைகளை உருவாக்கி வறட்சியால் பாதிக்கப்பட்ட டெல்டா மாவட்ட மக்களைப் போல் பிற மாவட்ட மக்களுக்கும் நிவாரண உதவி வழங்கப்படும் என்ற அறிவிப்பு, இவற்றை முழு மனதோடு நாங்கள் வரவேற்கிறோம். விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்ற ஊதியம் ரூ.132/–ஐ ரூ.148/–ஆக உயர்த்தியதை வரவேற்கின்றவேளையில், அந்த ஊதியம் அந்த விவசாயப் பெருமக்களுக்கு முழுமையாகக் கிடைக்கின்ற வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேநேரத்தில், மழையை எதிர்நோக்கி, நிலத்தைப் பண்படுத்தி, விவசாயம் செய்யக் காத்திருந்த விவசாயிகளையும், அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, அவர்களுக்கும் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல், தமிழகம் முழுவதும் பாதிக்கப்பட்டுள்ள விவசாயக் குடும்பங்களுக்கு ரூ.10,000/– நிவாரணம் வழங்கிட அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

தமிழகத்தில் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்ற பிறகு, காவல் துறையின் செயல்பாடு, கூடங்குளம் பிரச்சினை, முல்லைப் பெரியாறு பிரச்சினை, இலங்கைத் தமிழர் பிரச்சினை, காவிரி நதிநீர்ப் பிரச்சினை



2013 மார்ச் 25] [திரு. வெ. பொன்னுப்பாண்டி]

போன்றவற்றில் பாராட்டும்படியாக இருந்துள்ளது. ஆனாலும், தேசிய நெடுஞ்சாலைகளில் ரோந்து செல்கின்ற காவலர்கள் மற்றும் சில போக்குவரத்துக் காவலர்களால் மக்கள் முகம் சுளிக்கின்ற நிலை இன்றைக்கு ஏற்படுகிறது. மேலும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட கூடுதலாக 17,138 காவலர்கள் புதியதாகத் தேர்வு செய்யப்படவுள்ளது, 1,091 துணை ஆய்வாளர்கள் நியமிப்பது போன்ற நடவடிக்கைகளை வரவேற்கிறோம். அதுபோல், இன்றைக்கு பல்வேறு துறைகளில் 1,93,500 பணியாளர்களை நியமனம் செய்து, நிருவாகத்தைச் சீரமைத்துள்ளதை வரவேற்கிறோம்.

இன்றைக்குத் தமிழகத்தில் 8 ஆம் வகுப்பு வரை படித்துள்ள இளைஞர்களுக்கு ஆட்டோ ஓட்டுவதற்கு உரிமம் வழங்குவதற்கு அனுமதி இல்லை என்ற அறிவிப்பு இளைஞர்கள் மத்தியில் பல்வேறு வகையான உணர்வுகளை ஏற்படுத்தியுள்ளது. அந்தத் தடையை நீக்கி, அவர்கள் ஆட்டோ ஓட்டுவதற்கான உரிமத்தை வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நிதிநிலை அறிக்கையில், மத்திய அரசினுடைய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் போன்று. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியது, 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு ஓட்டுனர் உரிமம் என்பது மத்திய அரசு கொண்டுவந்த சட்டம். மத்திய அரசு, இந்தச் சட்டத்தை இயற்றி, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை மறைமுகமாகத் தடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தி வருகிறார்கள். மத்திய அரசுக்குக் கடிதத்தை எழுதியிருக்கின்றார்கள். விரைவில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இந்த 8 ஆம் வகுப்பு தேர்வு குறித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 மார்ச் 25

*பிற்பகல் 1–15*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ பொன்னுப்பாண்டி அவர்கள்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிதிநிலை அறிக்கையில் மத்திய அரசினுடைய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் போன்று தமிழ்நாடு மாநில தேசிய நெடுஞ்சாலை வளர்ச்சி ஆணையம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பு பாராட்டிற்குரியது. அதேநேரத்தில், மத்திய அரசு தேசிய நெடுஞ்சாலையில் உள்ள சுங்கவரிச் சாவடிகளில், நிர்ணயிக்கப்பட்ட காலம் முடிந்தபிறகும் சாலைகளில் வரிகளை வசூலிக்கின்றனர். தமிழக வாகன ஓட்டிகள் தொடர்ந்து வரிகட்ட வேண்டியுள்ளது. தமிழக மக்கள் தமிழகத்தில் எந்த இடத்திற்கும் சென்று வருகின்ற வகையில், தமிழக அரசு உருவாக்குகின்ற தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலை வளர்ச்சி ஆணையம் அதற்கான சட்டத் திருத்தங்களை அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*2013–2014* ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், விவசாயத் தொழிலாளர்களின் இரண்டு இலட்சம் குடும்பங்களுக்கு பட்டா வழங்கப்படும் என்ற நடவடிக்கையை முழு மனதுடன் நாங்கள் வரவேற்கின்ற அதேவேளையில், அரசின் சீரிய முயற்சியால் ஆண்டிற்கு *1,60,000* வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுவதை வரவேற்கின்றோம். அதேவேளையில், குடியிருக்க வீடில்லாத நபர்கள் இன்றைக்கு இலட்சக்கணக்கில் உள்ளனர். இப்படிப்பட்டவர்களை முழுமையாகக் கணக்கெடுத்து, இவர்களுக்கும் சொந்த வீட்டுமனை வழங்கி, தற்போதைய விலை மதிப்பிற்கேற்றவாறு தொகையை உயர்த்தி வீடு கட்டித்தர வேண்டும். அதேபோல, கோயில் நிலங்களிலும், சர்ச், மசூதிக்குச் சொந்தமான இடங்களிலே நீண்டகாலமாகக் குடியிருப்பவர்களுக்குத் தற்போது வாடகை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அது ஏற்கெனவே பகுதி என்று இருந்தது. அதே முறையில், பகுதி என்ற அடிப்படையிலேயே தொடர வேண்டும் என்பதை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அரசால் கட்டிக்கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் மாநிலம் முழுவதும் இப்போது ஆயிரக்கணக்கான வீடுகள் உள்ளன. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படுகின்ற தொகுதி



2013 மார்ச் 25] [திரு. வெ. பொன்னுப்பாண்டி]

மேம்பாட்டு நிதியிலிருந்து இந்த வீடுகளுக்கு நிதி ஒதுக்குகின்றபோது முழுமையாக அந்த வீடுகளைப் பராமரிப்பதற்கான வாய்ப்புகள் இல்லாமல் இருக்கிறது. எனவே, அந்த வீடுகளுக்கு ஒரு குறிப்பிட்ட கால நிர்ணயம் செய்து பழுதுபார்ப்பதற்கு அரசே தேவையான நிதியொதுக்கீடு செய்திட வேண்டும்.

முன்பு பிற்பட்டோர் நலம், சீர்மரபினர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு அரசின் சார்பில் நிலம் கையகப்படுத்தி வீட்டுமனை வழங்கப்பட்டது. தற்போது நிலத்தின் விலை மதிப்பு உயர்ந்துவிட்ட காரணத்தால், தனி நபர்கள் அரசுக்கு நிலம் தர மறுக்கின்றனர். எனவே, இதற்காக நிலம் வாங்குவதற்கு நிர்ணயித்திருக்கின்ற தொகையை உயர்த்தி, ஏழை மக்களுக்கு குறிப்பிட்ட கால நிர்ணயம் செய்து வீட்டுமனைகளை வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீட்டுமனை இல்லாத ஆதி திராவிட மக்களுக்கு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மூலமாகவும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினருக்கு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மூலமாகவும் தனியார் நிலங்களை நேரடிப் பேச்சுவார்த்தை மூலமாக நிலக் கிரயம் கொடுத்து, நிலத்தினைக் கையகப்படுத்தி வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு அரசு நிதியினை ஒதுக்கீடு செய்திருக்கிறது என்பதை நான் பணிவோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தப் பகுதியிலே வீட்டுமனை கொடுப்பதற்குண்டான தகுதியான நிலங்கள் இருப்பதாக அரசுக்குத் தெரிவித்தால், உரிய தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்த இடங்களை வருவாய்த் துறையின்மூலமாகக் கையகப்படுத்தி சம்பந்தப்பட்ட பட்டா இல்லாத மக்களுக்குப் பட்டா வழங்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையிலான அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 மார்ச் 25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ பொன்னுப்பாண்டி அவர்கள்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** தற்போது அரசின் பல்வேறு வகைப்பட்ட நிலங்களில் குடியிருப்பவர்களை ஆய்வு செய்து, அப்படிப்பட்ட நிலங்களை வகைமாற்றம் செய்து அவர்களுக்கும் பட்டா வழங்க வேண்டும்.

வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்காக மாநில அரசு பல்வேறு வகையான திட்டங்களைத் தீட்டி வருகின்றது. ஆனால், நகர்ப்புறத்தில் வாழும் மக்களுடைய வறுமைக் கோடு அளவு என்பது 32 ரூபாயாகவும், கிராமப்புற மக்களுடைய வறுமைக் கோடு அளவு என்பது 22 ரூபாயாகவும் மத்திய அரசாங்கம் நிர்ணயம் செய்திருக்கிறது. நம்முடைய மாநில அரசாங்கம் இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

வேளாண் உற்பத்தியைப் பெருக்குகின்ற வகையில், மாநிலத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்துவதற்கு வலுவான அடித்தளத்தை இந்த அரசு அமைத்துள்ளதே இதற்கு கொடுத்துள்ள முக்கியத்துவம் ஆகும். இதற்கு ரூபாய் 5,189.15 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, பாராட்டப்படக்கூடிய விஷயம்.

தமிழகத்தில் மானாவாரி விவசாயிகள் பெருமளவில் உள்ளனர். மானாவாரி விவசாயிகளுடைய நிலையை உயர்த்தி அவர்களுக்கு அரசின்மூலம் உரம், விதை, பூச்சி மருந்து, உழவு போன்ற முழு செலவுகளையும் அரசே ஏற்க வேண்டும். மானாவாரி நிலங்களில்தான் பருப்பு வகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அப்படி உற்பத்தி செய்யும்பட்சத்தில் அவர்களின் நிலை உயரும்.

பிற்பகல் 1–20

இன்றைக்குக் கண்மாய்களில் மண் அள்ள தனியாருக்கு குத்தகை விடப்பட்டு, மண் எடுத்துச் செல்கின்றார்கள். விவசாயிகள் தங்கள் விவசாயத்திற்குத் தேவையான மண்ணை கண்மாய்களிலிருந்து எடுக்க அதிகாரிகள் இன்றைக்கு மறுத்து வருகிறார்கள். அனுமதி வேண்டி மனு செய்தால் காலதாமதம் செய்யப்படுகிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.



2013 மார்ச் 25]

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான கருத்தை இங்கே பதிவு செய்திருக்கிறார்கள். எந்த இடத்திலும் மண் எடுப்பதற்கு விவசாயிகளுக்கு தடையில்லை என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முன்பே அறிவித்திருக்கிறார்கள். விவசாயி என்ற ஒரு அடையாள அட்டை இருந்தாலே போதும். விலையில்லாமல் வண்டல் மண்ணை எடுத்துச் செல்வதற்கு அவர்களுக்கு அனுமதி உண்டு என்பதை நான் இந்த நேரத்திலே தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** அனுமதி வழங்கப்படுகின்றது. ஆனால், காலதாமதம் ஆகின்ற காரணத்தினால், விவசாயிகள் குறிப்பிட்ட காலத்தில் மண் எடுப்பதற்கோ . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த மாதிரியான பிரச்சினைகளை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், உடனடியாக, விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. கூட்டுறவுச் சங்கங்களுக்கு உரிய நேரத்தில் தேர்தல் நடத்திட அறிவித்துள்ள அறிவிப்பை வரவேற்கின்றோம். அதேவேளையில், நிதி இல்லாமல் பெயர் அளவுக்குச் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கூடுதல் நிதி வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

***(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)***

கிராமப்புற பெண்கள் பொருளாதாரத்தில் உயர்வுபெற தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ள விலையில்லா கறவை மாடுகள்,

[திரு. வெ. பொன்னுப்பாண்டி] [2013 மார்ச் 25

ஆடுகள், செம்மறி ஆடுகள் இன்றைக்கு இலட்சக்கணக்கில் பெருகியுள்ளன. இவற்றை கவனத்தில் கொண்டு, தேவையான இடங்களில் புதிய கால்நடை மருந்தகங்களை தரம் உயர்த்திடவும், கிளை மருந்தகங்களை உருவாக்கிடவும் அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மத்திய அரசின் மக்கள் விரோதப் போக்கால் விலைவாசி உயர்வு தொடர்ந்து உயர்ந்து வரும் நிலையிலும், தமிழக மக்களைப் பாதிக்காத வகையிலும் பொது விநியோக முறையில் விலையில்லா அரிசி, துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில் இவற்றைத் தொடர்ந்து வழங்குவதைப் பாராட்டக்கூடிய வேளையில், புதிய குடும்ப அட்டைகள் வழங்காமல் ஓராண்டுக்கு மேலாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. புதியதாகத் திருமணம் செய்தவர்களும், குடும்ப அட்டை இல்லாதவர்களும் இதனால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். எனவே, உடனடியாக இவற்றைச் செய்துகொடுக்க வேண்டும். மேலும், குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை அடிப்படையில், ரேஷன் சேவை மையங்களை உருவாக்கிட வேண்டும். இதில் அதிகாரிகளுடைய செயல்பாடு திருப்திகரமாக இல்லை. தமிழக அரசின் சிறப்புத் திட்டமான விலையில்லா மிக்ஸி, மின் விசிறி, கிரைண்டர் போன்றவற்றால் கிராமப்புற மக்கள், குறிப்பாக பெண்கள் பெரிதும் பயன் அடைந்துள்ளனர். நல்லமுறையில் பயன்படுத்தியும் வருகின்றனர். தமிழகத்தில் குடும்ப அட்டை வைத்துள்ள அனைவரும் இதைப் பெற தகுதியுடையவர்கள் என்கின்றபோது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் கொண்டுவரப்பட்டு, தற்போது வரை செயல்பட்டுக்கொண்டிருக்கும் குடிசை வீடுகளில் இவற்றைப் பயன்படுத்த மின்சார வாரியம் கடும் கட்டுப்பாடுகளை விதிக்கிறது. இவற்றைப் பயன்படுத்த பணம் செலுத்தச் சொல்கிறார்கள். இதனால் கிராமப்புற குடிசைப் பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இதுபோன்ற பிரச்சினைகளைச் சரி செய்ய அரசு உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் உள்ள கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில் போதிய துப்புரவுப் பணியாளர்கள் இல்லாதது அரசின் பல்வேறு நல்ல நடவடிக்கைகளுக்குப் பயன் இல்லாமல் போய்விடுகிறது. சுகாதாரத்தை மேம்படுத்த அரசு எடுக்கும் இம்முயற்சி



2013 மார்ச் 25] [திரு. வெ. பொன்னுப்பாண்டி]

வெற்றிபெற, கூடுதலாக கிராமப்புற துப்புரவுப் பணியாளர்களை நியமிக்க வேண்டும். அதைப்போல் தெருவிளக்குகளைப் பராமரிக்க மின் வாரிய பணியாளர்களை நியமிக்க வேண்டும்.

மேலும், தற்போது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலும், வேறு எந்த நிதியிலும் கட்டடம் கட்ட ஒப்பந்ததாரர்கள் முன்வர மறுக்கிறார்கள். காரணம் கேட்டால், தற்போது விலைவாசி உயர்வு கட்டுப்படியாகவில்லை என்று சொல்கிறார்கள். எனவே, மாநிலம் முழுவதும் இதுபோன்ற நிலைமையைத் தவிர்த்திட புதிய விலைப்புள்ளிகளை உருவாக்கிட ஆவன செய்ய வேண்டும்.

மத்திய அரசின் வனக் கொள்கையால் மலைப் பகுதியையொட்டி வாழ்கின்ற மக்கள் கிராமப் பகுதிகளில் வாழமுடியாத நிலை உள்ளது. புதிய சாலைகள் அமைப்பதில் தொடங்கி, ஆடு, மாடு வளர்ப்பு வரை பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். தமிழக அரசு இதில் சிறப்புக் கவனம் செலுத்தி மலையோரக் கிராம மக்களைக் காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும்.

2013–2014 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் தென் மாவட்ட மக்களுடைய நீண்ட நாள் கனவு நிறைவேறும் வகையில், தென் மாவட்டங்களில் புதிய தொழில் மண்டலங்கள் உருவாக்கப்படும் என்ற அறிவிப்பு பெருத்த வரவேற்பைப் பெற்றுள்ளது. இதை உடனடியாக நிறைவேற்றும் வகையில், அதற்கான திட்டங்களைத் தொடங்க வேண்டும். மூடப்பட்டுள்ள அரசு நூற்பாலைகளைத் திறக்கவும், உரிய தொழிற்சாலைகளைத் தொடங்கிடவும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையில் கல்வித் துறைக்குக் கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதை வரவேற்கின்றோம். கிராமப்புறப் பள்ளிகளின் தரத்தை உயர்த்தவும், கழிப்பிட வசதிகளை ஓராண்டுக்குள் செயல்படுத்தத் திட்டமிடுவதும் வரவேற்புக்குரியது. அதேநேரத்தில், கிராமப்புறப் பள்ளிகள் பலவற்றில் மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைந்த அளவில் உள்ளது. இந்த எண்ணிக்கையை உயர்த்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வெ. பொன்னுப்பாண்டி] [2013 மார்ச் 25

*பிற்பகல் 1–25*

நமது முதல்வர் அவர்கள் தமிழகத்தை ஒரு சிறப்பான மாநிலமாக மாற்ற பெரு முயற்சி செய்து வருகிறார். சுகாதாரத் துறையில் பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வருகிறார். சுகாதாரத் துறையில் பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வருகின்ற அதேவேளையில், பல்வேறு அரசு மருத்துவமனைகளைத் தரம் உயர்த்துவதற்குப் பதிலாக தரம் குறைவது என்பது மக்கள் மத்தியில் வியப்பை ஏற்படுத்துகிறது. மக்கள் தொகை அடிப்படையில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தொடங்கிட வேண்டும்.

உயர் கல்வியில் முத்திரை பதிக்கும் நமது தமிழகத்தில் பல புதிய கல்லூரிகளை உருவாக்கி வருவது மாணவர்களுக்குப் பேருதவியாக உள்ள நிலையில், தமிழகத்தில் தொடக்கக் கல்வியில் முதன்மைக் கல்வி மாவட்டமாக விளங்கி வருகின்ற ஸ்ரீவில்லிபுத்தூர் கல்வி மாவட்டத்தில், அரசு கலைக் கல்லூரியோ அல்லது அரசு தொழில்நுட்பக் கல்லூரியோ அமைத்திட வேண்டும். கிராமப்புறங்களில் பல்வேறு அடிப்படை கட்டமைப்புப் பணிகளை உருவாக்குகின்ற வேளையில், பெரிதும் உதவியாக உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியினை மேலும் உயர்த்திட அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதை இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, அரசினுடைய நிதிநிலை அறிக்கையை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறோம் என்பதைத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி, உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

**திருமதி த. இந்திராகாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலை மகளும், அலை மகளும் ஒன்று சேர்ந்த திருமகளாய், எங்கள் ஸ்ரீரங்கத்து குலமகளாய், தமிழ்த் திருநாட்டின் திருவிளக்காய், பேரறிஞர் அண்ணாவின் தத்துவப் போர்வாளாய், புரட்சித் தலைவரின் வள்ளல் பண்பின் வடிவமாய், அறநெறிகள் புகட்டிய ஔவையாக, தொட்டில் குழந்தைத் திட்டம்மூலம் அருள்மழை பொழியும் அன்னை தெரேசாவாக, மனித நேயத்தில் மாணிக்கமாக, மாநில உரிமைகளுக்குப் போராடுவதில் வீரமிகு வேலுநாச்சியாராக, தொழிலாளர்களின் ஒளி விளக்காக, திராவிட வரலாற்றின் வீரத் தலைவியாக, இந்திய அரசியலின் இமயமாக,



2013 மார்ச் 25] [திருமதி த. இந்திராகாந்தி]

அனைத்திந்திய அரசியலுக்கே தலைமை தாங்கக்கூடிய *(மேசையைத் தட்டும் ஒலி)* தகுதிமிக்க தலைவியாகிய தங்களின் பொற்பாதம் பணிந்து, வணங்கி வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில் 2013–2014 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைமீது நன்றி தெரிவித்துப் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் என் நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன் தாயே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழினத் தலைவர், தமிழினத் தலைவர்' என்று தனக்குத் தானே பட்டம் சூட்டிக்கொண்டு, 'மக்கள் நலன், மக்கள் நலன்' என்றே சொல்லி, தன் மக்கள் நலன் ஒன்றை மட்டுமே மனதில்கொண்டு, தான் ஆட்சிக்கு வரும் பொழுதெல்லாம், தன் குடும்பம், தன் மகன், தன் மகள், பேரன், பேத்திகளுக்கென குடும்ப ஆட்சி நடத்தி, தமிழகத்தின் வாழ்வுரிமைகளைப் பறித்து, காவிரிப் பிரச்சினை, முல்லைப் பெரியாறு பிரச்சினை, ஈழத் தமிழர் பிரச்சினைகளில் இரட்டை வேடம் போட்டு ஏமாற்றி, *(மேசையைத் தட்டும் ஒலி)* இலட்சக்கணக்கான அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவித்த இலங்கைக்கும் . . .*(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்றுமில்லை. அவர் சப்ஜெக்ட்டுக்குள்தான் உரையாற்றப் போகிறார்.

**திருமதி த. இந்திராகாந்தி:** அதற்குத் துணை போன மத்திய அரசுக்கும், ஆதரவாகச் செயல்பட்ட மக்கள் விரோத தீயசக்தி, அப்பாவி தமிழினம் அழிக்கப்படுகின்ற பொழுது . . . *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள்.

**திருமதி த. இந்திராகாந்தி:** மத்திய அரசில் அங்கம் வகித்துக்கொண்டும் *(குறுக்கீடுகள்)* தமிழகத்தின் முதலமைச்சராகவும் இருந்த ** *(குறுக்கீடுகள்)* ஒப்புக்கு ஒரு கோபத்தை மத்திய அரசிடம் காட்டியிருந்தால்கூட . . . *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மிகச் சிறப்பாகப் பேசிக்கொண்டிருக்கிறார். அவர் பெயரைக் குறிப்பிடாமல் பேசுகிறார். அவர் யார் பெயரையாவது சொன்னாரா? (குறுக்கீடுகள்) அவர் யார் பெயரையும் குறிப்பிட்டுச் சொல்லாமல்தான் பேசிக்கொண்டிருக்கிறார். இதைத் தவறு என்று சொன்னால், எப்படிச் சொல்வது? 'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்ற பழமொழிக்கேற்ப நீங்கள் பேசிக்கொண்டிருந்தால் என்ன செய்வது? (குறுக்கீடுகள்) அவர் பெயரைச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி இந்திராகாந்தி, பேசி உரையை முடியுங்கள்.

**திருமதி த. இந்திராகாந்தி:** மத்தியில் அங்கம் வகித்தும், தமிழகத்தின் முதலமைச்சராகவும் இருந்தபோது ஒப்புக்கு ஒரு கோபத்தை மத்திய அரசிடம் காட்டியிருந்தால்கூட பரிதாபத்திற்குரிய பல்லாயிரக்கணக்கான ஈழத்தமிழர்கள் உயிர்களைக் காப்பாற்றியிருக்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பில் பெயர் இருக்கிறதா என்று பார்க்கிறேன். (குறுக்கீடுகள்) அவர் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. அவ்வாறு அவருடைய உரையில் பெயர் குறிப்பிட்டிருந்தால் (குறுக்கீடுகள்) பெயர் இல்லை. பெயர் குறிப்பிட்டுச் சொல்லியிருந்தால் எடுத்துவிடலாம். (குறுக்கீடுகள்) அவரது உரையில் பெயர் குறிப்பிட்டிருந்தால், நான் அதை எடுத்துவிடுகிறேன். உட்காருங்கள்.

பிற்பகல் 1–30

**திருமதி த. இந்திராகாந்தி:** 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் போரின்போது உண்ணாவிரதம் என்ற போர்வையில் சிற்றுண்டி சாப்பிட்டு விட்டு, (குறுக்கீடு) கின்னஸ் சாதனையாக மனைவி, துணைவியோடு மூன்று மணி நேரம் உண்ணாவிரதம் இருந்துவிட்டு, போர் நிறுத்தப்பட்டது என்று அவர்களை நம்ப வைத்து, பல்லாயிரக்கணக்கான தமிழர்களை. . . . (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான்தான் பெயர் இருந்தால் எடுத்துவிடுகிறேன் என்று சொல்லிவிட்டேனே. (குறுக்கீடுகள்)





இல்லை, பெயர் இருந்தால் நான் எடுத்துவிடுகிறேன் என்று சொல்லிவிட்டேனே. அப்புறம் என்ன? உட்காருங்கள். அவர் வேறு subject–ல்தான் பேசுகிறார். (குறுக்கீடுகள்) இல்லை, எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திருமதி த. இந்திராகாந்தி:** பல்லாயிரக்கணக்கான தமிழர்களைக் கொன்று குவிக்க காரணமாக இருந்துவிட்டு, திருடவும் வேண்டும், கூடவே தியாகி பட்டமும் வேண்டும் என்பதுபோல. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சக்கரபாணி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் வாய்ப்புத் தருகிறேன் என்று கூறியிருக்கிறேன். பெயர் குறிப்பிட்டிருந்தால் அவைக் குறிப்பில் இருந்து எடுத்துவிடுகிறேன். மேற்கொண்டும் அதைப் பற்றிப் பேசுவது சரியில்லை. (குறுக்கீடுகள்) இல்லை, அவர் வேறு subject–க்குப் போய்விட்டார். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்ன சொல்லுங்கள்? (குறுக்கீடுகள்) திருமதி இந்திராகாந்தி, ஒரு நிமிடம் உட்காருங்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இலங்கைத் தமிழர் பிரச்சினையில் எங்களுடைய தலைவர் துரோகம் செய்துவிட்டார் என்று சொன்னார். 1956 ஆம் ஆண்டு சிதம்பரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலே நடைபெற்ற பொதுக் குழுவிலே எங்களுடைய தலைவர் இலங்கைத் தமிழர்களுக்காகத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர். அதுமட்டுமல்ல, இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காகப் பல்வேறு பேரணிகள், பொதுக் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், பல்வேறு நிகழ்வுகளை நடத்திக் காட்டியவர் தலைவர் கலைஞர் அவர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சக்கரபாணி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் சொன்னது அவை நடவடிக்கைக் குறிப்பில் பதிவு செய்யப்பட்டது. உட்காருங்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** 1985–ல் டெசோ மாநாட்டை நடத்தி இலங்கைத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்தவர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சக்கரபாணி, உட்காருங்கள். திருமதி இந்திராகாந்தி பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

[2013 மார்ச் 25

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1956–லே இலங்கைத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்துப் பேசியவர்தான் உங்களுடைய தலைவர். ஆனால், இலங்கையிலே இருக்கிற தமிழர்கள் கொல்லப்படுவதற்குக் காரணமாக இருக்கிற ராஜ பக்சேவிடத்திலே பரிசுப் பொருட்களை வாங்குவதற்கு தன்னுடைய மகளை அனுப்பி வைத்திருப்பவரும் உங்களுடைய அதே தலைவர்தான் என்பதைத் தங்களின்மூலமாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொன்னதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் சொன்னதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி பேசுங்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே சட்டமன்றத்திலே 1992 ஆம் ஆண்டு இன்றைய முதல்வர் அவர்கள், வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களை இலங்கை அரசின் உதவியுடன் இந்திய அரசு கைது செய்ய வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றினார் இந்த மாமன்றத்திலே. அதேபோல. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் இலங்கைத் தமிழர் பிரச்சினையை குழப்ப முயற்சிக்கிறார். இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நீங்கள் தமிழக மக்களுக்கு இழைத்த துரோகத்தை நாங்கள் யாரும் சொல்லித்தான் மக்களுக்குத் தெரிய வேண்டிய அவசியம் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அத்தனை பேர்களுக்கும் அத்தனை விஷயங்களும் தெரியும். அதேபோல, 1956–ல் அண்ணா இருக்கின்றபோது எடுத்த நடவடிக்கையை குறிப்பிடுகின்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்றபொழுது இலங்கைத் தமிழர் பிரச்சினையில் உச்சகட்டப் பிரச்சினை, யுத்தம் நடந்தது, தமிழினம் அழிக்கப்பட்டது எல்லாம் நீங்கள் இங்கே ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்றபொழுதும், அதேபோல 2006–லிருந்து 2011–க்குள் நடந்த சம்பவத்தில்தான் தமிழினமே ஒட்டுமொத்தமாக அழிக்கப்பட்டது. அதேநேரத்திலே,



2013 மார்ச் 25] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

நீங்கள் மத்தியிலும் ஆட்சிப் பொறுப்பில் இருந்துகொண்டு இலங்கைத் தமிழர்கள் அழிவதற்கு மத்திய அரசிற்குத் துணை சென்றீர்கள். இந்தத் துரோகம், நீங்கள் தமிழினத்திற்குச் செய்திருக்கின்ற துரோகம்; மன்னிக்க முடியாத குற்றம். நீங்கள் எத்தனை டெசோ மாநாடு போட்டாலும் இந்தப் பாவத்தை போக்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சக்கரபாணி, வாய்ப்புக் கொடுத்தாகிவிட்டது. நீங்கள் திரும்பத் திரும்பப் பேசிக் கொண்டிருந்தால் எப்படி விவாதத்திற்குப் போவது? திருமதி த. இந்திராகாந்தி, நீங்கள் வேறு சப்ஜெக்டில் பேசுங்கள்.

**திருமதி த. இந்திராகாந்தி:** பத்தாண்டு காலமாக மத்திய அரசில் இடம் பெற்று திருடவும் வேண்டும், தனக்கு தியாகி பட்டமும் வேண்டும் என்பதைப்போல இன்றையதினம் காலாவதியாக இருக்கின்ற காங்கிரஸ் அரசில் இருந்து விலகல் நாடகத்தை நடத்தியவர்கள் இருக்கின்றார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சக்கரபாணி, நீங்கள் பேசியாகிவிட்டது, உட்காருங்கள். திருமதி இந்திராகாந்தி அடுத்து சப்ஜெக்ட்டுக்குப் போய்விட்டார்கள். (குறுக்கீடுகள்) திரும்பத் திரும்பப் பேசிக் கொண்டிருந்தால் எப்படி? நீங்கள் பேசியதைக் கேட்டோம் உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தாகிவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரும்பவும் நின்று கொண்டிருந்தால் எப்படி? பிறகு உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள்.

பிற்பகல் 1–35

**திருமதி த. இந்திராகாந்தி:** ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தான் ஆட்சிக்கு வந்தவுடன் 2011 ஆம் ஆண்டு, ஜுன் மாதம் சட்டமன்றத்தில் இனப் படுகொலை நடத்திய ராஜ பக்சே மீதும், இலங்கை அரசு மீதும் பொருளாதாரத் தடை விதிக்க வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டுவந்து துணிச்சலாக நிறைவேற்றினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

[திருமதி த. இந்திராகாந்தி] [2013 மார்ச் 25

எதிர்வந்த சோதனைகளையெல்லாம் சாதனைகளாக்கி, சாதனைகளையெல்லாம் சரித்திரங்களாக மாற்றி, ஏழையெளிய மக்களின் இதயத் துடிப்பாக, தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகச் செயல்படும் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில்தான், புரட்சிகளையும், புதுமைகளையும் புரிந்து அதன் வழியாக, தமிழக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, தமிழகம் இந்தியாவில், அனைத்திலும் முதலிடம் என்னும் வரலாற்றுப் புரட்சிக்கு, அல்லும் பகலும் அயராது உழைக்கும் ஒப்பற்ற தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள்.

2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு கூடுதல் நிதியோ, கூடுதல் ஒதுக்கீடோ, அவசரகால உதவிகளோ, எதைக் கேட்டாலும் செவிடன் காதில் ஊதிய சங்குபோல செவிசாய்க்காமல், தொடர்ந்து துரோகம் இழைத்துவரும் நிலையிலும், புதிய வரி விதிப்பு இல்லாமலும், நடைமுறையில் உள்ள வரி விதிப்பை உயர்த்தாமலும் கடந்த 2010–2011 ஆம் ஆண்டு, மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 2,728.69 கோடி ரூபாய் வருவாய்ப் பற்றாக்குறை இருந்த நிலையில், கடந்த இரண்டு நிதிநிலை அறிக்கைகளை வருவாய் உபரியோடு, மாண்புமிகு அம்மா அவர்கள் தனது அயராத முயற்சியாலும், நிருவாகத் திறமையாலும் வெற்றிகரமாகத் தாக்கல் செய்துள்ளதை மக்கள் மனதாரப் பாராட்டுகிறார்கள்.

2013–2014 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கடந்த நிதியாண்டின் திட்ட ஒதுக்கீடு ரூபாய் 28 ஆயிரம் கோடியிலிருந்து நடப்பு நிதியாண்டின் திட்ட ஒதுக்கீடு ரூபாய் 37 ஆயிரம் கோடியாக உயர்த்தி, அதில் முதன்மைத் துறைக்கு மட்டும் 20.12 சதவிகித அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் வாழ்வாதாரமான காவிரி நீரில் தமிழகத்திற்கான உரிமையை நிலைநாட்ட காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பின்படி 205 டி.எம்.சி. அடி தண்ணீரை கர்நாடகம் தர மறுத்து வந்ததையடுத்து, தன் உயிரையே பணயம் வைத்து 1993 ஆம் ஆண்டு 4 நாட்கள் உண்ணாநோன்பு இருந்து இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்துவதற்காகக் கண்காணிப்புக் குழு மற்றும் அமலாக்கக் குழு ஆகியவற்றை அமைக்கச் செய்து, காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிட உச்ச நீதிமன்றத்தின்மூலம் நடவடிக்கை எடுத்து, மத்திய அரசிதழில் வெளியிடச் செய்த மாண்புமிகு அம்மா அவர்களை விவசாயப் பெருங்குடி மக்கள் மட்டுமல்லாது, தமிழக மக்களும், வருங்காலச் சந்ததியினரும் நன்றியோடு நினைவில் கொள்ளும்வகையில், காலத்தால் அழிக்க முடியாத வரலாற்றுச் சிறப்பை உருவாக்கியது மாண்புமிகு அம்மா அவர்களுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும். *(மேசையைத் தட்டும் ஒலி)*



2013 மார்ச் 25] [திருமதி த. இந்திராகாந்தி]

விவசாயிகளின் நலன் காத்து அரணாக விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் 2013–2014 ஆம் நிதியாண்டில் வேளாண்மைத் துறைக்கு எப்போதும் இல்லாத அளவிற்கு ரூபாய் 5,189.15 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். பருவமழை பொய்த்ததாலும், காவிரியில் கர்நாடகம் தண்ணீரைத் தர மறுத்ததாலும் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள வறட்சி நிலைமையைக் கருத்தில்கொண்டு, சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களையும் வறட்சி மாவட்டங்களாக அறிவித்து பாதிக்கப்பட்ட பயிர்களுக்குண்டான நிவாரணத் தொகை ஏக்கருக்கு ரூபாய் 15 ஆயிரம் வழங்கியதோடு பயிர்க் காப்பீட்டுத் திட்டத்திற்கான விவசாயிகளின் பங்களிப்புத் தொகை முழுவதையும் அரசே ஏற்றுக்கொண்டு, காவிரி டெல்டா விவசாயிகளுக்கு 12 மணி நேரம் தடையில்லா மும்முனை மின்சாரம் வழங்க உத்தரவிட்டுள்ள மாண்புமிகு அம்மா அவர்களை தமிழக விவசாயப் பெருங்குடி மக்கள் வாழ்த்துகின்றனர், பாராட்டுகின்றனர்.

மேலும், வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு நில வரியை இரத்து செய்தும், மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 100 நாட்களாக இருந்த உச்சவரம்பை, 150 நாட்களாக உயர்த்தி அதற்குண்டான தினக் கூலியை ரூபாய் 132/–லிருந்து ரூபாய் 148/–ஆக உயர்த்திக் கொடுத்தும், சாதாரண மக்களின் வாழ்வையும் மலரச் செய்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். இந்தச் சிறப்புத் திட்டத்திற்காக இந்த நிதியாண்டில் மட்டும் ரூபாய் 541 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

[திருமதி த. இந்திராகாந்தி] [2013 மார்ச் 25

மேலும், மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 181 கோடி ரூபாய் செலவில் 15 ஆயிரம் பண்ணைக் குட்டைகள் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

பிற்பகல் 1–40

வேளாண்மைத் துறையில், விவசாயிகளின் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு, காவிரி டெல்டா பாசனப் பகுதிகளில் 1,517 கோடி ரூபாய் செலவில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

வேளாண் விளை பொருட்களைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ரூபாய் 20 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். காய்கறி விலையைக் கட்டுப்படுத்த நகர்ப்புறப் பகுதிகளில் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் திறக்கப்படும் என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவு மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

விவசாயிகளின் வளர்ச்சியை உயர்த்திட கூட்டுறவு அமைப்பு மிக முக்கியமான பங்கு வகிக்கிறது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் பயிர்க் கடனுக்கான இலக்கு, இந்த நிதியாண்டில் ரூபாய் 4,000 கோடியிலிருந்து ரூபாய் 4,500 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள் நல்லமுறையில் விவசாயிகளுக்குப் பயன் அளிக்கின்ற வகையில், இந்த ஆண்டு 22,532 கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தலை நான்கு கட்டங்களாக நடத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

என்னும் வள்ளுவனின் வாக்கிற்கிணங்க, ஔவையும், பாரதியும், பாரதிதாசனும் ஒருசேரக் கண்ட கல்விக் கனவை நனவாக்கும் வகையில், அனைவருக்கும் தரமான கல்வி கிடைத்திட, தேவையான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி,



2013 மார்ச் 25] [திருமதி த. இந்திராகாந்தி]

பள்ளிக் கல்வியில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்திய மாண்புமிகு அம்மா அவர்கள், கல்வித் துறையின் வளர்ச்சிக்கு அயராது பாடுபடுகின்றார்கள்.

2013–2014 ஆம் ஆண்டு 16,965.30 கோடி ரூபாயை, இதுவரை எந்தத் துறைக்கும் இல்லாத அளவிற்கு பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்துள்ளார்கள். 2011 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் 51,757 ஆசிரியர்களும், 7,275 ஆசிரியர் அல்லாத பணியாளர்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள்.

அனைவருக்கும் கல்வித் திட்டத்திற்கு, 700 கோடி ரூபாயும், தேசிய இடைநிலைக் கல்வித் திட்டத்திற்கு 366.57 கோடி ரூபாயும், நபார்டு நிதியுதவி திட்டங்களுக்கு 293 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்தும், 2,733 பள்ளிகள் பயன்பெறுகின்ற வகையிலே இந்த ஆண்டு அனைத்துப் பள்ளிகளுக்கும் 100 சதவிகித பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியுடன், கழிப்பறை வசதிகளும் கிடைத்திட 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும், முதல் பட்டதாரிகளுக்கு உண்டான கல்விக் கட்டணத்திற்கு விலக்கு அளிக்கும் திட்டத்தின்கீழ் கடந்த ஆண்டு ரூபாய் 518 கோடி ஒதுக்கப்பட்டதை நடப்பாண்டு 673 கோடியாக உயர்த்தி, மாண்புமிகு அம்மா அவர்கள் கல்வியில் சாதனை படைத்துள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்கும்போதெல்லாம் காவல் துறைக்கு உற்ற நண்பனாகச் செயல்பட்டு போக்குவரத்து வசதிகள், தளவாடங்கள் ஆகியவை வழங்கப்பட்டு காவல் துறை, தீயணைப்புத் துறை மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களுக்குப் படிகளை கணிசமாக உயர்த்தியும், 2013–2014 ஆம் நிதியாண்டில் காவல் துறைக்கு 4,706.17 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும், 17,138 காவலர்கள் மற்றும் 1,091 துணை ஆய்வாளர்கள், 1,005 தீயணைப்புப் பணியாளர்கள் மற்றும் 292 சிறைக் காவலர்கள் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்மூலம் தேர்வு செய்யப்படுவார்கள் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்துள்ளது, உள்ளபடியே நாட்டில் சட்டம்–ஒழுங்கு சீரமைக்கப்படுவதுடன், சாமானிய மக்களும், பெண்களும் எவ்வித அச்சமுமின்றி, சுதந்திரமாக இருக்க வழிவகை செய்துள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்கள் காவல் துறை, தீயணைப்புத் துறை மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கு 472.50 கோடி ரூபாய் செலவில் 36,000 காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் மற்றும் சிறைத் துறைப் பணியாளர்களுக்குச் சொந்த வீடு கட்டித் தரும் பொருட்டு, 'உங்கள் சொந்த இல்லம்' என்னும் பெருந்திட்டத்தின் மூலமாக காவல் துறைக்கு ஊக்கமும், ஆக்கமும் அளித்து வருகின்றார்கள். மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல் துறை மாநாட்டில் அவர்களது கோரிக்கைகளை ஏற்று 343 அறிவிப்புகளை உடனடியாக வெளியிட்டவர் ஒப்பற்ற தலைவி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

2013–2014 ஆம் நிதியாண்டில் சுற்றுலாத் துறைக்கு ரூபாய் 153.95 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, 'தமிழ்நாட்டிற்குச் செல்வோம் 2014' என்ற திட்டத்தின்கீழ் வளர்ச்சிப் பணிகளுக்கு, ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்தும், மாமல்லபுரத்தில் "உலகத் தரத்திலான கடல்வாழ் உயிரின காட்சியகம்" ரூ.250 கோடி செலவில் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளது வெளிநாட்டு சுற்றுலா பயணிகளிடத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. எனது தொகுதியைச் சார்ந்த பச்சைமலைப் பகுதியை பசுமை சுற்றுலாத் தலமாக அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு துறையூர் தொகுதி மக்களின் சார்பாக, எனது நெஞ்சார்ந்த நன்றியினை சொல்லிக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக ரூ.7,042 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். இது சென்ற ஆண்டைவிட 15.29 சதவிகிதம் கூடுதலாகும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி திராவிட, மலைவாழ் மாணவ, மாணவிகள் தங்கிப் பயிலும், 44 விடுதிகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்ட ரூ.35.04 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2013–2014 ஆம் ஆண்டு ரூ.349.30 கோடியாக இருந்த பழங்குடியினர் துணை திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை, 2013–2014 ஆம் ஆண்டு ரூ. 489.48 கோடியாக உயர்த்தி, ஆதி திராவிட, மலைவாழ் மக்களின் மனதில் மாண்புமிகு அம்மா அவர்கள் நீங்கா இடம் பெற்றுள்ளார்கள். பழங்குடியினர் வளர்ச்சிக்கான சிறப்புத்





திட்டத்தின்கீழ், நடப்பாண்டில் ஜமுனாமரத்தூர், கொல்லிமலை, ஆனைகட்டி, கல்வராயன் மலை, பச்சைமலை ஆகிய 5 மலைப் பகுதிகளில், பல்தொழில்நுட்பப் பயிற்சி நிலையங்கள் அமைக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. அந்த வகையில் எனது தொகுதியைச் சார்ந்த பச்சைமலை பகுதியில் பல்தொழில்நுட்பப் பயிற்சி நிலையம் அமைக்க ஆணையிட்டுள்ள மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது துறையூர் தொகுதி மக்களின் சார்பாக கோடானு கோடி நன்றி மலர்களைத் தங்களின் பொற்பாதங்களில் காணிக்கையாக்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண் இனத்தின் காவல் தெய்வமாய் விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்கள், பெண்ணினத்தை ஊக்குவிக்கும் வகையில், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு திட்டம், பல்வேறு திருமண நிதி உதவித் திட்டங்கள், விதவைகள் மற்றும் கைவிடப்பட்ட பெண்களுக்கான உதவித் திட்டங்கள், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், தொட்டில் குழந்தை திட்டம் போன்ற திட்டங்களுக்குக் கணிசமான அளவு நிதியை உயர்த்தி, வறுமையில் வாடும் பெண்களுக்கு விலையில்லா ஆடுகள், கறவை மாடுகள், இல்லத்தரசிகளுக்கு விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறி வழங்கிட இந்த ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.1,500 கோடி நிதி ஒதுக்கீடு செய்தும், பெண் கல்வியை ஊக்குவிக்கும் வகையில், திருமாங்கல்யத்திற்கு நான்கு கிராம் தங்கக் காசுடன், திருமண உதவித் தொகை வழங்கும் திட்டத்திற்கு இந்த ஆண்டு ரூ.750 கோடியும், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்திற்கு ரூ.105 கோடியும், பெண் குழந்தைகளுக்கான சிறப்பு நிதி உதவிக்காக ரூ.34.26 கோடியும், ஒதுக்கீடு செய்து மனிதர் குல மாணிக்கமாக, பெண்ணினத்தின் காவல் தெய்வமாக விளங்குகின்றார்கள்.

மகளிர் சுய உதவிக் குழுக்களில் அனைவரும் பயன்பெறும் வகையில் கடன் உதவி செய்து, கடன் உதவித் திட்டத்தின்கீழ் வரும் நிதியாண்டில் 6,000 கோடி ரூபாய் அளவிற்கு கடன் வழங்கப்பட்டு, பெண்களின் தனிப்பட்ட வருமானத்தில் உயர்வு கண்டுள்ள மாண்புமிகு அம்மா அவர்களுக்கு 5.56 இலட்சம் சுய உதவிக் குழுக்களும் நன்றி தெரிவித்துக்கொண்டுள்ளன.

[2013 மார்ச் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திருமதி த. இந்திராகாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்கால மின் தேவையைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் புதிய மின் திட்டங்களான, 660 மெகா வாட் எண்ணூர் விரிவாக்கத் திட்டம், இரண்டு 660 மெகா வாட் அலகுகள் கொண்ட எண்ணூர் சிறப்புப் பொருளாதாரத் திட்டம் போன்ற திட்டங்களுக்கு 21,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மின் துறையை புத்துயிர் பெறச் செய்துள்ளார்கள். இப்படி அனைத்துத் துறைகளுக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்து கிட்டத்தட்ட பல்வேறு துறைகளில் இரண்டு இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகளை வழங்கியுள்ளதைப் பாராட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையூர் தொகுதியில், போர்க்கால அடிப்படையில், மிகவும் அத்தியாவசியமான கீழே குறிப்பிட்டுள்ள பணிகளைச் செய்து தர வேண்டி மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து வேண்டுகிறேன்:

1) துறையூர் தொகுதியில் அரசு இருபாலர் கலைக் கல்லூரி அமைத்திட வேண்டுகிறேன்.

2) ஆத்தூர்–பெரம்பலூர் சாலை வரை புறவழிச் சாலை அமைத்திட வேண்டுகிறேன்.

3) துறையூர் சின்ன ஏரியைத் தூர் வாரி, புனரமைப்பு செய்ய வேண்டுகிறேன்.

4) துறையூர் காய்கறிச் சந்தை (Market) இடத்தை மாற்றித் தர பணிந்து வேண்டுகிறேன்.

5) அய்யாற்றின் குறுக்கே கங்காணிப்பட்டியில் பாலம் அமைத்துத் தர வேண்டுகிறேன்.

6) துறையூர்-பெரம்பலூர் சாலையை இணைக்கும் வகையில் காளிப்பட்டி முதல்சொரத்தூர் வழியாக புறவழிச் சாலை அமைக்க வேண்டுகிறேன்.



2013 மார்ச் 25] [திருமதி த. இந்திராகாந்தி]

7) உப்பிலியாபுரம் பேரூராட்சி பகுதியில் தீயணைப்பு நிலையம் அமைக்க பணிந்து வேண்டுகிறேன்.

8) துறையூர் பேருந்து நிலையத்தை இட நெருக்கடியின் காரணமாக புறவழிப்பகுதிக்கு மாற்றித்தர பணிந்து வேண்டுகிறேன்.

9) துறையூர் தொகுதி, புளியஞ்சோலை சுற்றுலாத் தலத்திற்கு மக்கள் வருகை அதிகம் உள்ளதாலும், எரகுடி பகுதியைச் சுற்றி சிறு சிறு குக்கிராமங்களில் மக்கள் அதிகம் வசிப்பதாலும், சட்டம் ஒழுங்கைக் காத்திட உப்பிலியாபுரம் காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட எரகுடி புறக்காவல் நிலையத்தை காவல் நிலையமாகத் தரம் உயர்த்திட பணிவுடன் வேண்டுகிறேன்.

10) பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவிகள் தங்கிப், பயில பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி அமைத்துக் கொடுக்க மிகவும் பணிந்து வேண்டுகிறேன்.

மேலும், எனது தொகுதியின் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றிக் கொடுத்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

பிற்பகல் 1–50

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலே காங்கிரஸ் கட்சியின் சார்பில் எனக்குப் பேச வாய்ப்பு கொடுத்தமைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், அன்பிற்குரிய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், உறுப்பினர்களுக்கும் நான் வாழ்த்துகளையும், நன்றியையும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். எனக்கு free-ஆகப் பேச வாய்ப்புத் தர வேண்டும்; 10 நிமிடங்கள் தரவேண்டும்.

அன்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாள், எனக்கு ஒரு மணி நேரம் பேசத் தாருங்கள், சில கருத்துகளைச் சொல்ல வேண்டும். மாற்றுக் கட்சியினரெல்லாம், நண்பர்களெல்லாம், தோழர்களெல்லாம் காங்கிரஸ் கட்சியை

விமர்சிக்கிறார்கள். எல்லோரும் விமர்சனம் செய்தாலும் என்னுடைய கருத்துகளைப் பதிவு செய்ய வேண்டிய பொறுப்பும், கடமையும் எனக்கு இருக்கிறது. ஜனநாயகத்திலே நான் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டு, உங்கள் மத்தியில் பேச வேண்டுமானால், give opportunity to me to explain all these things. இல்லையென்றால் எப்படி நான் என் கருத்தைப் பேசுவது? இதை முதற்கட்டமாக உங்களிடம் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அரசு இந்த நிதிநிலை அறிக்கையிலே வேளாண்மைக்கும், கல்விக்கும் வரியில்லா நிதிநிலை அறிக்கையைக் கொடுத்திருக்கிறது. இதை நான் பாராட்டுகிறேன். நல்ல திட்டங்கள் தீர்க்கதரிசனமாக, தமிழக மக்களின் வாழ்விற்காகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதை ஏற்றுக்கொள்ள வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. இவற்றையெல்லாம் வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமானால் நீங்கள் நேரம் தரமாட்டேனென்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுவதற்கு உங்களுக்கு 5 நிமிடங்கள்தான் ஒதுக்கப்பட்டுள்ளது.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** தயவுசெய்து அதிகமாக நேரம் தரவேண்டும். பாதிக்கப்பட்ட விவசாயப் பெருமக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென்று நல்ல திட்டங்களைக் கொடுத்திருக்கிறீர்கள். ஏக்கர் ஒன்றுக்கு காப்பீட்டுத் தொகையும் சேர்த்துதான் ரூ.15,000/– கொடுக்கப்பட்டிருக்கிறது. அத்தொகையை அதிகப்படுத்தி ரூ.20,000/– அல்லது ரூ.25,000/– என்று கொடுத்தால் அது விவசாயிகளுக்கு நன்மையைக் கொடுக்கும், அது வரவேற்கக்கூடியது என்பதையும் நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், எங்களுக்கு எதிர்பார்ப்பு அதிகமாக இருந்தது. இரண்டு ஆண்டுகள் சென்ற நிலையில், மூன்றாவது ஆண்டில் முக்கியமான பிரச்சினைகளை எடுத்து வைத்து, முக்கியமான நலனை நாங்கள் பெற்றுக்கொள்ள முடியுமா என்ற ஏக்கத்தோடு, விண்ணப்பத்தோடு, கோரிக்கையை உங்களிடம் பணிந்து சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே, இந்தப் பிரச்சினையைப் பற்றி நான் இந்த அவையிலே சொல்லியிருக்கிறேன். குளச்சலிலே வர்த்தகத் துறைமுகம்





வேண்டுமென்று ஏற்கெனவே கோரியிருந்தேன். தூத்துக்குடியில் தற்போது அறிவித்திருக்கிறீர்கள். அது மக்களுடைய நீண்டகாலத் தேவை. மக்களுக்கு இயற்கை அமைத்துக்கொடுத்த சிறந்த ஆழ்கடல் இங்கு இருக்கிறது. இதுபோல் இந்தியாவிலேயே வேறு எங்கும் இல்லை. குறிப்பாக, கொச்சியிலே . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

*__மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இந்தக் கருத்தைச் சொன்னார். அப்பொழுது, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இங்கே பதிலும் அளித்திருக்கின்றார்கள். குளச்சல் துறைமுகம் ஆழமான துறைமுகம்தான். அதில் எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் கிடையாது. வர்த்தகத் துறைமுகம் அமைப்பதற்கு தனியார் யாரும் முன்வரவில்லை. அங்கே ஒரு வர்த்தகத் துறைமுகத்தை அமைப்பதற்காக மத்திய அரசுக்கு மாநில அரசால் கடிதம் எழுதப்பட்டு, அதனை மத்திய அரசாங்கம் மறுத்துவிட்டது. இப்பொழுது மத்தியில் கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சராக, உறுப்பினர் அவர்களின் மரியாதைக்குரிய அன்புத் தலைவர் திரு. வாசன் அவர்கள் இருக்கிறார். அவரிடத்திலே நீங்கள் எடுத்துச் சொல்லி, அதற்குத் தேவையான நிதியை ஒதுக்கினால், மாண்புமிகு அம்மாவின் அரசு அங்கே வர்த்தகத் துறைமுகம் அமைக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குற்றமாகச் சொல்லவில்லை. இதை கடிதம்மூலமாக, சாட்சியங்கள்மூலமாக உங்களிடம் சமர்ப்பிக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன். உங்களுடைய முயற்சிக்கு நான் நன்றி சொல்கின்றேன். ஆனால், மத்தியில் எங்களுடைய தலைவர், பாசத்திற்குரிய தளபதி ஜி.கே. வாசன் அவர்கள் இருக்கிறார்கள். அங்கே, அவரிடம் நான் இதைக் கோரிக்கையாக வைத்தேன்.

[திரு. ஜே.ஜி. பிரின்ஸ்] [2013 மார்ச் 25

எந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமானாலும், எந்த project—ஐக் கொண்டுவர வேண்டுமானாலும், இந்த அரசால் முடியும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முடியும். அமைச்சர் பெருமக்களால் முடியும். நிச்சயமாக இதற்கான ஒரு கடிதத்தை மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்களுக்கு எழுதிவிட்டால்—நில ஆர்ஜிதம் செய்ய வேண்டிய பொறுப்பு மாநில அரசினுடையது, மத்திய அரசு இதைச் செய்ய முடியாது. Ground work complete—ஆகச் செய்ய வேண்டியது மாநில அரசுதான். அந்தப் பணியை நீங்கள் செய்வீர்களேயானால், அங்கே வர்த்தகத் துறைமுகம் அமைக்கக்கூடிய எல்லா வழிகளும் நிச்சயமாக இருக்கிறது என்பதை நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். வர்த்தகத் துறைமுகம் கொண்டுவருவது குறித்து பட்ஜெட்டில் இடம்பெறாமல் இருந்தால்கூட, இதைக் கொண்டுவரலாம் என்பதை இங்கே கோரிக்கையாக வைத்துக்கொள்ள விரும்புகிறேன். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசின் நிதி நிலைமை பற்றி மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும். ஏற்கெனவே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மத்திய அரசிடம் நிதி கேட்டு இதுவரை நிதியும் அவர்கள் வழங்கவில்லை. இந்தத் துறைமுகம் சிறப்பான துறைமுகம், வர்த்தகத் துறைமுகம் என்பதை யாரும் மறுக்கவில்லை. ஆனால், தமிழக அரசிடம் போதிய நிதி இல்லாத காரணத்தினால்தான், மைய அரசிடம் கேட்கப்பட்டது. ஆனால், மத்தியில் இருக்கின்ற கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். தமிழ்நாட்டின் மீது அக்கறை கொண்டு, இந்த வர்த்தகத் துறைமுகம் அமைப்பதற்குத் தேவையான நிதியை அவர் ஒதுக்கீடு செய்தால், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அங்கே வர்த்தகத் துறைமுகம் அமைப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடிக்கடி இந்தக் கேள்வியை எழுப்புவதன் காரணமாக, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, குளச்சல் துறைமுகத்தில் இயற்கை எரிவாயு முனையம் அமைப்பதற்கான சாத்தியக்



2013 மார்ச் 25] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

கூறுகளைத் தனியார்மூலம் ஆராய்ந்து வருகிறது. விவரங்கள் கிடைக்கப் பெற்றவுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் *1–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்கிறேன். ஆனால், சீக்கிரமாகப் பண்ணினால் எனக்கு ஒரு மதிப்பு இருக்கும். இந்த அரசுக்கும் மதிப்பு இருக்கும். அதற்காகத்தான் சொல்கிறேன். நீங்கள் கேட்டால், அதற்குரிய நிதியைக் கொடுப்பதற்கு, நிச்சயமாக எப்படியாவது, போராடியாவது பெற்றுக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். அந்தப் பெருமை இந்த அரசுக்குக் கிடைக்கும்; எனக்கும் கிடைக்கும் என்பதற்காக மீண்டும் வலியுறுத்துகிறேன்.

எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில், *34* பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. ஏற்கெனவே இந்த அவையில் சொல்லியிருக்கிறேன். இதுதான் கேட்க முடியும். ஒரு தொழில்நுட்பப் பூங்கா எங்களுக்குக் கொடுங்கள் என்று கேட்கிறேன். ஏனென்றால், படித்தவர்கள் தங்களுடைய பிள்ளைகளைப் படிக்க வைக்க, சொத்துகளை விற்று அனைத்தையும் அர்ப்பணித்து, படிக்க வைத்த பிள்ளைகள், தங்களுடைய பெற்றோர்களை நேசிப்பார்கள், பார்ப்பார்கள், தங்களுடைய வயோதிக நேரத்திலே அவர்கள் தங்களை நினைப்பார்கள் என்ற நினைப்பிலே படிக்க வைக்கிறார்கள். வேலை இல்லை. பிள்ளைகள் வெளிநாடுகளில் சென்றுதான் வேலை பார்க்க முடியும். இங்குகூட வேலையில்லாத ஓர் அவல நிலை இருக்கிறது. எத்தனையோ மாவட்டங்களில் ஆரம்பித்திருக்கிறீர்கள். எத்தனையோ திட்டங்களைக் கொண்டு வருகிறீர்கள். ஒரு தொழில்நுட்பப் பூங்கா எங்களுடைய மாவட்டத்திக்குத் தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்தியாவிலேயே சிறந்த இரப்பர் விளைவிக்கக்கூடிய மாவட்டம் எங்களுடைய மாவட்டம்தான்.

[திரு. ஜே.ஜி. பிரின்ஸ்] [2013 மார்ச் 25

நல்ல இரக இரப்பர் கிடைக்கக்கூடிய மாவட்டம் எங்களுடைய மாவட்டம். எங்களுடைய மாவட்டத்திற்கு ஓர் இரப்பர் தொழிற்சாலையைத் தாருங்கள்; இரப்பர் பூங்கா தாருங்கள். ஏற்கெனவே சென்ற அரசு 140 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்து, அதற்கு வாக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதை நடைமுறைப்படுத்தவில்லை. இந்த அரசாவது அதை . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, கன்னியாகுமரி மாவட்டத்தில் தொழிற்பூங்கா ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு அடுத்தபடியாக இரப்பர் தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு முறை கேள்வியாகக் கேட்கின்றபோது, கன்னியாகுமரி மாவட்டத்திலே குறைந்த அளவு இரப்பர் உற்பத்தி ஆகின்ற காரணத்தினால் கேரளாவிலிருந்துதான் அந்த இரப்பரைக் கொண்டு வரவேண்டிய நிலைமை இருக்கின்றது. மேலும், தொழில் முனைவோர் வருவார்களேயானால், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்று சொல்லியிருக்கின்றோம். அதுமட்டுமல்லாமல், நிதிநிலை அறிக்கையில் தெளிவாக மாண்புமிகு அம்மா அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதாவது, தென் மாவட்டங்களுக்கென்று புதிய தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கு புதிய சலுகைகள் அறிவிக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தொழில் முனைவோர் யாராவது முன் வந்தால் நிச்சயமாக உங்கள் பகுதியில் தொழிற்சாலை அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உறுதிபூண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நம்பிக்கையில்தான் உங்களிடம் கேட்கிறோம். எங்களது மாவட்டம் ஒரு வளமான மாவட்டமாக இருந்தது.



2013 மார்ச் 25] [திரு. ஜே.ஜி. பிரின்ஸ்]

ஆனால், இப்போது தண்ணீர்த் தட்டுப்பாடு உள்ளது. தண்ணீர் இல்லை. மழை நேரங்களிலே அணைகளிலே தண்ணீரைப் பெருக்குவது மிகவும் கஷ்டமான ஒன்று. ஏனென்றால் இப்போது அணைகளெல்லாம் தூர் வாராமல் இருக்கின்றன. தண்ணீர்க் கொள்ளளவு குறைந்து காணப்படுகிறது. குறிப்பாக, பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு போன்ற அணைகளும், 3,000–க்கும் மேற்பட்ட குளங்களும் இருக்கின்றன. அனைத்துமே தூர் நிரம்பிக் காணப்படுகின்ற காரணத்தினால் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களாலே பரிசீலிக்கப்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த அணைகளையெல்லாம் தூர் வார வேண்டுமென்ற ஓர் உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்கள். அந்த உத்தரவின் அடிப்படையிலே, பேச்சிப்பாறை அணை இந்த நிதியாண்டிலே தூர் வாரப்படும் என்பதை இந்த நேரத்திலே தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** இன்னும் 5 நிமிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான். உரையை முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டத்தில் 3,000 குளங்கள் இருக்கின்றன. ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பார்வைக்கு இதை வைத்திருக்கிறேன். அந்தக் குளங்களிலே விவசாயிகள் வண்டல் மண்ணை அள்ளிச்

[திரு. ஜே.ஜி. பிரின்ஸ்] [2013 மார்ச் 25

செல்வதற்கு உத்தரவு கொடுங்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. ஆகவேதான் இந்தக் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது குளங்களில் இருக்கின்ற வண்டல் மண்ணை அள்ளுவதற்கு விவசாயிகளுக்கு எந்தத் தடையும் இல்லை. விவசாயத்திற்குப் பயன்படுத்துவதற்கு இந்த மண்ணை அள்ளிக்கொள்வதற்கு எந்தத் தடையும் இல்லை. உடனடியாக விதிகள் எல்லாம் தளர்வு செய்யப்பட்டு, விலை இல்லாமல் எடுத்துக்கொள்ளச் சொல்லி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், யாரென்று சரியாகச் சொன்னால் உடனடியாக அந்த மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தொடர்பு கொண்டு அதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிற காரணத்தினால், கடல் நீர் உள் வாங்கிவிட்டது. ஆகவே, கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் எல்லாம் பாழாகக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. உப்பு நீர் கலந்து வருவதனால் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாத அவலநிலை இருக்கிறது. எனவே, போர்க்கால நடவடிக்கை எடுத்து, தண்ணீர்ப் பஞ்சத்தைத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கையை மாண்புமிகு அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு புதிய அணை கட்டுவதற்கு அதிகமான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. 100 டி.எம்.சி. தண்ணீர் கிடைக்கக்கூடிய ஒரு புதிய அணை பேச்சிப்பாறை அணைக்கு மேல் பகுதியிலே தச்சமலை இணைவு தடுப்பணையைக் கட்டினால் அது மிகவும் சிறப்பாக இருக்கும்.



2013 மார்ச் 25]

பிற்பகல் 2—00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. ஜே.ஜி. பிரின்ஸ், இரண்டு நிமிடங்களில் உங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** உடனே முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆழ்கடலில் மீன் பிடிக்கும் மீனவர்களுக்கு, ஒரு படகுக்கு 1,500 லிட்டர் டீசல் மாதம் ஒன்றுக்கு மானியமாகக் கொடுக்கப்படுகிறது. இது வரவேற்கக்கூடிய ஒன்று. இன்று இருக்கக்கூடிய சூழ்நிலையிலே அதிக அளவிலே ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கு மீனவர்களுக்குப் பயனளிக்கும்வகையில், 1,000 லிட்டர் டீசல் அதிகமாகக் கொடுத்தால், மிகவும் நன்றாக இருக்கும். அதை இந்த அரசு செய்யும் என்ற நம்பிக்கையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மீன் பதனிடும் பூங்கா நான் கேட்கிறேன். மீன் இறங்கும் தளம் அமைக்க வேண்டுமென்று ஏற்கெனவே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பார்வையில் வைத்திருக்கிறேன். குளச்சல், தேங்காய்ப்பட்டிணம் மீன்பிடி துறைமுகப் பணி கிடப்பில் போடப்பட்டுள்ளது. பணி இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உற்சாகமாகச் செயல்பட ஆசைப்படுகிறார். அதை நடைமுறைப்படுத்தவில்லை என்ற வருத்தத்தை நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அவைக்கு சரியான தகவலை தெரிவிக்க வேண்டுமென்று மீண்டும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மீன் இறங்கு தளம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னாலே, கன்னியாகுமரி மாவட்டத்திலே இனையம்புத்தன் துறை, சைமன் காலனி, குறும்பனை ஆகிய 3 இடங்களில் ஏறத்தாழ 7 கோடியே 17 இலட்சம் ரூபாய்க்கு டெண்டர் ஒப்பந்தங்கள் பெறப்பட்டு பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனை முடிந்தபிறகு, பணி ஆணை வழங்கப்பட்டு வேலை துவங்கப்படும். இதுவரை எந்த அரசும் செய்யாத சாதனையாக. மீன் வளத் துறைக்கு மட்டும்

[திரு. கே.ஏ. ஜெயபால்] [2013 மார்ச் 25

ஏறத்தாழ 500 கோடி ரூபாயை பெற்றுத் தந்திருக்கிற அரசுதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே குளச்சல், தேங்காய்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் சின்ன முட்டத்திற்கும் சேர்த்து ரூ.7 கோடியே 17 இலட்சமாக இருக்கிற அந்த இறங்கு தளத்தையும் சேர்த்து, மொத்தத்தில் சின்ன முட்டத்திற்கு மீன் ஏலக் கூடம், அபிவிருத்தி போன்றவற்றிற்காக மட்டும் ரூ.50 இலட்சம், அதையும் சேர்த்து, 266 கோடியே 34 இலட்சம் வழங்கிய அரசுதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், தமிழ்நாட்டில் 13 கடற்கரை மாவட்டங்கள் இருக்கின்றன. அதிலே கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மட்டும்தான் ஏறத்தாழ 60 சதவிகித நிதி சென்று கொண்டிருக்கிறது. இதை வழங்குபவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த மாமன்றத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், புதிய சப்ஜெக்ட்டுக்குப் போகாதீர்கள். நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். 29–3–2013 அன்று புனித வெள்ளி. நான் உட்பட அன்று தேவாலயத்திலே தொழுகைக்குச் செல்ல வேண்டும். கூட்டுறவுத் துறை சம்பந்தமான ஆணையம்தான் அந்தத் தேர்தலை நடத்துகிறது. நான் அதைத் தெரிந்தவன். ஆனால், முதல் கட்டத் தேர்தல் நாமினேஷன் தேதியை இன்னொரு நாள் மாற்றி வைத்தால் அது மிகவும் வரவேற்கக்கூடியது என்பதை நான் தங்கள் பணிவான கவனத்திற்கு வைக்க விரும்புகிறேன்.

1949 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம். ஏற்கெனவே இந்தப் பிரச்சினையால் விவசாயப் பெருமக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சுமார் 70 ஆயிரம் ஏக்கர் நிலத்தை இன்று சரியான அதிகாரத்தோடு அனுபவிக்க முடியாத பல்வேறு இடையூறுகள் ஏற்பட்டிருக்கின்றன. விவசாயப் பெருமக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.



2013 மார்ச் 25] [திரு. ஜே.ஜி. பிரின்ஸ்]

இதை சென்றமுறை அவையில் நான் பேசியபோது, ஒரு குழுவை நியமித்தார்கள். அந்தக் குழு அதனுடைய இறுதி அறிக்கையைச் சமர்ப்பிக்கவில்லை. விரைவில் குழு அந்த அறிக்கையைச் சமர்ப்பித்து, விவசாயிகளுக்குச் சாதகமான நிலையை ஏற்படுத்த வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தனியார் காடுகள் சம்பந்தமாக ஆய்வு செய்து, அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்க ஒரு குழுவை அமைத்து ஆணையிட்டு அந்தக் குழு இப்பொழுது ஆய்வு செய்து கொண்டிருக்கின்றது. குழுவினுடைய ஆய்வு அறிக்கை கிடைத்தவுடன் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், புது சப்ஜெக்ட்டுக்குப் போகாதீர்கள். நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** இன்னும் இரண்டு நிமிடங்கள் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நேரத்தைப் பாருங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** அரசுப் பேருந்துகள் இயக்க முடியாத பல இடங்கள் இருக்கின்றன. அந்தக் கிராமங்களுக்கு பஸ் போக முடியவில்லை. அந்த இடங்களுக்கெல்லாம் மினி பஸ் இயக்குவதற்கு புதிதாக அனுமதி வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், வேறொரு சந்தர்ப்பத்தில் பேசலாம்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (26–3–2013) செவ்வாய்க்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 2–04 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

[2013 மார்ச் 25

# 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*40. 2012 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (பள்ளிப் பேருந்துகளுக்கான ஒழுங்குமுறையும், கட்டுப்பாடும்) சிறப்பு விதிகள் உருவாக்கி உறுதி செய்யப்பட்டது குறித்து உள்(போ.வ.7) துறையின் 30–9–2012 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 727–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1988 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 59/1988) 212(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*41. சென்னையில் உள்ள ஸ்ரீ சாரதா மடத்திற்கு, யாதொரு வணிகரால் அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு விற்பனை செய்யப்படும் பொருட்களின் மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் 14–5–2012 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 63–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*42. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி1) துறையின் 2–7–2012 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 91–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*43. 2011–2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் நாற்பத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் [மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*



2013 மார்ச் 25]

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*45. 2013–2014 ஆம் ஆண்டிற்கான விரிவான மானியக் கோரிக்கை எண்கள் 1 முதல் 54 வரை மற்றும் வரவு–செலவுத் திட்ட வெளியீடுகள் எண்கள் 56 முதல் 59 வரை (58 புத்தகங்கள்).*

*46. 2013–2014 ஆம் ஆண்டிற்கான வருவாய் குறித்த விரிவான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள்.*

*47. 2013–2014 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை.*

*48. 2013–2014 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு – பகுதி–1.*

*49. 2013–2014 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு – பகுதி–2.*

*50. 2013–2014 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பின் இணைப்புகள்.*

*51. 2013–2014 ஆம் ஆண்டுத் திட்டம் (திட்டம்–வரவு செலவுத் திட்ட இணைப்பு) (2013–2014 ஆம் ஆண்டு விரிவான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளின் துணை வெளியீடு).*

*52. 2013–2014 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்களின் பட்டியல் (பகுதி–2 திட்டங்கள்).*

*53. 2013–2014 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட உரையின் இணைப்புகள்.*

*54. 2013–2014 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட விளக்க நூல்.*

*55. 2013–2014 ஆம் ஆண்டு செலவிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு.*

*56. 2013–2014 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்து மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)*

———————